# வணிகத்தளிர்
# VANIKATHTHALIR



## 2018 | தளிர்-16

யா/திருக்குடும்ப கன்னியர் மடம் - தேசிய பாடசாலை

J/HOLY FAMILY CONVENT - NATIONAL SCHOOL

HOLY FAMILY CONVENT
DATE
JAFFNA

# வணிகத்தளிர்

## வணிக மாணவர் ஒன்றியம்

## 2018 | தளிர் 16

J/HOLY FAMILY CONVENT
LIBRARY
DATE:-23.03.2018
M-51
NATIONAL SCHOOL JAFFNA

**யாழ்/திருக்குடும்ப கன்னியர் மடம்**

**தேசிய பாடசாலை**

யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்

வணிக மாணவர் ஒன்றியம்

## Vision

### தூரநோக்கு

சர்வதேச ரீதியில் ஆளுமைத்திறன்மிக்க

மாணவர்களை உருவாக்குதல்

## Mission

### இலட்சிய நோக்கு

வணிகத்துறை சார்ந்த அறிவினை வளர்க்கும் பரவச்
செய்யும் அனுபவக் களங்களின் வழி மாணவிகளின்
கல்வித்தர மேம்பாட்டினை உறுதிசெய்தல்

## வணிக மன்ற உறுப்பினர்கள்

**தலைவர்**

செல்வி மேரி பிரியங்கா அன்ரனிசில்வா

**உபதலைவர்**

செல்வி திவ்யா சகாயநாதன்

**செயலாளர்**

செல்வி தஸ்நெஸ் நிஸ்மி ஜஸ்ரின்

**உப செயலாளர்**

செல்வி ஜெனிபர் டெஸ்மன் ரமேஷ்

**பொருளாளர்**

செல்வி தரணிகா வீரசிங்கம்

**இதழாசிரியர்கள்**

செல்வி சர்மிகா ஆறுமுகதாஸ்

செல்வி ஜாக்சினி கலிஸ்ரஸ்

# வணிக கீதம்

போற்று முயர்திருக்குடும்பம் எனப்புகழ்
ஆற்றும் கன்னியரின்
ஏற்றமுறு மடம் ஈட்டும் வணிகமன்று
ஆக்கும் பணி வளர்க
ஆக்கும் பணி வளர்க.

நேற்று வளர் தளிர் ஏற்று மலர் மணம்
சேர்த்து எழில் மிகவே
ஊற்று வரப் பயன் தூக்கி நுகர்வுற
வீற்று மகிழ்வுறுவோம்.

கேற்று முயர் நெறி தேவன் கருணையால்
கீர்த்தி பெறு முறுதி
பீற்று வரப்பலம் ஊட்டி யெம் மண்ணிலே
பீடுற வாழ்வோமே.

# இதழின் உள்ளே...


❑ **நேர்காணல்**

1. பேராசிரியர் கு.மிகுந்தன் அவர்களுடனான நேர்காணல் 1

❑ **வணிகக்கல்வி**

2. வணிகமும் நிலைபேறான அபிவிருத்தியும் 7
3. பங்குச் சந்தையில் முதலிட ... 11
4. வணிக ஒழுங்கமைப்பு : கவனம் பெறவேண்டிய எண்ணக்கருக்கள் 14
5. முயற்சியாளர்களும் அரசும் 16
6. பங்குச் சந்தையின் விலைச் சுட்டிகள் 18
7. வணிகத்தில் அரச தலையீடும் பங்களிப்பும் 20
8. வணிகங்களின் வெற்றிக்கு தலைமைத்துவத்தின் பங்களிப்பு 23
9. வணிகத்தின் நவீன போக்குகளும் சமூகப்பொறுப்பும் 25
10. பொதியிடல் குறியீடுகள் 27
11. இன்றைய வணிகங்களில் விளம்பரங்கள் 32
12. குறுக்கெழுத்துப் புதிர் 34
13. அவசர தாலாட்டு 36

❑ **பொருளியல்**

14. நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் பரிணாமவளர்ச்சி 39
15. இலங்கையின் வரிமுறைமை 43
16. மத்திய வங்கியின் செயலாற்றம் 48
17. நாணயங்களை வெளியீடு செய்தல் 52
18. தேசிய வருமானக் கணக்கீட்டில் உற்பத்தி அணுகுமுறை 55
19. வங்கி முறைமையின் பணவாக்கத் தொழிற்பாடு 59
20. வரி மானியம், கட்டுப்பாட்டு விலைகள் -சந்தை சமனிலையில் ஏற்படுத்தும் தாக்கம் 64
21. சந்தைத் தோல்வியில் வெளிவாரி விளைவு 70
22. நிலையில்லா விலையாலே.... 74

❑ **கணக்கீடு**

23. கணக்கீட்டுப் பாட இறுதிப் பரீட்சைக்குத் தயாராவது எப்படி? 77
24. இலங்கை கணக்கீட்டு நியமம் - 37 ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்பு மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள் 80
25. இலாப நோக்கற்ற நிறுவனங்கள் 84
26. சம்பளப் பட்டியல் 87
27. பெறுமதி சேர் வரியுடனான கொடுக்கல் வாங்கல்களும் அவற்றுக்கான பதிவுகளும் 90
28. ஆதனம் பொறி மற்றும் உபகரண அசைவுக் கூற்று 95
29. காசுப் பாய்ச்சற் கூற்று (LKAS – 07) 98
30. இருப்புக் கட்டுப்பாடு 101
31. மேந்தலை உறிஞ்சல் / மேந்தலை உள்ளடக்கம் Over Head Absorption 105
32. கல்வியினால் உயர்வோம்! 110

❑ **தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம்**

33. Role of Software Agents in e-Commerce 113
34. வணிகத்தில் தொழில்நுட்பத்தினது தாக்கம் 116
35. பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் - 2017 118




# அதிபரின் சிந்தனையிலிருந்து ....

யா/திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை வணிக மன்றத்தினரால் வெளியிடப்படும் வணிகத்தளிரின் 16ஆவது தளிர் அரும்பச் செய்வது கண்டு ஆனந்தம் அடைகின்றேன்.

உயர்ந்த தம் அடைவுகளால் எங்கள் பாடசாலைக்கு பெருமை சேர்க்கின்ற வணிக மாணவர்களின் கல்வி மேம் பாட்டுக்கான வாய்ப்பாகவும் அவர்களின் செயல்திறனுக்கு சாட்சியாகவும் வணிகத்தளிர் அமைகின்றது.

விரைவாக வளர்ந்து வரும் அறிவுலகில் புதிய அறிவுகளுக் கான தேடல் அவசியமாகியுள்ளது. இந்த வகையில் நாட்டின் சமூக பொருளாதார மேம்பாட்டினை வளம்படுத்தவுள்ள எங்கள் வணிகத்துறை மாணவர்கள் போட்டி உலகமாக மாறிவரும் வணிகம் சார்ந்த தேடல்களையும் உத்திகளையும் தமதாக்கிக் கொள்ள வேண்டியுள்ளது. இந்தவகையில் இத்துறைசார் ஆக்கங்களை ஒன்று சேர்த்து அழகு மிளிர வடிவமைக்கும் மாணவ குழாத்தினருக்கும் விளக்கமளித்து வழிகாட்டிய பொறுப்பாசிரியருக்கும் மனமார்ந்த நன்றிகளைப் பகிர்வதோடு ஆண்டுதோறும் தளிர்விட்டு பெருவிருட்சமாக இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

**அருட்சகோதரி அன்ரனிற்றா மாற்கு,**
அதிபர்,
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்,
தேசிய பாடசாலை.



# வாழ்த்துச்செய்தி

யா/திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை வணிக மன்றத்தின் வெளியீடாக மலரும் 'வணிகத் தளிர்' சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

புதிய கல்வித் தேவைகளுக்கு அமைய போட்டியும் சவாலும் நிறைந்த எதிர்கால உலகுக்கு முகங்கொடுக்கக் கூடிய வகையில் மாணவர்களைத் தயாராக்கவேண்டியது பாடசாலைகளின்முக்கிய பொறுப்பாகும். இதற்கு பாடசாலைக் கல்வியோடு மட்டும் நின்றுவிடாது , இணைபாட விதானச் செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டியது கட்டாய தேவையாக உள்ளது. அந்தவகையில் இப்பாடசாலையின் வணிக மன்றத்தின் காத்திரமான முயற்சியாக 'வணிகத்தளிர்' அமையும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

எதிர்கால சமுதாயச் சிற்பிகளாக விளங்கும் மாணவர் களிடையே இலைமறை காய்களாக மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்கு நல்லதொரு களம் அமைத்து இவ்வரிய முயற்சியில் அயராது பாடுபடும் இப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களை மகிழ்வோடு பாராட்டுகின்றேன். அவர்களது பணி சிறக்க இறை ஆசியை வேண்டுகின்றேன்.

இனிவரும் காலங்களிலும் 'வணிகத் தளிர்' ஆழ வேர்விட்டு பரந்து கிளைபரப்பி வளர இறையாசி வேண்டி மகிழ்கின்றேன்.

**திரு, ந.தெய்வேந்திராஜா,**
வலயக் கல்விப் பணிப்பாளர்.



# வாழ்த்துச்செய்தி

யாழ். திருக்குடும்ப கன்னியர் மட வணிக மன்றத்தினரால் வருடம்தோறும் வெளியிடப்படும் இவ் வணிகத்தளிர் இன்றுடன் பதினாறு ஆண்டுகளைக் கடந்துள்ளது.

இப்பாடசாலை ஒரு 1AB பாடசாலையாக உள்ளபோதும் வணிக பாடங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத்தரும் ஒரு பாடசாலையாக விளங்குகின்றது. அத்துடன் வணிக போட்டிகள் போன்ற செயற்பாடுகளிலும் ஊக்கத்துடன் ஈடுபடுவது சிறப்பிற்குரியது.

இந்த பதினாறாவது வணிகத்தளிர் சிறப்புற வெளிவர உழைத்த மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர் மற்றும் ஏனையோர் என அனைவரையும் போற்றுவதோடு, இவ்விதழ் தொடர்ந்தும் பல்லாண்டு இடையூறுகளின்றி வெளிவர இறைவனை வேண்டுகின்றேன்.

**திருமதி வேழினி பாலேந்திரா,**
**உதவிக் கல்விப் பணிப்பாளர்.**



## மன்றப் பொறுப்பாசிரியரின் வாழ்த்து

அறிவுத்தேடல், தெளிவு, ஆக்கத்திறன் என்பவற்றின் வெளிப்பாடாக வணிகத்தளிரின் 16ஆவது இதழ் மலர்கின்றது. வணிகத்துறையானது எல்லையற்ற வாய்ப்புக்களை எமதாக்கி வளர்ச்சி காண்கின்றது. புத்தாக்கங்களுடன் வாழ்க்கைத்தர சமூக மேம்பாட்டில் வணிகத்தின் பங்கு அளப்பரியது.

உலகளாவிய வணிகத்தின் இன்றைய பாய்ச்சலானது, எமக்கான சமூகப் பொறுப்பினையும் உணர்த்தி நிற்கின்றது. 2017ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ள வணிகக் கல்விக்கான புதிய கலைத்திட்டமானது, புதியபுரிதலுக்கான எண்ணக்கருக்களுடன்மாணவர்மனப்பாங்கு, திறன்விருத்திக்கான ஏற்பாடுகளையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பொருண்மையிலிருந்து இதழுக்கான ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. எங்கள் மாணவர்களின் சுய சிந்தனை, எழுத்தாக்கம் என்பவற்றுக்கான களமாக அமையும். வணிகத்தளிருக்குத் துறைசார் ஆசிரியர்களின் ஆக்கங்கள், கல்வியியலாளரின் நேர்காணல் என்பன உரமளிக்கின்றன.

தளிரின் வரவுக்கான ஊக்கத்தினைத் தந்திட்ட எங்கள் அதிபர், உபஅதிபர், ஆசிச்செய்தி வழங்கிய யாழ் வலயக் கல்விப் பணிப் பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர் (தொழில்நுட்ப பாடங்கள்), வணிகத்துறை சார்ந்த ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இந்த ஆக்கப் பணியிலே அயராது உழைத்த மாணவர்களுக்கு எல்லையில்லாத என் அன்பு வாழ்த்துக்கள். வணிகத்தளிர் மேன்மேலும் வளர்ந்து பயன் நல்க எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**திருமதி கௌரி சண்முகலிங்கம்**
பொறுப்பாசிரியர்
வணிக மாணவர் ஒன்றியம்



# தலைவரின் உள்ளத்திலிருந்து...

யா/திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலையின் வணிகத்துறை மாணவர்களின் ஒன்றுபட்ட உழைப்பினால் உருவான இவ் வணிகத்தளிர் பதினாறாவது மலராக மாணவர் களுக்கு மிகவும் பயனுடைய அம்சங்களை உள்ளடக்கி வெளிவந் ததையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நவீன வசதிகளுடன் மாற்றமடைந்து வரும் இவ்வுலகில் வணிகத் துறையானது மிக முக்கிய இடம்பிடித்துள்ளது. மனிதனின் முழுமையான, வெற்றிகரமான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு வர்த்தகத் துறை முதன்மையானதாக விளங்குகின்றது. இவ்விரைவான வணிக உலகில் ஒவ்வொரு மாணவர்களும் திறமையுள்ளவர்களாகவும் சவால்களுக்கு முகம் கொடுப்பவராகவும் இருத்தல் வேண்டும். காலத்திற்கேற்ப எம்மை நாம் மாற்றமடையச் செய்ய வேண்டும். அதற்கேற்ப மாணவர் தம்மை தயார்படுத்திக் கொள்ள "வணிகத் தளிர்" உதவுமென நம்புகின்றேன்.

பல்வேறுபட்ட ஆக்கங்களினைத் தாங்கி மாணவர்களின் திறமையை வெளிப்படுத்தி நிற்கும் வணிகத்தளிரினை வெளிக் கொணர எம்மோடு துணைநின்ற அனைவருக்கும் எனது நன்றிகள்

மேலும் இம்மலரானது தொடர்ந்து சிறப்பாக வெளிவர மனதார வாழ்த்துகின்றேன்.

**செல்வி மேரி பிரியங்கா அன்ரனிசில்வா**
ஒன்றியத் தலைவர்



# செயலாளர் இதயத்திலிருந்து ...

யாழ். திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலையின் வணிகத்துறை மாணவர்களின் ஒன்றுபட்ட செயற்பாட்டினால் உருவான 16ஆவது மலரை மாணவர்களுக்கு மிகவும் பயன் உடைய அம்சங்களை உள்ளடக்கி தங்கள் கைகளில் தவழச் செய்வதை முன்னிட்டு செயலாளர் என்றரீதியில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

"மாற்றம் ஒன்றே மாறாதது" என்ற கூற்றுக்கிணங்க இன்று மிகவும் வேகமாக மாற்றமடைந்து வரும் வணிகமானது நவீன தொழில்நுட்பங்களுடன் கருவாகி சிசுவாகி மாபெரும் விந்தை புரியும் இன்றைய காலகட்டத்தில் மனிதர்களாகிய நாம் காலத்திற்கேற்ப எம் வாழ்வை உருவாக்குவது எம் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும். அந்தவகையில் இன்றையகால மாணவர்களை அவர்களது கல்வியில் வணிக அறிவை உருப்பெற வைக்கும் இலக்கை மனதில் கொண்டு எமது மன்றம் இத்தளிரை வெளியீடு செய்கின்றது.

பல்வேறுபட்ட ஆக்கங்களைத் தாங்கி மாணவர்களின் திறமையை வெளிப்படுத்தி நிற்கும் வணிகத்தளிரை வெளிக்கொணர எம்மோடு தோள்கொடுத்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**செல்வி தஸ்நெஸ் நிஸ்மி யஸ்ரின்,**
ஒன்றியச் செயலாளர்.



## இதழாசிரியரின் சிந்தனையிலிருந்து...



விரைந்து சுழன்று கொண்டிருக்கும் இப்பூமியில் ஓட்டப் பந்தயம் போல நகரும் மனித வாழ்க்கையில் யா/ திருக்குடும்ப கன்னியர் மட உயர்தர வணிக மாணவர் ஒன்றியத்தால் ஆண்டு தோறும் பிரசவிக்கப்படும் "வணிகத்தளிர்" எனும் இதழை இவ்வருடமும் உங்கள் கைகளில் தவழவிடுவதையிட்டு இதழ் ஆசிரியர்கள் என்றவகையில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

மாணவர்கள் வெறும் புத்தகப் பூச்சிகளாக கல்வியில் மாத்திரம் செயற்படாது தமது ஆளுமைகளை விருத்தி செய்யக்கூடிய பிற செயற்பாடுகளிலும் தமது திறமைகளை வெளிக்கொண்டு வரவேண்டியது தற்போதைய காலத்தில் கட்டாயமானதாகும். ஆகவே இதற்கான மிகச்சிறந்த களமாக இவ் "வணிகத்தளிர்" அமையும் என நாம் நம்புகின்றோம்.

இப்போட்டி உலகில் இந்நூலை சிறப்பாக வெளியிட வழிவகுத்த அதிபர் அவர்களுக்கும் எம்மோடு உழைத்த பொறுப்பாசிரியர் அவர்களுக்கும் ஆக்கங்களைத் தந்துதவிய ஆசிரியர், மாணவர்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**செல்வி சர்மிகா ஆறுமுகதாஸ்**
**செல்வி ஜாக்சினி கலிஸ்ரஸ்**
இதழாசிரியர்கள்,
வணிக மாணவர் ஒன்றியம்.

# எங்கள் அதிபர்




அருட்சகோதரி அன்ரனிற்றா மாற்கு B.A, P.G.Dip.in.Edu, SLPS 2.II

# யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் வணிக மாணவர் ஒன்றியம் - 2018



இடமிருந்து வலம் (இருப்பவர்கள்): திருமதி கௌரி சண்முகலிங்கம் (பொறுப்பாசிரியர்), செல்வி ய.தஸ்நேஸ் நிஸ்மி (செயலாளர்), அருட்சகோதரி அன்ரனிற்றா மாற்கு (அதிபர்), செல்வி அ.மேரிபிரியங்கா (தலைவர்), திருமதி பு.திருஞானசம்பந்தன் (உப அதிபர்)

இடமிருந்து வலம் (நிற்பவர்கள்) : செல்வி க.ஜாக்சினி (இதழாசிரியர்), செல்வி ச.திவ்யா (உப தலைவர்), செல்வி ஆ.சர்மிகா (இதழாசிரியர்), செல்வி வீ.தரணிகா (பொருளாளர்), செல்வி டெ.ஜெனிபர் (உப செயலாளர்)

## யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் வணிக மாணவர் - 2018 அணி



## யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் வணிக மாணவர் - 2019 அணி



# பேராசிரியர் கு.மிகுந்தன் B.Sc (Agriculture), M.Phil, Ph.D அவர்களுடனான நேர்காணல்



- பீடாதிபதி, உயர் பட்டப்படிப்புகள் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- விவசாய உயிரியல் பேராசிரியர்
- தேசிய விருதுகள் பெற்ற ஆய்வாளர்
- அறிவியலை சமுதாயமயப்படுத்தும் எழுத்தாளர்

***1. கல்விப்புலத்து உயர்ஆளுமையாக விளங்கும் தங்களின் உயர்வுக்கு உறுதுணை யானவை பற்றி அறிந்துகொள்ள விரும்புகின்றோம்.***

*சிறுவயதிலிருந்தே உயர்ந்தவர்களைப் பார்த்து இவ்வுலகில் நாமும் உயர்ந்து சாதிக்க வேண்டும் என எண்ணியது முதல் உந்துதலானது. தாயின் அரவணைப்பும் தந்தை மற்றும் சகோதரர்களின் அர்ப்பணிப்பும் இன்னொரு உந்துதலாயினும் தந்தையின் நேரிய வழிகாட்டலால் தான் பெறாத கல்வியில் தம்மகவு உயரவேண்டும் என இறுமாப்புக் கொண்டபோது அவருடைய விருப்பத்தை நிறைவேற்றச் செய்த விடாமுயற்சிகள் இத்துறையில் உயரவைத்தது. செய்யும் தொழிலே தெய்வம் என்பதற்கிணங்க செய்யும் தொழிலில் நேர்மையும், துணிவும், விடாமுயற்சியும் இன்னும் அனைவருக்கும் நாம் பயன்படவேண்டும் என்னும் நினைப்பும் உண்டானால் உலகில் சாதிப்பதற்கு தடையேதுமில்லை.*

***2. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தொழில்வழிகாட்டல் அலகின் பணிப்பாளராக விளங்கியிருந்தீர்கள். இந்த அனுபவத்தினடியாக பாடசாலை மட்டத்தில் எங்களுக்கான தொழில்வழிகாட்டல் சார்ந்த உங்களது ஆலோசனை என்ன?***

*பாடசாலை எம்மை நாம் செதுக்கிக்கொள்ள பல அரிய வாய்ப்புக்களை எமக்கு அள்ளித்தரும் அட்சயபாத்திரமாகும். தொழில்வழிகாட்டல் உண்மையிலேயே பாடசாலைகளிலேயே ஆரம்பிக்கப்படல் வேண்டும். தொழில்வழிகாட்டலின் ஆரம்பம் அன்னையும் அதன்பின்னர் தந்தையுமாவர், பின்னர் பாடசாலையில் நல்ல குருவின் வழிகாட்டல் கிடைக்கும் போது அனைவருமே இப்பேறு பெற்ற வர்களாவர். பலர் க.பொ.த சாதாரணதரத்தின் பின்னர் உயர்தரத்திற்கோ அன்றி பல்கலைக்கழகத்திற்கோ செல்வதற்கான வாய்ப்பினை இழந்துவிடுகின்றார்கள். ஒவ்வொருவரும் அவரவர்கட்குத் தேவையான திறன்களை வளர்த்துக்கொண்டால் தாங்கள் விரும்பும் துறையிலே சிறந்து விளங்க முடியும். வாய்ப்புக்கள் என்றுமே எம்மைத் தேடி வராது. நாம் தான் அதை நோக்கி முழுமூச்சாக முயற்சிக்க வேண்டும். பாடசாலை மட்டத்தில் தொழில் நிறுவனங்களின் அறிமுகமும் அதில் உள்ள வெவ்வேறு பணியிடங்களுக்கு சிறப்பாக உள்வாங்கக்கூடியதான செயன்முறைக் கல்வி முதன்மைப்படுத்தப்பட்டால் அனைத்து மாணவர்களுக்கும் தொழில் கிடைக்கக்கூடியதாக இருக்கும்.*

**3. வாழ்க்கைக்கான திட்டமிடல் கல்வி (Life planning Education) என இன்று முதன்மை பெறும் எண்ணக்கரு எங்கள் கல்விப்புலத்தில் நிலைபெற என்ன செய்ய வேண்டும்?**

இந்தக் கல்விமுறை மேலைத்தேய நாடுகளில் தற்போது சிறப்பாக நடைமுறைப் படுத்தப்படுகின்றது. ஆனால் எமது கல்விமுறையில் முக்கிய மாற்றமாக இந்த கல்வித்திட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். பெயரளவில் வாழ்க்கைக்கான திட்டமிடல் கல்வி எந்தப் பயனையும் தராது. பாகிஸ்தான் நாட்டில் நடைமுறையிலிருக்கும் கல்விமுறையை உதாரணப்படுத்தினால் இதனை விளங்கிக்கொள்வது இலகுவானதாகும். பேராசிரியர் ஓமர் முக்தர் என்பவர் தனது வர்த்தகத்துறை பட்டப்படிப்புக்கு வரும் 30 மாணவர்களை முதன் நாளன்றே அவர்களுக்கு விருப்பமான தொழில்துறையை சிறியளவில் ஆரம்பித்து விட்டு வகுப்புக்கு வர அழைக்கின்றார். வகுப்பில் அவரவர் எவ்வாறு தமது தொழில் துறையை முன்னேற்றுவது, விரிவு செய்வது அதில்வரும் பிரச்சனைகளை எவ்வாறு அணுகுவது என பலவற்றை கற்றுக் கொடுக்கின்றார். மாறாக மாணவர்கள் தாமாகவே எவ்வாறு முடிவுகளை எடுப்பது என அவர்களையே முடிவுகளெடுக்கத் தூண்டுகின்றார். கற்கை முழுமைபெற்று அனைவரும் பட்டதாரிகளாக மாறும்போது ஒவ்வொருவரும் அந்த தொழில்துறையின் உரிமையாளர்களாகவும் தமது தொழிற்றுறையை மேம்படுத்தும் அறிவையும் தேவையான திறன்களையும் கொண்டவர்களாக உயர்ந்திடுவர். தற்போது தனியார் துறையை தாமாக நிர்வகிக்கும் திறனைப் பெற வாழ்க்கைக்கான திட்டமிடல் கல்வி உதவியிருக்கின்றதல்லவா. இதனை நாம் பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தலாம். மாணவர்களை குழுக்களாகப் பிரித்து அவர்களின் விருப்புக்கேற்ப அரச தொழில், தனியார் தொழில் மற்றும் சொந்த தொழில் செய்பவர்களை மேலும் அத்துறையில் சிறந்து விளங்க இக்கல்விமுறை மாற்றியமைக்கப்படல் வேண்டும்.

**4. கல்வியும் தொழில்வழிகாட்டலும் சார்ந்து இனி வேண்டப்படும் அறிவு, திறன்கள் பற்றி எங்களுக்கு அறியத்தருவீர்களா?**

ஆசிரியரை மையப்படுத்தப்பட்ட கல்வி முறைமையில்(Teacher-centered learning) மாற்றமேற்படுத்தப்பட்டு தற்போது மாணவரை மையப்படுத்திய கல்விமுறை (Student-centered learning)அறிமுகப்படுத்தப்படுகின்றது. வளர்ந்துவரும் விஞ்ஞான தொழில்நுட்பத்தின் பயன்பாட்டினை நாம் முழுமையாகப் பெற்றுக்கொள்ள முயற்சிசெய்தால் தற்போது உலகம் ஒருவரினது கைகளுக்குள் சுருங்கிவிடுகின்றது. இலத்திரனியல் சாதனங்களின் கிடைதன்மையும் இணையத்தளத்தின் வரப்பிரசாதமும் மாணவர்களை உலகநடப்புக்கள் அனைத்தையும் இலகுவில் அறிய வாய்ப்பளித்திருக்கின்றது. அந்தவகையில் கல்வியில் தொழிற்றுறையை மையப்படுத்திய கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தி மாணவர்களை அந்த தொழிற்றுறைக்கு உள்வாங்க பயிற்றுவித்தால் அவர்களும் தாமாக சுயமாக இயங்கும் வல்லுநராக மாறிவிடுவார்கள். திறமையுள்ள ஆளணி பற்றாக்குறையை நாம் விரைந்து தீர்க்கவும் முடியும். வர்த்தகத்துறை மாணவர்களாகிய உங்களது வர்த்தகத்துறை உலகத்துடனான இணைப்பை மேம்படுத்திக்கொள்ள பாடசாலை வழிசெய்து கொடுக்குமாயின் அனைவருக்குமான சிறந்த தொழில் என்பது ஒரு பிரச்சனையாகவே இருக்காது. இதற்காக பழைய மாணவர் சங்கம், பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் என்பன ஒன்றிணைந்து முன்னுரிமை கொடுத்து சிறந்த திட்டங்களைத் தீட்டி அதனை நடைமுறைப்படுத்தினால் நிச்சயமாக இது சாத்தியமாகும்.

திறன்களில் வன்திறன் மற்றும் மென்திறன்கள் உண்டு. வன்திறன்களானவை அளவிடக்கூடியவை. நீங்கள் கற்கும் பாடங்கள் அவற்றிற்கான பரீட்சைகள் அதில் பெறப்படும் மதிப்பீட்டுப் புள்ளிகள் என்பன அளவிடக்கூடியனவையாகும். மாறாக மென்திறன்களானவை அளவிட முடியாதவை. ஒருவருடைய நடத்தை (Attitude), பழக்கவழக்கங்கள் (Behaviour) மற்றும் வெளித்தோற்றுகை (Personality) என்பன மென்திறன்களுள் (Soft Skills) அடக்கம்.

5. **சுயதொழில்வாண்மை சார்ந்த ஆலோசனைகளை அவ்வப்போது தொடர்பு சாதனங்களின் வழியாக நீங்கள் வழங்கி வருகின்றீர்கள். இந்தவகையில் வணிகத்துறை சார்ந்த எமக்கு நீங்கள் தரும் சுயதொழில்சார் ஆலோசனை என்ன?**

வர்த்தகத்துறை மாணவர்களான நீங்கள் ஒரு தொழிற்றுறையை ஆரம்பிக்க முன்னர் எந்தப் பொருளுக்கு அல்லது எந்த விடயத்திற்கு மக்கள் தேடியலைகின்றார்கள், எதனை உருவாக்கினால் மக்களிடம் குறிப்பாக கொள்வனவு செய்பவர்களிடம் வரவேற்பிருக்கும்? எந்தப் பொருளுக்கு அதிக கிராக்கி இருக்கின்றது என ஆய்வொன்றை மேற்கொள்ளுங்கள். எதனை உங்களால் செய்யமுடியும் என நினைக்கின்றீர்களோ அந்த தொழிற்றுறைய ஆரம்பிக்க முயற்சிசெய்யுங்கள். உங்கள் விருப்புக்கேற்ப தொழிற்றுறையை விரிவுபடுத்தி என்றோ ஒருநாள் அந்த தொழிற்றுறையில் கொடிகட்டிப் பறக்கும் பெரிய தொழில்முயற்சியாளராகப் பரிணமிப்பீர்கள்.

6. **பெண்முயற்சியாளர்கள் சார்பாக தங்களது கருத்து என்ன? அவர்கள் துணிந்து சுயதொழில் முயற்சிக்குள் ஈடுபடலாமா?**

பெண் முயற்சியாளர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படல் வேண்டும். பெண்களை பதுமைகளாக காட்சிப் பொருட்களாக நிறுத்துவதை விடுத்து பாரதி கண்ட புதுமைப் பெண்களாக மாற்றிக் காட்டுங்கள். மாற முயற்சி செய்யுங்கள். பெண்களிடமுள்ள திறமைகளை வளர்த்து அவர்களை சமூகத்தில் மிகவும் மதிப்புள்ள வேலை செய்பவர்களாக மாற்றவேண்டும். பெண்களால் முடியாதது எதுவுமில்லை என சாதித்தும் காட்டியிருக்கின்றார்கள். பெண்முயற்சியாளர்களை பயிற்றுவித்து அவர்களை சுயதொழில் முயற்சிக்கு ஊக்கமளிக்கவேண்டும். எமது பிரதேசத்தில் ஆண், பெண் பேதமின்றி தொழில் முயற்சிகளை முன்னெடுக்கும் போது நாம் நினைத்த மாற்றம் நிகழும். இப்பிரதேசத்தில் வேலைவாய்ப்பென்பது அதிகரிக்கும். எமது பிரதேசம் முன்னணி மாகாணமாக சிறந்து விளங்குவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுண்டு.

7. **பல்கலைக்கழகத்தில் வணிகத்துறை மாணவர்களது உயர்கல்வி மற்றும் உயர்பட்டப் படிப்புக்கான வாய்ப்புக்கள் எவை?**

வணிகத்துறை மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் வணிகத்துறையில் பட்டப் படிப்பினை மேற்கொள்ளலாம். முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா மற்றும் முதுமாணியினையும் கற்பதற்கு வாய்ப்புக்கள் உண்டு. இதனைவிட ஆராய்ச்சி செய்ய விரும்புபவர்கள் வர்த்தகத்தில் முதுமாணி மற்றும் கலாநிதிப்பட்டப் படிப்புகளையும் மேற்கொள்ளலாம். இவை தவிர தற்போது பாடசாலை ஆசிரியர்களுக்கான ஒரு வருட கற்கை நெறியும் முகாமைத்துவ கற்கைகள் மற்றும்

வணிகத்துறை பீடத்தில் உருவாக்கப்படுகின்றது. சுற்றுலாத்துறை கற்கைநெறியும் தற்போது ஆரம்பிப்பதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்ற அதே நேரத்தில் வணிகபாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கான மேற்படிப்புக்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே இருக்கின்றன. முயற்சியைக் கைவிடாதீர்கள், உங்களாலும் இப்பூமியில் உயர்ந்த நிலைக்கு வரமுடியும். முயற்சி திருவினையாக்கும்.

**8. பல்கலைக்கழக அனுமதி வாய்ப்பினைப் பெறமுடியாமல் போகும் மாணவர் களுக்கும்.இ ஏனையோருக்கும் கல்வி வாய்ப்புக்கள் வழங்கும் நோக்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்ட மனிதவள மேம்பாட்டு அலகு சார்ந்த செயற்பாடுகளை அறியத்தருவீர்களா?**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்திற்கோ அல்லது ஏனைய பல்கலைக்கழகங்களுக்கோ அனுமதி வாய்ப்பினைப் பெறமுடியாத மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலுள்ள மனிதவள மேம்பாட்டு அலகில் பலதரப்பட்ட கற்கை நெறிகளைக் கற்பதற்கு வாய்ப்புக்களுண்டு. பல்கலைக்கழங்களுக்கு தெரிவு செய்யப்படாத நிலையில் உங்களது வாழ்க்கைக்கான வேலையைப் பெற்றுக் கொள்வதற்காக இங்கே நடத்தப்படும் எளிய இலகுவான கல்வி நிச்சயம் உங்களில் மாற்றங்களை ஏற்படுத்த உதவியாக இருக்கும்.

**9. உயர்தர வகுப்பில் பயிலும் எங்களுக்கு வணிகதளிர் வழியாக நீங்கள் தரும் அறிவுரை என்ன?**

உங்கள் ஒவ்வொருவரிடமும் திறமைகள் பலவுண்டு. முதலில் அவற்றை இனங் காணுங்கள். நீங்கள் செய்ய நினைக்கும் விருப்பப்படும் காரியத்தில் முழுமையாக இறங்குங்கள். அது கல்வியாக இருக்கலாம், உயர்கல்வியாக இருக்கலாம், தொழில்துறையாக இருக்கலாம், இன்னும் கண்டுபிடிப்பாக இருக்கலாம்.

உங்களிடமுள்ள பலம் என்ன? பலவீனம் என்ன? உங்களுக்கான வாய்ப்புக்கள் எவை? எதிர்நோக்கும் சவால்கள் எவை? இவற்றைப் பற்றி ஆராய்ந்து எந்த விதத்திலும் பலம் நலிவடைந்து விடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். அதே நேரத்தில் பலவீனத்தை எண்ணிப் பாருங்கள். பலவீனம் என்பதற்குள் உங்களின் பலம் ஒளிந்திருக்கும். அவற்றைக் கண்டுபிடித்து ஏனைய பலவீனங்களையும் பலமாக மாற்றுங்கள். கிடைக்கின்ற வாய்ப்புக்களையும் பலமாக மாற்றுங்கள்.

வாழ்க்கையைத் திட்டமிடப் பழகுங்கள், அதற்கு முதல் இன்றைய நாளை திட்டமிடுங்கள். இந்த மாதத்தை திட்டமிடுங்கள். இந்த வருடத்தை திட்டமிடுங்கள். திட்டமிட்டதை செய்து முடிக்கப் பாருங்கள். குறித்த காலத்தில் செய்ய முடியவில்லையென்றால் ஏன் செய்ய முடியவில்லை என ஆராய்ந்து பாருங்கள். உங்களுக்குள் ஒளிந்திருக்கின்ற அந்த சக்தி வெளிப்படும்.

உங்களால் முடியும் என நீங்கள் நினைத்துவிட்டால் பின்பு எதனாலும் எவராலும் உங்களை அசைக்கவோ வீழ்த்தவோ முடியாது. வெற்றி மட்டும் உங்களை அரவணைத்துச் செல்லும். எல்லோருக்கும் என் அன்பான வாழ்த்துக்கள்!

# வணிகக்கல்வி



# வணிகமும் நிலைபேறான அபிவிருத்தியும்

திருமதி.கௌரி சண்முகலிங்கம்
B.Com, PG.Dip in Ed, M.Phil(Ed)
ஆசிரியர் - யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

*கடைசி மரம் வெட்டப்பட்ட பின், கடைசி மீன் பிடிக்கப்பட்ட பின், கடைசி ஆறு நஞ்சாக்கப் பட்ட பின்னர் தான் பணத்தை உண்ண முடியாது என்பதனை உணர்ந்து கொள்ளுவோம்*

**–சுதேச அமெரிக்கப் பழமொழி**

*கண்மூடித்தனமான அபிவிருத்திக் கொள்கைகள், வணிக உற்பத்தி நடைமுறைகள் தொடர்பான சுதேச அமெரிக்க மக்களின் எச்சரிக்கை அன்றே தெளிவாக வெளிப்பட்டது. அனுபவ பாடமாக இதனை இன்று உணர்ந்து கொண்டதன் பயனாய் நிலைபேறான அபிவிருத்தி என்ற எண்ணக்கரு எம் வசமாகியுள்ளது.*

*எதிர்கால சந்ததியினர் தமது தேவைகளை நிறைவு செய்வதனைப் பாதிக்காத வண்ணம் இன்றைய எமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்வது தான் நிலைபேறான அபிவிருத்தி என வரையறுப்பார் புறுண்ட்லான்ட்* (Brundtland) *அம்மையார். இந்தப் புதிய சிந்தனையை செயற்படுத்தும் திசையிலே வணிகமானது பிரதான பங்காளியாக இன்று உணரப்பட்டுள்ளது. நிலைபேறான அபிவிருத்தி சார்ந்த உலகளாவிய ஆய்வுகள் தொடக்கம் ஐக்கிய நாடுகளின் 2030ம் ஆண்டை மையமாகக் கொண்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்கு வரை வணிகத்தின் இந்தப் பாங்கு வலியுறுத்தப்படக் காணலாம்.*

*'நல்ல வணிகம் , நல்ல உலகம்' என்பது இன்றைய காலத்து மந்திரச் சொல்லாகி உள்ளது. இங்கு நல்ல வணிகம் என்பது மரபார்ந்த நிலையில் 'நிதி, இலாபம்' என்பதனடியாக கணிக்கப்பட்டமைக்கு மாறாக முழுதளாவிய மேம்பாட்டுக்கான வணிகம் எனப் பொருள் தருகின்றது.*

*முழுதளாவிய மேம்பாடு என்ற கருத்து நிலையானது*

- *பொருளாதாரம்*
- *சூழல்*
- *சமூகம்*

*என்ற மூன்று தூண்களினடியாக கட்டமைக்கப்படுகின்றது. இவை ஒன்றுடன் ஒன்று இரண்டறக் கலந்தவை. பல்துறை இணை நோக்கிலேயே இதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.*

இவற்றுக்கிடையிலான உறவு என்பது சிக்கலான நீண்ட வரலாறு கொண்டது. பொருளாதாரச் செயற்பாட்டிற்கும் சமூக நலத்திற்கும் இடையிலான உறவினை தலைமுறை தலைமுறையாகப் பேணும் போது தான் நிலைபேறான எதிர்காலம் எமக்கு சாத்தியமாகும்.

சுற்றுச்சூழலியல்ரீதியாக மட்டுப்படுத்தப்பட்ட இவ்வுலகில் எல்லோருக்கும் சமமான செல்வத்தினை மறு விநியோகம் செய்வதுடன் நிலைபேறான எதிர்காலத்துக்கான அடித்தளமாக இயற்கை வளங்களையும் சுற்றுச் சூழலையும் காக்க வேண்டியது அவசியமாகும். ஒன்றை ஒன்று பாதிக்காத வண்ணம் இவற்றிடையே சமநிலை காண்பது இன்றியமையாதது. இதனை அடைவதற்கு ஒருங்கிணைந்த செயற்பாடுகள் அவசியமாகும். உலகளாவிய நிலையிலும், உள்ளூர் நிலையிலும், இதனை உறுதிசெய்யும் நோக்கிலேயே புதிய நிலை பேறான அபிவிருத்திக்கான இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டன. 2015, செப்ரெம்பர் 15இல் கூடிய ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடுகள் முன்மொழிந்த 17 இலக்குகளும் எமது சிறப்பான கவனத்திற்குரியன.

## ❑ நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

- வறுமையின்மை
- பசியின்மை
- நல்ல ஆரோக்கியம்
- தரமான கல்வி
- பால் நிலை சமத்துவம்
- சுத்தமான நீர், சுகாதாரம்
- புதுப்பிக்கக்கூடிய, மலிவான சக்தி
- நல்ல முறையான வேலையும் பொருளாதார வளர்ச்சியும்
- தொழில், புத்தாக்கம், உட்கட்டமைப்பு வசதி
- சமமின்மையைக் குறைத்தல்
- நிலைபேறான நகரங்களும் சமூகங்களும்
- பொறுப்பான நுகர்வும் உற்பத்தியும்
- காலநிலை மாற்றத்தினைக் கட்டுப்படுத்தல்
- நீர்நிலைகளின் பாதுகாப்பு
- புவி சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல்
- அமைதி, சமாதானம், உறுதியான நிறுவனங்கள்
- உலகளாவிய பங்கேற்பு

இந்த இலக்குகளை எய்துவதில் பொருளாதார, சமூக, சூழல் என்கின்ற குவிமையங்கள் தொடர்பான தெளிவு எமக்கு அவசியமாகும்.

பொருளாதாரம் சார் நிலைபேறான அபிவிருத்தி சார்ந்து இன்று வரை கவனம் பெற்ற மொத்த தேசிய உற்பத்தி, வரையறையற்ற பொருளாதார வளர்ச்சி என்னும்

நிலைகளுக்கான மாற்றீடுகளை இன்று உலக நாடுகள் பரிசீலிக்கின்றன.

- குறைந்தளவு மூலப்பொருட்களை செறிவாகப் பயன்படுத்தும் உற்பத்தி
- குறைந்தளவு சக்திவலுவுடனான உற்பத்தி
- கூடியளவு சமூகப்பொறுப்பும், சமூக நீதியான உற்பத்தியும் விநியோகமும்

என்றவாறு புதிய போக்குகள் அமையவேண்டியுள்ளது.

இவ்வாறே சமூகம்சார் நிலைபேறான அபிவிருத்தி சார்ந்த சிறந்த சிந்தனையும் தற்காலத்தில் அதிகரிக்க காணலாம். எடுத்துக்காட்டாக

- எல்லா மக்களுக்கும் சம சந்தர்ப்பங்களைக் கொடுத்தல்
- அனைவரதும் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தல்
- பண்பாட்டு, மொழியியல், இனத்துவ பல்வகைமையை மதித்தலும் காத்தலும்

என்றவாறு வணிகத்தின் எல்லைகள் அகல வேண்டும்.

சுற்றுச்சூழல் சார் நிலைபேறான அபிவிருத்தி என்ற பொருண்மையும் இன்று வணிக உலகில் பெருமளவான முக்கியத்துவம் பெறுவதை காண முடிகின்றது. உதாரணமாக

- உயிர் பல்வகைமையைக் காத்தல்.
- இயற்கை வளங்களை வினைத்திறனாக பயன்படுத்துதல்.
- சூழல் நேயப்பொருட்களை உற்பத்தி செய்தல்.
- சுற்றுச்சூழல் மாசடைதலைக் குறைத்தல்.
- கழிவுப்பொருள் முகாமைத்துவத்தில் 3R, 4R, 5R என அறிமுகமாகியுள்ள எண்ணக் கருக்களை உரியவாறு நடைமுறைப்படுத்தல்.
- சூரிய சக்தி முதலாய மாற்று சக்திகளை பயன்படுத்தல்.
- சூழல் சார் சட்டங்களை மதித்து நடத்தல்.
- அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து சூழல் சார் விடயங்களில் ஈடுபடல்.

என்றவாறான சூழல் சார் சமூகப் பொறுப்புக்கள் வணிகங்களுக்கு நிறையவே உள்ளது. இந்த சமூகப் பொறுப்பினை உணர்ந்து கொண்டதன் விளைவாகவே பசுமை வணிகம் (Green bussiness) என்ற எண்ணக் கருவாக்கமும் அதனோடு இணைந்த செயற்பாடுகளும் வணிக உலகில் இன்று இடம் பிடித்துள்ளது.

> "உள்ளூர் அல்லது உலகளாவிய சூழலில் சமூகம் அல்லது
> பொருளாதாரத்தின் மீது எதிர் மறையான தாக்கத்தினை
> செலுத்தாத முற்போக்கான சிந்தனையாக"

பசுமை வணிகத்தை வரையறுக்கலாம்.

- தூய்மையான தரமான பொருட்களின் உற்பத்தியையும் நுகர்வினையும் மேம்படுத்தல்.

- இதன் வழி மக்களின் ஆரோக்கியத்தையும், சூழலின் ஆரோக்கியத்தையும் காத்தல்.


என்றவாறு ஒன்றிணைந்த இலக்கில் பசுமை வணிகம் இன்று வணிக உலகில் வேர்விட்டுள்ளதெனலாம்.

சமூகப் பொறுப்பான வணிகத்தின் இந்தப் புதிய போக்கானது அதன் எல்லைகளை விரிவாக்கியுள்ளது என்றே சொல்ல வேண்டும். போட்டி நிறைந்த வணிகச் சந்தையில் புத்தாக்கமாக அமைந்துள்ள பசுமை வணிகமானது இன்று அதிகளவான நுகர்வோரை தம்பால் ஈர்த்துள்ளமையை நாம் காண்கின்றோம். அறிவார்ந்த நுகர்வோரின் இந்த பசுமை வணிக ஆதரவினை நிலைபெறச் செய்யவும், விரிவாக்கவும் வேண்டும். இதற்கு அரச சட்டப் பாதுகாப்பும் ஏனைய துணை ஏற்பாடுகளும் அவசியமாகும்.

இந்த வகையில் சூழல்சார் நிலைபேறான அபிவிருத்தி, மற்றும் பசுமை வணிக மேம்பாடு என்பவற்றினை உள்ளடக்கிய அபிவிருத்தி முன்னுரிமைகளை இலங்கை அடையாளம் கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கை சுற்றாடல் அமைச்சினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள தேசிய பசுமை அறிக்கையிடல் முறை தொடக்கம், சூழலை நாசமாக்கும் பிளாஸ்ரிக் பொருட்களுக்கான தடை வரையிலான நல்ல செயற்பாடுகளை நாம் காணமுடிகின்றது. மேலும் பங்குதாரரின் துணையுடன் இத்தகைய பசுமை வணிகம் சார்ந்த செயற்பாடுகளை விரிவாக்க உள்ளமை பற்றிய இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைகள் எதிர்காலம் தொடர்பான நம்பிக்கையை தருகின்றது.

**உசாத்துணை :**


- Ottman, Jacquelyn (2017) - **The new rules of green marketing,** Taylort Francis
- United Nations (2017) - **The sustainable Development Goals Report,** Newyork
- **இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை** - 2016

# பங்குச் சந்தையில் முதலிட ...

செல்வி வீ. தரணிகா
2018 வர்த்தகப்பிரிவு

பணம் என்பது ஒரு வரையறுக்கப்பட்ட வளமாகும். அருமையாகக் காணப்படும் இப்பணமானது இன்றைய போட்டி நிறைந்த உலகில் மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றது. பல்வேறு மட்டத்திலான வருமானத்தினைப் பெறும் மக்கள் தமது அன்றாட செலவுகள் போக மிகுதியினை சேமிப்பாகப் பேணுகின்றனர். இச்சேமிப்பானது எதிர்காலத்தின் பல்வேறு பயன்பாடுகளுக்காக மக்களால் பேணப்பட்டு வருகின்றது.

ஆனால் இச் சேமிப்பானது ஒரு சிறந்த முதலீடாக மாற்றப்படுமிடத்து சேமிப்பிற்கு மேலதிகமாக பல்வேறுபட்ட வருவாயைப் பெறமுடியும் என்பது ஐயமின்றிய உண்மையாகும். சிறந்த முதலீடு என்பது "எதிர்காலத்தில் இலாபத்தினை எதிர்பார்த்து நிகழ்காலத்தில் பணரீதியான சொத்துக்கள் அல்லது பௌதிக ரீதியான சொத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக மக்களால் செலவிடப்படும் பணம் எனக் கூறலாம். பலர் எவ்வாறான முதலீட்டில் தமது பணத்தினை ஈடுபடுத்துவது என அறியாமல் தமக்கு கிடைக்க வேண்டிய எதிர்கால வருவாயை இழக்கின்றனர்.

பல முதலீட்டு மார்க்கங்கள் காணப்படுகின்ற போதிலும் "பங்குகளில் முதலிடுதல்" என்பது உயர்ந்த இலாபத்தை அடையக்கூடிய சிறந்த தெரிவுகளில் ஒன்றாகும். **பங்குகளின் மீது முதலீடு செய்தல் என்பது எதிர்காலத்தில் நிதியியல் இலாபத்தினை அடையும் எதிர்பார்ப்புடன், முதலீட்டாளர் ஒரு குறித்த பட்டியற்படுத்தப்பட்ட கம்பனியின் பங்குகளை இன்று கொள்வனவு செய்தல் என்று பொருள்படும்.** இங்கு "பங்கு" என்பது ஒரு குறித்த கம்பனியின் மொத்த மூலதனத்தின் மிகச்சிறிய அலகையும், பட்டியற்படுத்தப்பட்ட கம்பனி என்பது கொழும்புப் பங்குச்சந்தையில் தமது பங்குகளை மற்றும் தொகுதிக் கடன்களை கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு வாய்ப்பினையும் அனுமதியையும் பெற்றுக்கொண்ட வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகளாகக் கருத முடியும். இக் கம்பனிகள் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் 20 துறைகளின் கீழ் பட்டியற்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையானது இலங்கையின் பங்குச்சந்தையை இயக்கும் நிறுவனமாகும். இந் நிறுவனமானது 1982 ஆம் ஆண்டு 17ம் இலக்க கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு உத்தரவாதத்தால் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாகும்.

ஆனால் இப்பங்குச் சந்தையில் மக்களால் நேரடியாக முதலிட முடியாது. இதற்காகக் காணப்படும் பங்குத்தரகர் நிறுவனங்களினூடாக மாத்திரமே பங்குகளின் மேல் முதலிட முடியும். இப் பங்குத்தரகர் நிறுவனங்களின் எண்ணிக்கை 27 ஆகக் காணப்படுவதுடன் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் 15 பங்குத்தரகர் நிறுவனங்கள் அங்கத்துவ நிறுவனங்களாகவும் காணப்படுகின்றன. இந்த 27 பங்குத்தரகர் நிறுவனத்தினூடாக 299 பட்டியற்படுத்திய பொதுக்கம்பனிகளின் பங்குகளின் மீது மக்கள் அதாவது முதலீட்டாளர்கள் முதலிட முடியும்.

இப் பங்குத்தரகர் நிறுவனங்கள் முதலீட்டாளர் சார்பாக பல சேவைகளை வழங்குகின்றன. அதாவது பங்குச் சந்தை ஆய்வு நடவடிக்கையினை மேற்கொள்ளுதல் மற்றும் பங்குச் சந்தை கண்காணிப்பு அறிக்கையினை வழங்குதல் என்பவற்றினூடாக முதலீட்டாளர்களை வழிப்படுத்துதல் போன்ற சேவைகளை இப்பங்குத்தரகர் நிறுவனங்கள் வழங்குகின்றது. இதன்மூலம் பங்கு முதலீடு தொடர்பாக ஒரு சிறந்த விளக்கத்தை முதலீட்டாளர்கள் பெறமுடியும்.

கொழும்புப் பங்கு பரிவர்த்தனையில் பங்குகளைக் கொள்வனவு செய்ய விரும்பும் ஒருவர் கொழும்பு செல்லவேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் கிளைகள் நாடு முழுவதும் காணப்படுகின்றன. உதாரணமாக யாழ்ப்பாணத்திலுள்ள முதலீட்டாளர் கொழும்புப் பங்கு பரிவர்த்தனை யாழ்ப்பாணக் கிளையிலுள்ள பங்குத்தரகர் நிறுவனங்களான

- Asha Phillip securities LTD
- Bartleet Religare Securities LTD
- Capital Alliance Securities (Pvt) LTD
- Claridge Stockbrokers (Pvt) LTD
- Softlogic Stockbrokers (Pvt) LTD

போன்ற நிறுவனங்கள் ஊடாக பங்குகளின் மேல் முதலிட வாய்ப்புக் கிடைக்கின்றது. இங்கு முதலீட்டாளர் எனக் கூறப்படுபவர் ஒரு தனிநபராயிருக்கலாம். அரசாங்கமாயிருக்கலாம். ஒரு கம்பனியாகக்கூட இருக்கலாம். யாராக இருந்தாலும் பங்குச் சந்தையூடாக பங்குகளின் மேல் முதலிட முடியும்.

**முதலீட்டாளர் என்றரீதியில் ஒரு தனி நபரை கருத்திற் கொண்டால் அவர் எவ்வாறு ஒரு கம்பனியின் பங்குகளின் மேல் முதலிட முடியும் என்பதைப் பின்வருமாறு காட்ட முடியும்.**

### 1. மத்திய வைப்புத்திட்ட கணக்கொன்றை ஆரம்பித்தல்

இம் மத்திய வைப்புத்திட்டமானது கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பங்குகளைக் கொள்வனவு மற்றும் விற்பனை செய்யக்கூடிய முறையில் உருவாக்கப்பட்டதாகும். ஏனெனில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையானது முழுமையாக தன்னியக்கப்பட்டதாகும். இங்கு அனைத்துப் பிணைகளும் மத்திய வைப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்ட வேண்டியதோடு அனைத்தும் இலத்திரனியல் முறையினூடாக வியாபாரம் செய்யப்படுகின்றது.

**மத்திய வைப்புத்திட்ட கணக்கொன்றை ஆரம்பிக்கும் படிமுறைகள்**

பங்குத்தரகர் நிறுவனம் ஒன்றுடன் தொடர்பு கொள்ளுதல்

↓

மத்திய வைப்புத்திட்ட கணக்கை ஆரம்பிப்பதற்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்தல் (கணக்கு ஆரம்பித்தல் தொடர்பாக எவ்வித கட்டணமும் அறவிடப்படுவதில்லை)

↓

தேசிய அடையாள அட்டை / கடவுச்சீட்டு வழங்குவதோடு வதிவிடத்தை உறுதிப் படுத்துவதற்காக பாவனைப்பட்டியல் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

↓

மத்திய வைப்புத்திட்ட கணக்கு பங்குத்தரகரின் மூலம் செயற்படுத்தப்படும் கணக்குத் தொடர்பான மாற்றங்களும் பங்குதரகர்களூடாகவே அனுப்பப்படுதல் வேண்டும்.

**2. மத்திய வைப்புத்திட்டக் கணக்கு செயற்படத் தொடங்கியதன் பின் பங்குகளின் மேல் முதலீட்டை மேற்கொள்ள முடியும்.**

இவ்வாறு பங்குகளின் மேல் முதலிடுவதால் முதலீட்டாளருக்குக் கிடைக்கும் நன்மைகள்

- பங்குலாபம் - சாதாரண பங்குகளுக்கு வழங்கப்படும். ஆனால் இது நிச்சயமற்ற இலாபம் ஆகும்.
- மூலதனலாபம் - பங்குகளைக் கொள்வனவு செய்த விலையை விட பங்குகளின் விற்பனை விலை அதிகமாகும் போது கிடைக்கும் இலாபம்
- வாக்களிக்கும் உரிமை - ஓர் பங்குதாரராக கம்பனியின் தீர்மானங்களில் பங்கு கொள்வதற்கான உரிமை
- உரிமைப்பங்கு வழங்கல் - ஏற்கனவே கம்பனியின் பங்குதாரராக உள்ளவருக்கு சலுகை அடிப்படையில் பங்கினை வழங்கும் முறையாகும்.
- திரவத்தன்மை - பங்குதாரர்கள் எந் நேரத்திலும் தம் பங்குகளை முழுமையாக அல்லது பகுதியாக விற்றுப் பணத்தைப் பெறலாம்.
- மூலதனலாபம் வரிவிலக்கிற்கு உட்பட்டது.
- சிலசமயங்களில் பங்குகளை வங்கிக் கடன்களுக்கு எதிரான பிணையாகப் பயன் படுத்தலாம்.
- பணவீக்கச் சூழலில் பங்கு முதலீடானது ஒரு சிறந்த முதலீட்டு மார்க்கமாகும். பங்குகளின் விலை அதிகரிக்கும்போது பணவீக்கப் பாதிப்புக்களிலிருந்து முதலீட்டாளர்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

ஆகவே மத்திய வைப்புத்திட்டக் கணக்கு ஒன்றை ஆரம்பித்ததன் பின் பங்குகளைக் கொள்வனவு விற்பனை செய்யும் நடவடிக்கைகளை பங்குத்தரகர் நிறுவனம் மூலம் மேற்கொள்ள முடியும். எனவே ஒரு சிறந்த முதலீட்டாளர் என்றரீதியில் தர்க்க ரீதியாக சிந்தித்து எமது முதலீட்டை மேற்கொள்ளுதல் அனைத்து முதலீட்டாளரினதும் தலையாய கடமையாகும்.

**உசாத்துணைகள்**

- www.cse.lk
- CSE கையேடு

# வணிக ஒழுங்கமைப்பு : கவனம் பெறவேண்டிய எண்ணக்கருக்கள்

செல்வி ச.சாதனா
2018 வர்த்தகப்பிரிவு

நிறுவனம் ஒன்று தனது நோக்கத்தை செயற்திறனுடனும் பயனுறுதியுடனும் அடைந்துகொள்ள நிறுவன அங்கத்தவர்களிடையே வளங்களைப் பகிர்தல், அதிகாரங் களைக் கையளித்தல், வேலையைப் பகிர்தல் போன்ற செயன்முறைகளை உள்ளடக்கிய கருமம் ஒழுங்கமைத்தலாகும்.

நிறுவனமானது சிறந்த ஒழுங்கமைப்புக்காக சில எண்ணக்கருக்களை கருத்தில் கொள்ள வேண்டும். அவ்வாறான சில எண்ணக்கருக்கள் வருமாறு.

**❑ கட்டளையின் ஒரினத்தன்மை**

ஓர் ஊழியருக்கு ஒரு செயற்பாடு தொடர்பான கட்டளை ஒருவரிடமிருந்து மட்டும் பிறப்பிக்கப்பட வேண்டும் என்பதும், அந்த ஊழியர் மேலதிகாரிக்கு மட்டும் பொறுப்புக்கூறல் வேண்டும் என்பதுவே இதுவாகும்.

**❑ கட்டளைச் சங்கிலி**

நிறுவனத்தில் உயர்மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரை சகல ஊழியரையும் உள்ளடக்கி அதிகாரம் பொறுப்பு என்பன குறைந்து செல்லும் வகையில் அமையும் செயன்முறை இதுவாகும்.

**❑ அதிகாரம்**

ஒரு பதவிக்குரிய பணியை நிறைவேற்ற சட்ட ரீதியான கட்டளையிடக்கூடிய உரிமை; இதனை இன்னொருவருக்குக் கையளிக்க முடியும்.

**❑ அதிகார கையளிப்பு**

உயர் மட்டத்திலுள்ள அதிகாரத்தை குறித்த பணியை நிறைவேற்றுவதற்காக கீழ்மட்ட ஊழியர்களிற்கு பகிர்ந்தளித்தல் அதிகார கையளிப்பு எனப்படும். இது அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட முறைக்கு அமைய இரண்டு வகைப்படும்.

1. அதிகாரப் பன்முகப்படுத்தல் :
   தீர்மானம் எடுப்பதற்கான அதிகாரம் உயர்மட்ட முகாமை, கீழ்மட்ட முகாமை வரை ஒப்படைக்கப்பட்டிருத்தல்.
2. அதிகார மையப்படுத்தல் :
   தீர்மானம் எடுப்பதற்கான சகல அதிகாரங்களும் உயர்மட்ட முகாமையிடம் கையளிக்கப்பட்டிருத்தல்.

### ❑ பொறுப்பு

*வழங்கப்பட்ட பணி திருப்தியாக நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதே பொறுப்பு. இது அதிகாரத்தின் மூலம் ஏற்படும்.*

### ❑ பதிலளிக்கும் பொறுப்பு

மேலிருந்து கீழ்நோக்கி காணப்படும் பொறுப்பை நிறைவேற்றியது தொடர்பாக மேற்கொள்ளும் செயற்பாடு.

### ❑ கணக்களி தன்மை

*ஊழியர்கள் தமக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்கள், கடமைகளை முறையாக நிறைவேற்றியமை தொடர்பாக தமது மேலதிகாரிக்கு பதில் கூறவேண்டிய தன்மை இதுவாகும்.*

### ❑ கட்டுப்பாட்டு விசாலம்

ஒரு முகாமையாளரால் மேற்பார்வை செய்யக்கூடிய ஊழியர் எண்ணிக்கை அல்லது முகாமையாளருக்கு நேரடியாக அறிக்கை சமர்ப்பிக்கக்கூடிய ஊழியர்களின் எண்ணிக்கையை இது வரையறுக்கும், இது இரண்டு வகைப்படும்.

1. விரிந்த கட்டுப்பாட்டு விசாலம் :
   *ஒரு முகாமையாளரால் மேற்பார்வை செய்ய வேண்டிய ஊழியர்கள் அதிகளவு காணப்படும் நிலை.*
2. குறுகிய கட்டுப்பாட்டு விசாலம் :
   *ஒரு முகாமையாளரால் மேற்பார்வை செய்ய வேண்டிய ஊழியர்கள் குறைந்தளவு காணப்படும் நிலை.*

### ❑ பதவி வழி வரிசை

மேலிருந்து கீழ்நோக்கிக் காணப்படும் பொறுப்பை நிறைவேற்றியது தொடர்பாக மேற்கொள்ளும் செயற்பாடு.

### ❑ வலு

*தனி ஒருவரது பதவிக்குக் கிடைக்கும் முறையான அதிகாரமும் அதற்கு மேலதிகமாக வேறு கருமங்களை மேற்கொள்ள பல்வேறு வழிகளில் கிடைக்கும் திறனையும் சேர்த்தல் வலு ஆகும்.*

**உசாத்துணைகள்**


- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி - வணிகக்கல்வி
- ஜெகத் பண்டார நாயக்க - வணிகக்கல்வி




# முயற்சியாளர்களும் அரசும்

செல்வி இ.தனுசியா
2018 வர்த்தகப்பிரிவு

முயற்சியாண்மை என்பது அபாயத்தை எதிர்பார்த்து பொருட்கள் சேவைகள் உற்பத்தி தொடர்பில் தீர்மானம் எடுப்பதும் உற்பத்திக் கருமங்களை ஒழுங்குபடுத்துவதும் அவற்றை செயற்படுத்துவதுமாகும். முயற்சியாண்மையை வணிக ஆய்வாளர்கள் பல்வேறு விதமாக வரையறுத்துள்ளனர். பொதுவாக முயற்சியாண்மை என்பது வணிக வாய்ப்புக்களை இனங்கண்டு ஆபத்துக்களுக்கு முகம் கொடுத்து மனித தேவைகளையும் விருப்பங்களையும் திருப்தி செய்வதற்காக காலம், செல்வம், திறமை போன்றவற்றை ஈடுபடுத்தி போட்டியான உலகில் புதியன படைத்து நாட்டின் தேசிய உற்பத்திக்கு பெறுமதியைச் சேர்த்தலும் நிலவுகின்ற பொருளாதார முறையினுள் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும் பங்கு செய்தலும் ஆகும்.

முயற்சியாண்மையில் ஈடுபடும் முயற்சியாளர்கள் பாரிய நட்ட அச்சத்தை எதிர் நோக்குகின்றனர். ஆதலால் அவர்கள் தமது நிதி வளத்தில் போதிய கவனம் செலுத்த வேண்டும். இதற்காக அவர்கள் நிதி நோக்கத்தை உருவாக்கல், வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தல், வருமான செலவினை மதிப்பீடு செய்தல், காசுப் பாய்ச்சலை எதிர்வுகூறல், ஆரம்ப கிரயங்கள், தொழிற்பாட்டு செலவுகள் போன்றவற்றைக் கணித்தல் வேண்டும்.

இன்று ஒரு நாட்டில் முயற்சியாண்மையின் உருவாக்கத்திற்கு அல்லது அபிவிருத்திக்கு அவசியமான காரணிகளாக விருத்தியடைந்த நிதிச் சந்தை காணப்படுதல், மேம்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படல், நாட்டில் ஏற்றுகொள்ளக்கூடிய ஒரு சட்ட ஒழுங்கமைப்பு காணப்படல் என்பன அவசியமாகும்.

தற்காலத்தில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் அரசாங்கமானது முயற்சி யாளர்களுக்கு பெரும் அளவு முக்கியத்துவம் வழங்குகின்றது. காரணம் அரசாங்க வேலைவாய்ப்புக்கள் குறைவாகக் காணப்படுவதால் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தி அவர்கள் மூலம் சமூகத்தில் வாழும் மக்களுக்கு பல்வேறு விதமான வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியும் என அரசாங்கம் நம்புகின்றது.

அதிலும் சிறுவணிக முயற்சியாளர்களுக்கு அரசாங்கம் பல்வேறு விதமான சேவைகளை வழங்குகின்றது. குறிப்பாக ஆலோசனை சேவை, சந்தைப்படுத்தல் சேவை, தொழில்நுட்ப சேவை, நிதி வசதி சேவை, உட்கட்டமைப்பு வசதி சேவை போன்றவற்றை இங்கு குறிப்பிடலாம்.

ஒரு முயற்சியாளர் தமது வணிக செயற்பாட்டை எவ்விதம் கொண்டு நடத்தலாம் யாரிடம் இருந்து உதவி பெறலாம் போன்ற பல்வேறு விடயங்களை ஆலோசனை சேவை மூலம் பெறமுடியும். இவ்வாறான ஆலோசனை சேவையை ஒரு நிறுவனம்

கைத்தொழில்நுட்ப நிறுவனம் ஏற்றுமதி அபிவிருத்தி சபை , இலங்கை தரப்படுத்தல் நிறுவனம் என்பவற்றில் இருந்து பெறமுடியும்.

முயற்சியாளர் தமது வணிகத்தை வெற்றிகரமாகக் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப சேவையை கைத்தொழில் அபிவிருத்தி சபை, தேசிய பொதியிடல் நிறுவனம், தேசிய வடிவமைப்பு நிறுவனம், இலங்கை தரக்கட்டளை நிறுவனம் போன்றவற்றில் இருந்து பெறமுடியம்.

முயற்சியாளர்களானவர்கள் தமது முயற்சியாண்மை செயற்பாட்டை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு நிதிவளம் அவசியமாக அமைகின்றது. முயற்சியாளர்கள் தமது முயற்சியாண்மை செயற்பாட்டைக் கொண்டு நடத்தாமைக்கு காரணமாகவும் இந் நிதிவளம் அமைகின்றது. வணிக முயற்சியாளர்கள் தமக்கு ஏற்படும் நிதி தொடர்பான பற்றாக்குறையைத் தீர்க்க வணிக வங்கி, DFCC வங்கி, முயற்சியாண்மை மூலதன கம்பனி, தேசிய அபிவிருத்தி வங்கி போன்றவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

அதுமட்டுமல்லாது வங்கியினால் முயற்சியாளரின் நிதிப்பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கும் அவர்களின் முயற்சியாண்மை செயற்பாட்டை ஊக்குவிப்பதற்கும் பல்வேறு கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக புதிய பரிபூரண கடன் திட்டமானது (NCRCS) நெற்செய்கை மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கொவி சக்தி கடன் திட்டமானது விவசாய சாதனங்களைக் கொள்வனவு செய்தலுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இலங்கையில் உள்ள ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில் பயிற்சி நிலையங்களில் பயிற்சிகளைப் பூர்த்தி செய்த இளைஞர்களுக்கு தமது சொந்த தொழில் செயற்றிட்டங்களை நிறுவுவதற்கும் நிதி உதவிகளை வழங்குவதற்கும் என SEPI கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இன்றைய நவீன யுகத்தில் வங்கிகள் பெண் முயற்சியாண்மையை ஊக்குவிக்கும் விதமாக புதிய புதிய கடன் திட்டங்களை அறிமுகப்படுத்துகின்றது. இதற்கு உதாரணமாக ''காந்தா ரண்திரிசய'' கடன் திட்டத்தைக் குறிப்பிடலாம்.

முயற்சியாளர்கள் தமது வணிகத்தை விஸ்தரிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை கைத்தொழில் அபிவிருத்தி சபை, நகர அபிவிருத்தி சபை, இலங்கை முதலீட்டு சபை போன்றவற்றில் இருந்து பெற்றுக் கொள்கின்றனர். முயற்சியாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த ஏற்றுமதி, அபிவிருத்தி சபை , இலங்கை குடிசைக் கைத்தொழில், கைத்தொழில் அபிவிருத்தி சபை போன்றவற்றில் இருந்து ஆலோசனைகளைப் பெறமுடியும். இவ்வாறாக வணிக முயற்சியாளர்களை பல்வேறு வழிகளில் அரசாங்கம் ஊக்கப்படுத்துகின்றது.

தற்காலத்தில் அரசானது பேரளவு வணிகங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதை விட அதிகமாக சிறு சிறு முயற்சியாளர்களுக்கே முக்கியத்துவம் வழங்குகின்றது. ஏனெனில் இன்று சுயதொழில் வாய்ப்பையே அரசாங்கம் பெரிதும் எதிர்பார்ப்பதோடு மட்டுமல்லாமல் அவற்றிற்கே பெரிதும் முக்கியத்துவம் தருகின்றது எனலாம்.

**உசாத்துணைகள்**


- இணையதளம்
- ஜெகத் பண்டார நாயக்க நூல்

# பங்குச் சந்தையின் விலைச் சுட்டிகள்

செல்வி ச. திவ்யா
2018 வர்த்தகப்பிரிவு

நாங்கள் பங்குச் சந்தைச் சுட்டிகள் பற்றி புரிந்து கொள்வதற்கு முன்னர் எம் அன்றாட வாழ்வில் புரிந்துகொண்ட சில சுட்டிகள் ஊடாக பங்குச் சந்தைச் சுட்டிகளை விளங்கிக் கொள்வது இலகுவாக அமையும். ஒரு அசைவின் தோற்றப்பாட்டினை ஏதாவது ஒரு அடிப்படையில் புலப்படுத்தல் அல்லது கோடிட்டுக் காட்டுதல் சுட்டி எனப்படும். உதாரணமாக, சந்திரனின் தோற்றப்பாட்டினைப் பார்த்து வளர்பிறை அல்லது தேய்பிறை என்று சொல்கின்றோம் அல்லவா? இங்கு தோற்றப்பாட்டின் அசைவே சுட்டியாகக் கருதப்படுகின்றது. அவ்வாறாக நீங்கள் நன்கு அறிந்த புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டியானது நாட்டின் பொது விலைமட்டத்தில் ஏற்படும் அசைவினை எண்கணித ரீதியாகக் கோடிட்டுக் காட்டுகின்றது. இவ்வாறாக நடைமுறையில் பல சுட்டிகள் பற்றி நாம் அறிந்தும் இருக்கின்றோம்.

இவ்வாறாக நாட்டின் முதலீட்டு மட்டங்களைப் புலப்படுத்தும் சுட்டிகளாக அனைத்துப் பங்கு விலைச்சுட்டி, துறை ரீதியான விலைச் சுட்டிகள், S&P Srilanka 20 போன்ற சுட்டிகள் காணப்படுகின்றன. பொதுவாக இச் சுட்டிகள் அடிப்படையில் பங்குகளின் சந்தை விலைகளில் ஏற்பட்ட அசைவைக் கோடிட்டுக் காட்டுகின்றன. ஆயினும் சில விசேட தேவைகருதி வேறுபடுத்திக் கணிப்பீடு செய்யப்படுவதும் உண்டு. இலங்கையில் பொதுவாகப் பங்குச் சந்தைச் சுட்டிகளை இலங்கைப் பங்குச் சந்தை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான நிறுவனமாகிய கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை (C.S.E) கணிப்பீடு செய்து நாளாந்தம் அறிக்கையிடுகின்றது.

இங்கு அனைத்துப் பங்கு விலைச்சுட்டியானது பங்குச் சந்தையில் பட்டியற்படுத்தப் பட்ட அனைத்துக் கம்பனிகளின் சந்தை விலைகளில் ஏற்பட்ட அசைவுகளை எண் கணித ரீதியல் வெளிப்படுத்துகின்றது. துறை ரீதியான விலைச் சுட்டியானது பங்குச் சந்தையில் பட்டியற்படுத்தப்பட்ட கம்பனிகள் முதலீடு செய்துள்ள 20 துறைகள் ரீதியாக வகைப் படுத்தப்பட்டு அவற்றின் விலைமட்டங்களில் ஏற்படும் அசைவுகளைப் புலப்படுத்து கின்றது. அனைத்துப் பங்கு விலைச்சுட்டி, துறை ரீதியான விலைச்சுட்டிகள் கம்பனியின் மூலதனப்பருமன், பங்கின் திரவத்தன்மை, இலாபம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சாதாரண பங்குகளின் விலை அசைவுகளைக் கணிப்பீடு செய்கின்றது.

இலங்கைப் பங்குச் சந்தை மீது முதலீட்டாளர்கள் காட்டிய ஆர்வமானது, இலங்கைப் பங்குச் சந்தை தொடர்பாக சுயாதீனமாக சர்வதேச நியமங்களுக்கு அமைவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சுட்டியினை அறிமுகப்படுத்த வேண்டிய தேவைக்கு வித்திட்டது. இதன் விளைவாக S&P Srilanka 20 எனும் விலைச்சுட்டி 2012ம் ஆண்டு யூன் மாதம் 27ம் திகதி S&P டவ்ஜோண்ஸ் மற்றும் கொழும்புப் பங்குப்

பரிவர்த்தனை என்பன இணைந்து அறிமுகப்படுத்தியது. இச்சுட்டிக்கு 2004ம் ஆண்டு அடியாண்டாக அமைவதுடன் பெறுமதிப் புள்ளியாக 1000 அமைந்துள்ளது. தெரிவு செய்யப்பட்ட 20 கம்பனிகளின் சந்தை விலைமட்டங்களில் ஏற்படுகின்ற அசைவுகளினை அடிப்படையாகக் கொண்டு இச்சுட்டி கணிப்பிடப்படுகின்றது. தெரிவு செய்யப்படும் இக்கம்பனிகள் ஆண்டுக்கு ஒரு தடவை மீளாய்வு செய்யப்பட்டு டிசம்பர் இறுதியில் அறிக்கையிடப்படுகின்றது. S&P SL20 சுட்டிக் கணிப்பீட்டில் உட்படுத்தப்படும் கம்பனி பின்வரும் சிறப்பியல்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.

**1. மூலதனப் பருமன்** - கம்பனி குறைந்தது 500 மில்லியனுக்குக் குறையாத சீராக்கிய மிதக்கும் சந்தை முதலினைக் கொண்டிருக்கவேண்டும்.

**2. திரவத்தன்மை** - சராசரி தினசரி வியாபாரப் புரள்வு 1 மில்லியன் ரூபாவிற்கு குறையாது அமைவதுடன் கணிப்பீட்டிற்கு உட்படுத்த முன்னர் உள்ள 3 மாத காலப்பகுதியில் குறைந்தது 10 நாட்கள் வீதம் மாதாந்தம் பங்குகள் பரிமாற்றப்பட்டிருத்தல் வேண்டும்.


**3. நிதியியல் உறுதித்தன்மை** - கணிப்பீட்டிற்கு முன்னர் 12 மாதகால நிதியாண்டில் தேறிய இலாபம் நேர்கணியப் பெறுமதியாகப் பதிவு செய்திருத்தல் வேண்டும் என்பனவாகும்.

S&P SL20 சுட்டியானது இலங்கைப் பங்குச் சந்தையின் செயற்றிறன் மதிப்பீடு, வெளிப்படைத்தன்மை தொடர்பாக சர்வதேச முதலீட்டாளர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்துள்ளது.

இவ்வாறாகப் பங்குச் சந்தையில் S&P SL20 சுட்டியுடன் இணைந்து அனைத்து பங்கு விலைச்சுட்டி, துறை ரீதியான விலைச்சுட்டிகள் மூலம் பங்கு விலைகளில் ஏற்பட்ட அசைவுகளைத் துணிவதன் மூலம் பங்குச் சந்தை இன்று பாரிய வளர்ச்சியைக் கண்டு வருகின்றது.

**உசாத்துணைகள்**

- ஆசிரியர் வழிகாட்டி
- CSE கையேடு



# வணிகத்தில் அரச தலையீடும் பங்களிப்பும்

செல்வி டெ. ஜெனிபர்
2018 வர்த்தகப்பிரிவு

எந்தவொரு நாட்டினதும் பொருளாதாரத்தை இயக்குகின்ற பிரதான இயங்குசக்தி அந்நாட்டின் அரசு ஆகும். அரசின் பொருளாதார கொள்கைகளும் செயற்பாடுகளும் வணிக நிறுவன கருமங்களில் பெரும் தாக்கம் விளைவிக்கவல்லது. வணிக நிறுவன கருமங்களில் அரசு தலையிடும் அளவானது அந்தந்த நாட்டின் பொருளாதார முறை யினால் தீர்மானிக்கப்படும். சுதந்திர பொருளாதார முறையில் அரசின் வணிகம் மீதான தலையீடு குறைவாகவும் கலப்புப் பொருளாதார முறையில் அரசின் வணிகம் மீதான தலையீடு சார்பளவில் சமத்துவமாகவும் சமவுடமை பொருளாதார முறையில் வணிகம் மீதான அரச தலையீடு அதிகமாகவும் இருக்கும். ஆனால் எது எவ்வாறாயினும் எந்த பொருளாதார முறை காணப்பட்ட போதிலும் அரசு குறித்த ஓர் அளவுக்காவது வணிக கருமங்களில் தலையிடும் எனக் கூறினால் யாரும் மறுக்க முடியாது.

இலங்கையில் கலப்புப் பொருளாதார முறையில் அரசுக்கும் வணிகங்களுக்கும் இடையில் முக்கியமான இடைத்தொடர்புகள் ஏற்படுவதைக் காணமுடியும். இக் கலப்புப் பொருளாதார முறையின் கீழ் அரசானது மத்திய அரசின் செல்வாக்கு, மாகாண அரசின் செல்வாக்கு, உள்ளூராட்சி சபைகளின் செல்வாக்கு என்பவற்றின் ஊடாக வணிகங்களுடன் தொடர்புகளை மேற்கொள்கின்றது. இவ் நிர்வாக மட்டங்களின் ஊடாக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவோராக செயற்படல், போட்டியாளராகச் செயற்படல், வாடிக்கையாளராகச் செயற்படல், கொள்கைகளை வகுப்போராக செயற்படல், சட்டங்களை உருவாக்குவோனாக செயற்படல், வரி அறவீட்டாளராக செயற்படல் போன்ற வழிகளினூடாக அரசானது வணிகத்தில் தனது செல்வாக்கைச் செலுத்தி தொடர்புகளைப் பேணுகின்றது.

வணிக நிறுவனம் தனது வணிகச் செயற்பாட்டை முன்னெடுக்க உட்கட்டமைப்பு வசதி அவசியமாகும். உட்கட்டமைப்பு வசதி என்பது போக்குவரத்து, தொடர்பாடல், மின்சாரம், கழிவகற்றல் என்பவற்றைக் குறிக்கும். இவற்றினை அரசு வணிகங்களுக்கு வழங்குவதனூடாக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவோராக வணிகத்தில் அரசு தலையீடு செய்கின்றது.

- மத்திய அரசு - மின்சார வசதிகளை வழங்கி வணிக செயற்பாட்டிற்கு பங்களிக்கின்றது.
- மாகாண அரசு - வீதிகளைப் பராமரித்தல் ஊடாக வணிக செயற்பாட்டிற்கு பங்களிக்கின்றது.
- உள்ளூராட்சி மன்றம் - கழிவுப் பொருட்களை அகற்றுவதனூடாக வணிக செயற்பாட்டிற்கு பங்களிக்கின்றது.

அரசானது தனியார் துறை வணிகங்களோடு போட்டியான வணிக கருமங்களில் ஈடுபட்டு அரச திணைக்களம், அரச கூட்டுத்தாபனம் போன்ற அரச அமைப்புக்கள் ஊடாக வணிகத்தில் போட்டியாளராகச் செயற்படுகின்றது.

- மத்திய அரசு - தனியார் தொலைக்காட்சி அலைவரிசைக்குப் போட்டியாக அரச தொலைக்காட்சி சேவையை வழங்கி வணிக செயற் பாட்டிற்கு பங்களிக்கின்றது.
- மாகாண அரசு - போட்டித்தன்மை கொண்ட தனியார் துறைக்கு எதிராக வியாபாரத்தை நடத்தி வணிக செயற்பாட்டிற்கு பங்களிக் கின்றது.
- உள்ளூராட்சி மன்றம் - தனியாருக்கு போட்டியாக வியாபார நிலையத்தை அமைத்து வாடகைக்கு விடுவதன் ஊடாக வணிக செயற்பாட்டிற்கு பங்களிக்கின்றது.

அரசானது தனது நாளாந்த செயற்பாடுகளை மேற்கொள்ளத் தேவையான பல்வேறு பட்ட பொருட்கள், சேவைகளை தனியார் துறை வணிகங்களிடம் இருந்து கொள்வனவு செய்து கொள்வதன் மூலம் வாடிக்கையாளராகச் செல்வாக்கு செலுத்துகின்றது.

- மத்திய அரசு - தனக்கு வேண்டிய உபகரணங்களைக் கொள்வனவு செய்து வணிக செயற்பாட்டிற்கு பங்களிக்கின்றது.
- மாகாண அரசு - தனியார் துறை வணிகங்களுக்கு பாதுகாப்பு சேவையை வழங்குவதன் ஊடாக வணிக செயற்பாட்டிற்கு பங்களிக் கின்றது.
- உள்ளூராட்சி மன்றம் - மயானங்களை நடாத்துவதன் ஊடாக தனது பங்களிப்பை வழங்குகின்றது.

வணிகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பல கொள்கைகளை உருவாக்குவத னூடாக கொள்கை வகுப்போராக வணிகத்தில் அரசு தலையிடுகின்றது.

- மத்திய அரசு - நாட்டின் பணவளங்களோடு தொடர்புடைய கொள்கையான நிதிக் கொள்கையையும் அரச வருமானம் செலவுகளோடு தொடர்புடையதான இறைக்கொள்கையையும் நடைமுறைப் படுத்துவதனூடாக வணிக செயற்பாட்டிற்குபங்களிக்கின்றது.
- மாகாண அரசு - வியாபார சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக வணிக செயற்பாட்டிற்கு பங்களிக்கின்றது.
- உள்ளூராட்சி மன்றம் - சூழல் கொள்கையை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக வணிக செயற்பாட்டிற்கு பங்களிக்கின்றது.

பல்வேறு விதமான சட்டதிட்டங்களை உருவாக்கி வணிகங்களைக் கட்டுப்படுத்துவத னூடாக சட்டதிட்டங்களை உருவாக்குவோனாக அரசு செல்வாக்குச் செலுத்துகின்றது.

- மத்திய அரசு - நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை சட்டத்தை உருவாக்குவதனூடாக நாட்டின் முழுமையான வணிக செயற்பாட்டிற்கு பங்களிக்கின்றது.

- மாகாண அரசு - அந்தந்த மாகாணங்களில் தனியார் போக்குவரத்திற்கான சட்டதிட்டங்களை உருவாக்குவதனூடாக போக்குவரத்து வணிக செயற்பாட்டிற்கு பங்களிக்கின்றது.
- உள்ளூராட்சி மன்றம் - வணிக கட்டடங்களை அமைக்க அனுமதி கொடுப்பதனூடாக வணிக செயற்பாட்டிற்கு பங்களிக்கின்றது.


பல்வேறுபட்ட வரிகளை விதித்து வணிகத்தைப் பாதுகாக்கவும் வரிகளை விதித்து அறவிடல் மூலமும் வரி அறவீட்டாளராக அரசு வணிகத்தில் தலையீடு செய்கின்றது.

- மத்திய அரசு - உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஊடாக வரியை அறவிடல் ஊடாக வணிக செயற்பாட்டுக்கு பங்களிக்கின்றது.
- மாகாண அரசு - மாகாண அரசின் கீழ் செயற்படும் இறைவரித் திணைக்கள கிளைகளினூடாக வரியை அறவிடுவதில் வணிக செயற்பாட்டுக்கு பங்களிக்கின்றது.
- உள்ளூராட்சி மன்றம் - சோலைவரி அறவிடுவதன் ஊடாக வணிக செயற்பாட்டுக்கு பங்களிக்கின்றது.

இவ்வாறாக வணிகத்தில் அரசு தனது செல்வாக்கை செலுத்தி தலையிடுவது வணிகத்தின் வளர்ச்சிக்கு உந்துகோலாய் அமைகின்றது. வணிகங்கள் தனது நோக்கங்களான விற்பனையை அதிகரித்தல், சந்தைப் பங்கை அதிகரித்தல், நிலைத்து நிற்றல், இலாபம் உழைத்தல் என்பவற்றை அடைந்து கொள்ள அரச தலையீடு கட்டாயமானதாகும்.

**உசாத்துணை நூல்கள்**

- ஜகத் பண்டார வணிகக்கல்வி - I
- ஆசிரியர் வழிகாட்டி விதப்புரை



# வணிகங்களின் வெற்றிக்கு தலைமைத்துவத்தின் பங்களிப்பு

செல்வி எ.விதுஷா
*2018 வர்த்தகப்பிரிவு*

தலைமைத்துவம் என்பது உலக சமூகங்களுக்கு இருக்க வேண்டிய மிக முக்கிய பண்பாகும். தலைமை என்பது எல்லோருடைய பொறுப்புக்களையும் தானாக விரும்பி ஒருவர் ஏற்றுக்கொள்வதாகும். அனைவரும் அவர் மீது நம்பிக்கை கொண்டு தங்கள் உரிமையையும் சுதந்திரத்தையும் ஒப்படைக்கும் மாபெரும் தியாகம் இதுவாகும். வணிகம் சார்ந்த நோக்கில் அமைப்பொன்றின் இலக்கினை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு தனிநபர் அல்லது குழுக்களின் நடத்தை மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய இயலுமையே தலைமைத்துவம் எனப்படும். இத்தலைமைத்துவத்தை ஏற்பவர் தலைவர் என அழைக்கப்படுவர்.

உண்மையில் ஆள்பவர் ஆளப்படும் மக்கள் என்ற இரண்டு பேரும் ஈடுபடும் ஒரு மகத்தான செயல்தான் தலைமை. 'என் கையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது' என சுயநலமாகவோ ஆணவமாகவோ நடந்துகொள்ள முடியாது. தலைமைக்கு பணிவும் சமூக நலனும் இருக்க வேண்டியது கட்டாயமாகும். இவ்வுலகில் எல்லாமே ஒன்றுக்கொன்று உதவியாகவும் ஒன்றை ஒன்று சார்ந்தும் தான் படைக்கப்பட்டுள்ளது. ஒரு நிறுவனத்தில் உள்ள தலைவருக்கும் ஊழியர்களுக்கும் இடையில் உள்ள உறவு மிகப்பெரிய மரியாதைக்குரிய உறவாகும். இவ் உறவை இரு சாராரும் மதிக்க வேண்டும். யாராவது ஒருவர் தவறினால்கூட நோக்கமானது பாதை மாறிவிடும்.

மனிதர்கள் என்று உரிமையுடன் வாழ நமக்கு சில அடிப்படைப் பண்புகள் முக்கியம் ஆகும். அதிலும் ஒரு நிறுவனத்தின் தலைவருக்கு சுயஒழுக்கம், உள ஆரோக்கியம், பணிவு, அர்ப்பணிப்பு, தன்னம்பிக்கை, புத்திசாதுரியம் போன்ற பண்பு கள் அவசியமாகும். இந்த அவசர உலகில் மக்கள் சனத்தொகையின் அளவைவிட வணிகங்களின் வளர்ச்சிப்போக்கே அதிகமாகக் காணப்படுகின்றது. இந்நிலைமை யிலேயே வணிகங்களுக்கு இடையில் போட்டித்தன்மை நிலவுகின்றது. வணிகங்கள் இவற்றை வெற்றிபெற வேண்டுமாயின் மிகவும் தரமான பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்து அவற்றை நுகர்வோருக்கு வழங்க வேண்டும். ஏனெனில் தற்காலத்தில் நுகர்வோர் அறிவுள்ளவர்களாகவும் விழிப்படைந்தவர்களாகவும் உள்ளனர். இந்நிலை யில் வணிகங்கள் நீண்டகாலம் நிலைத்திருப்பதும், நன்மதிப்பை தொடர்ந்து பேணுவதும் கட்டாயமாகும். இதற்கு நிறுவனங்கள் அயராது பாடுபட வேண்டும். இந்தவகையில் ஒரு நிறுவனம் தனது விற்பனையை அதிகரித்து இலாபத்தை உச்சப்படுத்த வேண்டும். இதற்கு தலைமைத்துவம் சிறப்பாக அமைவது மிகமிக அவசியமாகும்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் ஜனநாயகம் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றதோ அதேபோல வணிகங்களின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் தலைமைத்

துவம் முக்கியம் பெறுகின்றது. வணிகம் ஒன்றின் நோக்கங்களையும் இலக்குகளையும் அடைந்து கொள்வதற்கும், நிறுவனத்தின் பல்வேறு பிரிவினருடன் சிறந்த தொடர்பாடலைப் பேணுவதற்கும், ஊழியர்களிடமிருந்து சிறந்த வினைத்திறனையும் விளைதிறனையும் பெறுவதற்கும், நிறுவனத்தினைக் கட்டுப்படுத்தி வழிநடத்துவதற்கும், ஊழியர்களின் தன்னம்பிக்கையினையும் மனோபலத்தினையும் உறுதிப்படுத்து வதற்கும் வணிகங்களுக்கு தலைமைத்துவம் அவசியமாகின்றது.

முல்லைக்கொடி ஒன்று பற்றிப் படர்வதற்கு எவ்வாறு கொழுகொம்பு தேவைப்படு கின்றதோ அதேபோல நிறுவனத்திற்கும் ஒரு தலைவர் அவசியம் தேவைப்படுகின்றார். இத் தலைவர் நிறுவனத்தில் சர்வாதிகார தலைவராக, ஜனநாயகத் தலைவராக, தந்தைத் தலைவராக, தலையிடா தலைவராக வகைப்படுத்தப்படுகின்றார். சர்வாதிகார தலைவர் என்பவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஊழியரைக் கட்டுப்படுத்தி நிறுவன விதிமுறைகளை முறையாகப் பின்பற்றி தண்டனைகளை வழங்கி அனைத்துத் தீர்மானங்களையும் அவரே மேற்கொள்பவராவார். ஜனநாயக தலைவர் என்பவர் தனக்குக் கீழ் பணிபுரிபவர்களின் கருத்துக்கு மதிப்பளித்து கருமங்களை மேற்கொண்டு அதிகாரங்களை கடுமையாக நிறுவன கருமங்களில் ஈடுபடுத்தாது ஏனையோரின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்ப வராவார். ஊழியருக்கு சுதந்திரத்தையும், ஊக்குவிப்பையும் வழங்கி தனது அதிகாரத்தை கீழ்மட்ட ஊழியருக்கு பகிர்ந்தளிப்பவர் தலையிடா தலைவராவார். தந்தை தலைவர் கீழ்நிலை உத்தியோகஸ்தர் தொடர்பில் கூடிய அக்கறை செலுத்தி அனைத்து தீர்மானங்களையும் மேற்கொள்வதோடு கீழ்நிலை ஊழியர்கள் அதனைப் பின்பற்ற வேண்டும் என எதிர்பார்ப்பார்.

இவ்வாறாக நிறுவனத்தின் இலக்கை அடைந்துகொள்வதற்கு சிறந்த தலைமைத் துவம் அவசியமாகும். மேலே குறிப்பிட்டது போன்று தலைமைத்துவமானது பல்வேறு வகையில் நிறுவனம் ஒன்றின் வெற்றிக்குத் துணைபுரிகின்றது என ஆணித்தனமாகக் கூறமுடியும்.

**உசாத்துணை நூல்கள்**


- அறிவுத்தேடல்
- டாக்டர்.எம்.எஸ்.உதயமூர்த்தி - தலைவன் ஒரு சிந்தனை
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி




# வணிகத்தின் நவீன போக்குகளும் சமூகப்பொறுப்பும்

செல்வி தே.அருள்மதுமிதா
2018 வர்த்தகப்பிரிவு

மானிட உலகம் பொருளாதார, தொழில்நுட்ப, சமூக, பண்பாட்டு அம்சங்கள் இடையே பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்ட வண்ணம் உள்ளது. உலகமானது கிராமம், நகரம், வலயம், கண்டம் என ஏதோ ஒரு வகையில் ஒன்றாகப் பிணைக்கப்பட்டதாகவே உள்ளது. இந்தப் பிணைப்பு முக்கியமாக வணிகத்தினால் ஏற்பட்டதெனக் கூறலாம். இதனால் மனித உலகம், வணிக உலகம் என அழைக்கப்படலாம். வணிகம் எனும் போது மனிதத் தேவைகளையும், விருப்பங்களையும் திருப்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் எந்தவொரு பணியும் வணிகம் எனலாம்.

மிக விரைவாக மாற்றமடைந்து கொண்டு செல்லும் நிகழ்கால வணிகத்தில் பல புதிய போக்குகள் உள்ளன. அந்தவகையில் உலகமயமாதல், சூழற்செல்வாக்கு, சமூகப் பொறுப்பு தொடர்பான அக்கறை, விரைவான தொழில்நுட்ப முன்னேற்றம், அறிவுடைய நுகர்வோர் பலமடைந்து வரல் போன்ற போக்குகளைக் காண முடிகின்றது.

அந்தவகையில் தற்கால வணிகங்களில் பல்வேறு மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. இதன் விளைவாக நாடுகளிடையே காணப்பட்ட கலாசார இடைவெளிகள் மறைந்துள்ளன. உலகமயமாதலில் தொடர்பாடல், போக்குவரத்து என்பவற்றில் ஏற்பட்ட புதிய போக்கு காரணமாக நாடுகளிடையே இந்த நெருக்கம் மேலும் அதிகரித்துள்ளன. வர்த்தக வலயமும் ஒப்பந்தங்களும் உலகமயமாதலில் காணக்கூடியதொரு நவீனமாகும். உலகச் சந்தையானது பரந்ததாக மாறியபின் நாடுகளிடையேயான இடைவெளி குறைந்து வர்த்தக வலயங்களும் ஒப்பந்தங்களும் ஏற்பட்டுள்ளன.

மேலும் முற்காலத்தில் இருந்தே சில வணிக கருமங்கள் காரணமாக சூழல் மாசடைந்து வந்துள்ளது. எனவே சூழல் மாசடைதல் தொடர்பாக முழு வணிகமும் பொறுப்புக்கூற வேண்டும். வணிகத்தின் நவீனபோக்கு வணிக நடவடிக்கைகளை சூழலுக்கு இணக்கமான முறையில் சரி செய்து கொள்ளத் தூண்டியுள்ளது. இரசாயன கழிவுப்பொருட்கள் சூழலில் சேருவதனால் வாயு அசுத்தமடைதல், நீர் மாசடைதல், மண் நஞ்சூட்டம் போன்றவை ஏற்படுகின்றன. இதனால் உலகில் எல்லா நாடுகளிலும் சூழலைப் பாதுகாப்பது தொடர்பான சட்டதிட்டங்களும் அமைப்புக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அதுமட்டுமல்லாது முற்காலத்தில் பயன்படுத்தப்படாத முறையில் மிக வேகமாக தொழில்நுட்பமானது முன்னேற்றம் அடைந்து வருகின்றது. கணினி, தொலைபேசி, தொலைக்காட்சி என்பன ஒன்றிணைந்து பொருள் உற்பத்தி, பங்கீடு, விநியோகம் என்பவற்றில் விரைவான மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளன. இத்தகைய வளர்ச்சி காரணமாக நாள்தோறும் பயன்படுத்தும் பொருட்கள் சேவைகளில் மட்டுமல்லாது நாளாந்த வாழ்க்கையிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இத்துரித வளர்ச்சி காரணமாக நவீன பாகங்களுடன் கூடிய பொருட்கள் சந்தைக்கு வந்தவண்ணம் உள்ளன. இதனால் பொருட்கள் காலங்கடந்து உபயோகமற்றதாகும் நிலை ஏற்படக்கூடும். இவ்விதமாக

தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் மனிதனுடைய நாளாந்த வாழ்க்கை முறையும் ஆச்சரியப்படத்தக்க வகையில் மாற்றமடைந்து வருவதுடன் வணிகமும் அதற்கு ஈடாக மாற்றமடைகின்றது.

தற்காலத்தில் சந்தையில் நுகர்வோன் சக்தி பெற்றவனாக அல்லது அறிவுடையவனாக இருப்பதனால் சந்தையில் வணிகங்கள் எதிர்நோக்கும் சவால்களும் அதிகமாகவே உள்ளன. இதனை வெற்றிகொள்ள திறமைமிக்க முகாமைத்துவம் அவசியமாகின்றது. இதன் காரணமாக நவீன சந்தையில் வணிகர்கள் நிலைத்து நிற்க மிகக் கடினமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்காக நுகர்வோருக்கு உயர்வான திருப்தியை வழங்கி அவர்களை தம் பக்கத்தில் ஈர்த்துக் கொள்ளல் வணிக உலகின் புதிய போக்காக அமைகின்றது. நுகர்வோர் சந்தையை நோக்கி உருவாகியுள்ளமையினால் தற்காலத்தில் சந்தைப்படுத்தல் உபாயமானது அத்தியாவசியமாக மாறியுள்ளது.

தற்காலத்தில் சனத்தொகை வளர்ச்சி, நகரமயமாதல் போன்ற காரணங்களாலும் வணிகங்களுக்கான பல்வேறு வாய்ப்புக்கள் தோற்றம் பெற்றுள்ளன. அந்தவகையில் தற்போது சமைக்கப்பட்ட உணவுகள், நவீன சமையல் உபகரணங்கள், அழகுசாதனப் பொருட்கள், பெண்களின் ஆடையணிகள் போன்றவற்றின் கேள்வி உயர்வடைந்துள்ளது. அத்துடன் வீட்டுப் பணியாளர்களின் கேள்வியும் அதிகரித்துள்ளது. இன்று கடந்த காலங்களைவிட அதிக பெண் முயற்சியாளர்கள் வணிக உலகில் பிரவேசிப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறாக வணிகங்களின நவீன போக்குகளில் இன்று சமூகப்பொறுப்பு முக்கியம் பெறுகின்றது. அந்தவகையில் வணிகங்கள் தமதுநோக்கங்களையும் இலக்குகளையும் நிறைவேற்றும் அதேவேளை சமூகத்தின் தேவைகளையும் நிறைவேற்றி சமூகத்திற்கும் சூழலிற்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் ஒழுக்கத்துடன் செயற்படுவது சமூகப் பொறுப்பாகும். கடந்த காலங்களில் அநேக நிறுவனங்கள் தமது பிரதான இலக்கு இலாபமீட்டல் மற்றும் பணம் சம்பாதித்தல் போன்ற கருத்தைக் கொண்டிருந்தன. இது காலப்போக்கில் பரந்த வகையில் மாற்றம் பெற்றுள்ளது. இங்கு வணிகத்தின் சமூகப் பொறுப்பாக வணிகம் சமூகத்திற்கு நன்மை பயக்கும் வகையில் செயற்பட்டு வணிகமும் நன்மைகளைப் பெற முடிகின்றது.

வணிகங்களைப் பொறுத்தமட்டில் அவை தமது பொறுப்பினை பல்வேறு தரப்பினர்கள் மத்தியில் நிறைவேற்ற வேண்டியது அவசியமாகின்றது. அந்தவகையில் ஊழியர்கள், முதலீட்டாளர்கள், நுகர்வோர், சமூகம் தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகின்றது. இவ்வாறாக ஊழியரை நோக்குமிடத்து தொழில் பாதுகாப்பு, சுகாதாரமான வேலைச் சூழல், சிறந்த ஊழியர் தொடர்பு, கவர்ச்சிகரமான சம்பளம் வழங்குதல் போன்ற பொறுப்புக்களையும் வாடிக்கையாளர் தொடர்பாக தரமான பொருட்களை வழங்குதல், நியாயமான விலையுள்ள பொருட்கள், பாதுகாப்பான பொருட்கள், நுகர்வோர் உரிமைகள் போன்றவற்றையும் முதலீட்டாளர்கள் தொடர்பாக நியாயமான திரும்பல், வருவாய், இலாபம், மோசடிகளைத் தவிர்த்தல், நிதி வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்தல் போன்றவற்றினையும் சமூகம் தொடர்பில் சூழல் பாதுகாப்பு, பசுமை உற்பத்திகள், சுத்தமான மற்றும் நேயமான சூழல், வேலைவாய்ப்பிற்கு பங்களிப்புச் செய்தல் போன்ற பல்வேறுபட்டவர்களின் பொறுப்புக்களையும் வணிகம் பேணவேண்டியது இன்றியமையாதது. ஆகவே தற்போது வணிகங்கள் பல புதிய போக்குகளுக்கு முகம் கொடுத்தாலும்கூட அதில் சமூகப் பொறுப்பானது பெரும்பங்கை வகிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**உசாத்துணை நூல்கள்**


- வணிகக்கல்வி I. S. மயூரன்
- உயர்தர வணிகக்கல்வி I. ஜகத் பண்டார நாயக்க

# பொதியிடல் குறியீடுகள்

செல்வி சி.ரக்ஷனா
2018 வர்த்தகப் பிரிவு

வணிகத்துறையினுடைய மிதமான வளர்ச்சியானது உலகெங்குமுள்ள பல்லாயிரக் கணக்கான பொருட்களை மிக இலகுவில் நுகர்வோர் பெற்றுக்கொள்வதற்கு வழி சமைத்து உள்ளது. அந்தவகையில் நுகர்வோர் பொருட்களை நுகரும்போது கவனிக்க வேண்டிய காரணிகளுள் பொதியிடல் குறியீடுகள் அவசியமானவையாகும்.

பொதியிடல் என்பது பொருட்களினை சுற்றுறையிடலைக் குறித்து நிற்கின்றது.

**பொதியிடலின் பிரதான நோக்கங்கள்**

- பாதுகாப்பு
- தகவல் வழங்கல்
- கவர்ச்சி அல்லது மேம்பாடு


மொழி புரியாத நுகர்வோர் உள்ளடங்கலாக அனைவருக்கும் தகவல் வழங்கும் நோக்கத்துடனே பொதியிடல் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. அதாவது குறித்த பொருளை எவ்வாறு பாதுகாக்க வேண்டும், எவ்வாறு வைத்திருக்க வேண்டும் மற்றும் எவ்வாறான சூழ்நிலைகளில் பாதுகாக்கப்பட வேண்டும் போன்ற விடயங்கள் பொதியிடல் குறியீடுகள் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன. இன்றைய நவீன உலகில் பொதியிடல் குறியீடுகளானவை கட்டாயமாக அனைத்து நுகர்வோராலும் தெரிந்துகொள்ளப்பட வேண்டியவையாகும்.

**❑ உலக நாடுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதிக் குறியீடுகள் சிலவருமாறு**



**தீப்பற்றக்கூடியது** (Flamable)

சில பொருட்கள் விரைவில் தீப்பற்றக்கூடியவை. எனவே அவ்வாறான பொருட்களை தீயிலிருந்து மிகவும் தொலைவில் வைத்திருக்க வேண்டும் என்பதனை இப்பொதிக்குறியீடு குறிக்கும்.



**கவனமாகக் கையாளவும்** (Handle with care)

உடையக்கூடிய அல்லது வெடிக்கக்கூடிய பொருட்களை கவனமாகக் கையாள வேண்டும் என்பதனை இக்குறியீடு குறிக்கும்.



**நனையக்கூடாது** (Keep dry)

சில பொருட்கள் ஈரத்தன்மையால் பாதிக்கப்படும். அவ்வாறான பொருட்கள் நனையக்கூடாது என்பதனை இக்குறியீடு குறிக்கும்.



**வெப்பத்திலிருந்து பாதுகாத்தல்** (Protect from heat)

வெப்பத்தினால் சில வகையான பொருட்கள் பாதிக்கப்படும். அவ்வாறான பொருட்களைப் பாதுகாக்க இக்குறியீடு பொதிகளில் காணப்படும்.

1 234567 890128 >

**பட்டைக் குறிமுறை** (Bar code)

இக்குறியீட்டின் உள்ளடக்கமாக உற்பத்தியாளர் விபரம், உற்பத்தி செய்த நாடு, பொருளின் வகை மற்றும் பெயர், பொருளின் விலை, உற்பத்தித்திகதி, காலாவதித் திகதி, பொருள் பதிவேட்டுப் பட்டியல் இலக்கம் என்பன காணப்படும்.




**வாடிக்கையாளர் திருப்தி** (Customer Satisfaction)

வாடிக்கையாளர்களைத் திருப்பதிப்படுத்தும் வகையில் குறித்த உற்பத்தி உள்ளது என்பதனை வெளிப்படுத்தும் குறியீடாகும்.



**வீழ்த்தக்கூடாது** (Do not drop)

பொதியினுள் உடையக்கூடிய பொருட்கள் காணப்படு மாயின் பெரும்பாலும் இப் பொதிக் குறியீடு காணப்படும்.



**சுழற்றக்கூடாது** (Do not roll)

சில இலத்திரனியல் உபகரணங்களின் பாகங்களை அகற்றும் போது சுழற்றக்கூடாது எனக் குறிப்பிட இக்குறியீடு காணப்படும்.

**துரித துலங்கல் குறியீடு** (Quick Response code)

பட்டைக் குறியீடு வாசிப்புகளால் வருடிகளால், நுண்ணிய அலைபேசிகளால் விரைவாகப் புரிந்து கொள்ளக்கூடிய குறியீடாகும்.




**மீள்சுழற்சி** (Recycle)

குறித்த பொருள் மீள்சுழற்சிக்குட்படுத்தக்கூடியது என்பதனை இக்குறியீடு வெளிப்படுத்தி நிற்கும்.




**பதிவு செய்யப்பட்ட வியாபாரக்குறி** (Registerd trade mark)

சட்டரீதியாக பதியப்பட்ட வியாபாரக் குறிகளுக்குப் பயன்படுத்தப்படும் குறியீடாக இக்குறியீடு காணப்படும்.




**இந்தப்பக்கம் மேலே** (This side up)

குறித்த உற்பத்திப் பொருட்களை எப்போதும் மேல்நோக்கி வைக்க வேண்டும் என்பதனை இப்பொதிக் குறியீடு வெளிப்படுத்தும்.



**கொழுக்கி பயன்படுத்தக்கூடாது** (Do not use hook)

குறித்த பொருளினை கொழுக்கி பயன்படுத்தி தூக்கக்கூடாது என்பதனை இக்குறியீடு விளக்கும்.



**ஐரோப்பிய தரம்** (European Standard)

ஐரோப்பிய நாடுகளுக்குரிய சுகாதார சூழல் பாதுகாப்பு மற்றும் சட்டநடைமுறைகளுக்கு அமைவாக பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதை இக்குறியீடு சுட்டி நிற்கும்.



**உடையக்கூடியது** (Fragile)

பொதியில் உள்ள பொருட்கள் வீழ்ந்தால் உடையக்கூடியது என்பதனை இப்பொதிக் குறியீடு வெளிப்படுத்தும்.



**பயன்பாட்டின் பின் வீசவும்** (Throw after using)

பயன்படுத்திய பின் குறித்த பொருளை எறியவும் என்பதனை இக் குறியீடு குறிக்கும்.

**நஞ்சூட்டப்பட்டது** (Toxic)

குறித்த பொருள் நஞ்சுத்தன்மை கொண்டது என்பதனை இக் குறியீடு காட்டி நிற்கும்.

**தாவர உணவு** (Vegetarian)

குறித்த உற்பத்தி மரக்கறி உணவு என்பதனை இப்பொதிக் குறியீடு வெளிப்படுத்தி நிற்கும்.

## SLS

இலங்கைக் கட்டளைகள் பணியகத்தால் உற்பத்தித் தரத்திற்கு வழங்கப்படும் குறியீடே SLS ஆகும். பொருள் வணிகத்தில் உற்பத்தியாளர், நுகர்வோர் தவிர்ந்த மூன்றாம் நபரால் நிர்ணயிக்கப்படும் தர அங்கீகாரமாக இது அமையும்.

## ISO

பொதிகளில் பொறிக்கப்பட்டு காணப்படும் சர்வதேச தரச்சான்றிதழ் குறியீடு இதுவாகும். குறிப்பிட்ட பொருளினது தரத்தை இக்குறியீடு மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

❒ **உலக அமைப்புக்களைச் சுட்டும் குறியீடுகள் சில**

## World Bank

*1944ல் வறுமையை ஒழிக்கும் நோக்குடன் உருவான அமைப்பு.*

## IMF

*1945ம் ஆண்டு நிதி உறுதிப்பாட்டைப் பேணும் நோக்குடன் உருவாகிய அமைப்பு.*

## WTO

*1995ம் ஆண்டு எளிமையான எதிர்வு கூறக்கூடிய விதமான சுதந்திர வர்த்தகத்தை உறுதி செய்யும் நோக்குடன் உருவான அமைப்பு*

## SAARC

*1985ம் ஆண்டு பொருளாதார மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பு வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்குடன் உருவான அமைப்பு. தென்னாசிய நாடுகள் எட்டு இணைந்து உருவாக்கிய அமைப்பாகும்.*

## EU

*1957ம் ஆண்டு சமாதானத்திற்கும் செழிப்பிற்கும் ஒன்றாக இணைந்து பணியாற்றும் நோக்குடன் உருவான அமைப்பு*

## ASEAN

*1967ம் ஆண்டு அங்கத்துவ நாடுகள் இடையே பொருளாதார அபிவிருத்தி சமுதாய மேம்பாடு, கலாசார விருத்தி என்பவற்றை துரிதமாக்குதலும் வலய சமாதானத்தை மேம்படுத்தும் நோக்குடன் உருவாக்கப்பட்ட அமைப்பு*

*இங்கு பல்வேறுபட்ட குறியீடுகளும் அதற்கு உரிய விளக்கங்களும் தரப்பட்டுள்ளது. இவை வணிகத்துறை மாணவர்களுக்கு மட்டும் அல்லாது சமூகத்தில் பொருட்களைக் கொள்வனவு செய்யும் அனைத்து நுகர்வோருக்கும் முக்கியமானதாகவும் பயனுள்ள தாகவும் அமையும். பொதியிடல் குறியீடுகளை அறிவதன் மூலம் நாம் பகுத்தறிவுள்ள நுகர்வோராக மாறமுடியும். எனவே பொதிகளில் காணப்படும் குறியீடுகளை அவதானித்து அவற்றின் விளக்கத்திற்கேற்ப அவற்றைப் பயன்படுத்தி நன்மைகளைப் பெறுவோம்.*

**References**


- Internet (packaging symbols used in international market)


துன்ப நினைவுகளும்
சோர்வும் பயமுமெல்லாம்,
அன்பில் அழியுமடீ!- கிளியே!-
அன்புக்கழிவில்லை காண்.



# இன்றைய வணிகங்களில் விளம்பரங்கள்

செல்வி அ. மரிஜ லூட்சனா
2018 வர்த்தகப்பிரிவு

நவீன கால கட்டத்தில் வணிகங்களின் பங்களிப்பு மிகவும் உயர்வாகக் காணப் படுகின்றது. வணிகங்கள் தமது நோக்கங்களையும் குறிக்கோள்களையும் செயல் திறனாவும் வினைத்திறனாகவும் அடைந்து கொள்ள பல மேம்படுத்தல் நடிவடிக்கைகளை மேற்கொள்கின்றன. மேம்படுத்தல் என்பது உற்பத்தி தொடர்பாக அக்கறை கொள்ளும் வாடிக்கையாளருக்கு அதனை அறியச் செய்து கொள்வனவு செய்யத் தூண்டுவதற்காக தொடர்பாடல் செய்தல் எனப் பொருள்படும்.

இலங்கையில் பின்வரும் முறைகளில் மேம்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

1) விளம்பரம்
2) விற்பனை மேம்படுத்தல்
3) மக்கள் தொடர்பும் பிரசித்தமும்
4) நேராள் விற்பனை அல்லது தனிப்பட்ட விற்பனை
5) நிகழ்வுகளும் அனுபவங்களும்
6) நேரடி சந்தைப்படுத்தல்

இவற்றுள் விளம்பரமானது மிகவும் முக்கிய பங்களிப்பை ஆற்றுகின்றது எனலாம். "இனங்காணப்பட்ட அனுசரணையாளர் ஒருவர் மூலம் பொருள், சேவை, எண்ணம் என்பவை தொடர்பாக கட்டணம் செலுத்தி தனிப்பட்டவர்களுக்கு அல்லாமல் பொது மக்களுக்காக முன்வைப்பதே" விளம்பரம் ஆகும். இதன் அடிப்படை அம்சங்களாக எல்லோருக்கும் பொதுவான அறிவிப்பாக இருத்தல், மீண்டும் மீண்டும் வழங்கப்படும் தகவலாக இருத்தல், கவர்ச்சிகரமாகக் காணப்படல், அனுசரணையாளர் ஒருவர் இருத்தல் போன்றவை விளங்குகின்றன.

இன்றைய வணிகங்கள் விளம்பரங்களை மேற்கொள்வதன் நோக்கம் பொருள் அல்லது சேவை பற்றிய தகவல்களை பொது மக்களுக்கு வழங்கல், பொருள் அல்லது சேவையின் அனுகூலம், விலையும் விலை மாற்றங்களும், பொருளின் உள்ளடல்கங்கள், வியாபாரக் குறி பற்றிய தகவலை பொதுமக்களுக்கு வழங்குவதற்காகும்.

இன்றைய வணிகங்களின் வளர்ச்சிப் போக்கில் வணிகங்களால் மேற்கொள்ளப்படும் விளம்பரங்களை நுகர்வோர்களாகிய நாம் பல்வேறு வழிகளில் அறிந்து கொள்கின்றோம். இவ்வாறு எமது மனங்களைக் கவரும் வகையில் செய்யப்படும் விளம்பரங்கள் பல்வேறு வகையான ஊடகங்கள் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு வணிகமானது விளம்பரம் மேற்கொள்ள தெரிவு செய்யும் ஊடகமானது வணிகங்களின் செயற்பாட்டிற்கு சார்பாகவும் வெற்றியளிக்கக் கூடிய வகையிலும் காணப்பட வேண்டும்.

விளம்பரமானது உற்பத்தியாளரின் அல்லது வணிகத்தின் நிதிப் பலத்திலும் வாடிக்கை யாளரை, கவரக்கூடிய வகையிலும் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடையக்கூடிய வகையிலும் அமையவேண்டும். இதற்காக அவர்கள் மத்தியில் பிரபல்யமான

ஊடகத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும், இவ்வாறு தேர்ந்தெடுப்பார்களாயின் தமது நோக்கத்தையும் குறிக்கோளையும் குறிப்பிட்ட கால வரையறையினுள் செயல் திறனாகவும் வினைத்திறனாகவும் அடைந்துகொள்ள முடியும்.

நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளர்ந்துவரும் இன்றைய தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பங்கு வணிகங்களில் பெரும்பங்கு வகிப்பதுடன் வணிகங்களின் துரித வெற்றிக்கு பெரிதும் உதவி புரிகின்றது. இதற்கமைய விளம்பரங்கள் இன்று எண்ணியல் முறையிலும் காணக்கூடியதாக உள்ளது. இன்றைய விளம்பர ஊடகங்களாக தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை, இணையம், சஞ்சிகை, பதாகை, சமூக வலைத்தளங்களைக் குறிப்பிட முடியும். இவ்வாறான ஊடகங்கள் மூலம் விளம்பரங்களை மேற்கொள்வதனால் வெவ்வேறு நன்மைகளைப் பெறும் அதேவேளை தீமைகளையும் வணிகங்கள் பெற்றுக்கொள்கின்றன.

**விளம்பர ஊடகங்களின் ஓர் ஒப்பீடு**

| ஊடகம் | நன்மை (சாதகம்) | தீமை (பாதகம்) |
|---|---|---|
| தொலைக்காட்சி Television | 1. கட்புல,செவிப்புல சாதனம்<br>2. உயர் தாக்கம் | 1. உயர்வான கிரயம்<br>2. விரைவில் ஞாபகத்தில் இருந்து நீங்குதல் |
| வானொலி Rodio | 1. செலவு குறைவானது<br>2. பரந்த சேவை | 1. கேட்போர் குறைவு<br>2. செய்துகாட்டல் சாத்தியம் இல்லை |
| செய்தித்தாள் or பத்திரிகை News Paper | 1. பல்வேறுபட்ட பிரிவுகள் காணப்படல்<br>2. கிரயம் குறைவு | 1. வாசிப்போர் எண்ணிக்கை குறைவு<br>2. எழுத்தறிவாற்றல் குறைவு |
| சஞ்சிகை Magazine | 1. இலக்கு சார்ந்தது<br>2. நீண்ட வாழ்வு | 1. பருவகால வெளியீடுகளாக அமைகின்றன<br>2.வாசிக்க விருப்பமின்மை |
| இணையம் Internet | 1. உலகளாவியது<br>2. புதிய விடயங்களையும் உள்வாங்கலாம் | 1.கணினி அறிவுடையோர் மட்டுமே பயன்படுத்தல்<br>2. கவனத்தில் கொள்ளும் தன்மை குறைவு |
| பதாகை | 1. செலவு குறைவு<br>2.வேண்டிய இடங்களில் பயன்படுத்தலாம் | 1.குறுகிய காலப் பயன்பாடு<br>2. வரையறுத்த பிரதேசப் பயன்பாடு |
| சமூக வலைத்தளம் Social Medias | 1. செலவு குறைவு<br>2. நீண்ட வாழ்வு | 1. சமூக வலைத்தள பயன்பாடு உடையவர்கள் மட்டும் பயன்படுத்தல்<br>2. ஏற்கும் தன்மை குறைவு |


இன்றைய போட்டி நிறைந்த சூழலில் வணிகங்கள் தமது பொருட்களை விற்பனை செய்ய அதிக முயற்சிகள் எடுக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. பொருளின் விலை, தரம் என்பவற்றிக்கு மேலதிகமாக மக்கள் பொருட்களை வாங்குவதற்கு விளம்பரம் அவசியம் ஆகும். அநேகமாக பொருட்கள் சந்தையில் தோன்றி மறைவதற்கு காரணம் முறையான விளம்பர மேம்படுத்தல் இன்மை ஆகும். சந்தை பங்கை அதிகரித்து இலாபத்தை உச்சப்படுத்தி வணிகங்கள் சந்தையில் நீண்டகாலம் நிலைத்திருக்க விளம்பரமானது தனது பாரிய பங்களிப்பை வணிகங்களுக்கு வழங்கி நிற்கின்றது.

**உசாத்துணைகள்**

- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

# குறுக்கெழுத்துப் புதிர்

செல்வி அ.மேரிபிரியங்கா
2018 வர்த்தகப்பிரிவு



**மேல் இருந்து கீழ்**

7. காப்புறுதி தத்துவங்களில் ஒன்று.
8. விருப்பத்துடன் கூடிய கொள்வனவு சக்தி இவ்வாறு அழைக்கப்படும்.
10. உற்பத்திக் காரணிகள் இவ்வாறும் அழைக்கப்படும்.
11. பங்காளர் பகிர் கணக்கில் உள்ளடக்கப்படாத பங்காளர் நடைமுறைக் கணக்கில் காணப்படும் ஒரு விடயம்

**கீழ் இருந்து மேல்**

9. நுகர்வோர், பொருட்கள் சேவைகளை சுதந்திரமாகத் தெரிவு செய்வதற்கான உரிமை இதுவாகும்.
16. ஒரு தொகுதி தரவுகளைச் சேமித்து வைக்கும் இடம் இவ்வாறும் அழைக்கப்படும் ("த்"விடுபட்டுள்ளது)
18. நிதி இடரை எதிர்நோக்கும் வணிகம் சொத்தை இந்த வழியிலும் திரட்டலாம்.
20. கொள்வனவாளரும் விற்பனையாளரும் சந்திக்கின்ற நிலை (3 எழுத்துக்கள்).
23. உள உழைப்பிற்கு வழங்கப்படும் சன்மானம்.

**இடமிருந்து வலம்**

1. விலைப் பொறி முறையின் செயற்பாடு பிரதானமாக இப் பொருளாதாரத்தில் காணப்படும்.
3. இயற்கையான உற்பத்திக் காரணி.
4. ஒதுக்கங்கள் இவ் மூலத்தினுள் அடங்கும்.
6. கணினி வன்பொருளுக்கும் பயனருக்கும் இடையே இது இடைமுகமாக தொழிற்படும்.
12. ஊழியர் ஊக்குவிப்பு தொடர்பான செயற்பாடுகளை வலியுறுத்தும் சந்தைப் படுத்தல்.
15. திட்டமிடலின் இறுதிப் பெறுபேறு இவ்வாறு அழைக்கப்படும்.
17. திருப்தியைத் தீர்மானிக்கும் காரணிகளுள் ஒன்று.
19. சமதன்மை, சமதரம் ஆகியவற்றில் ஒத்த இயல்புடைய பொருட்களின் உற்பத்தி இவ்வாறு அழைக்கப்படும்.
22. குறிப்பிட்ட ஒரு நோக்கத்தை நிறைவு செய்வதற்காக வளங்களின் இடைத் தொடர்புடன் கருமமாற்றுகின்ற ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட கூறுகளின் ஒருங்கிணைப்பு.
13. இருப்பை சரியான மட்டத்தில் பேணல் இவ்வாறு அழைக்கப்படும்.

**வலமிருந்து இடம்**

2. ஒரு முறைவழிக்கு பதிலாக இன்னோர் முறைவழிக்கு முன்னுரிமை அளிக்கும் செயற்பாடு.
5. மக்களால் அடிக்கடி கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் இவ்வாறு அழைக்கப்படும்.
14. முயற்சியாண்மை திறன்களில் இதுவும் ஒன்று.
21. நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் இதனை பிரதான அடிப்படையாகக் கொண்டு உள்ளது.

# அவசர தாலாட்டு

செல்வி டெ.ஜெனிபர்
2018 வர்த்தகப் பிரிவு

அவசர நூற்றாண்டு - மானிடரை
இதயம் துடிக்கும் இயந்திரமாக்கியது
இதுதானா கோலம் - அன்றேல்
காலம் செய்த சதியா


நெருப்பில் உட்கார்ந்து வயலின் வாசிக்கிறான்
அடுப்பில் உட்கார்ந்து
முகப்புத்தகம் பார்க்கிறான்
குழந்தைக்கு முத்தம் தபாலில் வருகிறது
காதலிக்கு வாங்கிய மல்லிகை
டீசல் புகையில் கறுப்பாகிறது

நிறம்மாறி போன வாழ்க்கையில்
தாய் பாடும் தாலாட்டு மட்டும்
தடமாறி போகாமல் இருக்குமா?
அலுவலகம் செல்லும் பெண்ணின்
அவசர தாலாட்டு ஒன்று

சோலைக்கு பிறந்தவளே
சுத்தமுள்ள தாமரையே
வேலைக்கு போகின்றேன்
வெண்ணிலவே கண்ணுறங்கு

அலுவலகம் விட்டு நான் வரும் வரையில்
பழைய பாட்டு கேட்டு நீயும்
விளம்பரத்தில் திடுக்கிட்டு விம்மிடுவாய்
ஆயாவும் தொலைக்காட்சி
அசதியில் தூங்கிடுவாள்

தூக்கத்தை தவிர துணைக்கு வர யாருமில்லை
**21**ம் நூற்றாண்டில் என் வயிற்றில் பிறந்தவளே
இதுதான் கதியென்று
என்னவளே கண்ணுறங்கு



வேலைத்தளத்திலே இருந்தாலும்
உன் நினைவு ஓடி வரும்
பேருந்தில் நசிகின்ற வேளையிலும்
கோப்புக்குள் மூழ்கி
போகின்ற போதும்
உன் நினைவே......

தந்தை வந்து கொஞ்சுவதாயும்
தாய் வந்து தூக்குவதாயும்
கனவு கண்டு தூங்கு கண்ணே - நீ
கனவு கண்டு தூங்கு கண்ணே

அவசர உலகில் நாம் இருவர்
வேலை செய்யவில்லை எனில்
நாளை நீ நாய்படாபாடுபட்டு
நிர்க்கதியாய் நிற்பாயே

அவசரமாம் அவசரம்
தாலாட்டே அவசரம் எனில்
ஐயகோ! மற்றவை என்னவோ.....

# பொருளியல்



# நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் பரிணாமவளர்ச்சி

திருமதி ஜெனிற்றாவதனி ஜெபநேசன்
B.A(Hons), PG.D in Edu.
ஆசிரியர் - யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

விலைச்சுட்டெண் என்பது ஒரு நாட்டில் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் பொருட்கள் சேவைகளின் விலைகளில ஏற்பட்ட மாற்றங்களை அளவிடப் பயன்படும் ஓர் அளவுகோல் விலைச் சுட்டெண்ணாகும்.


❑ **விலைச் சுட்டெண்ணைத் தயார் செய்யும் முறைகளாக,**

1. ஒரு பண்டக் கூடைக்குரிய பொருட்கள் சேவைகளை இனங்காணல்.
2. தெரிவுசெய்யப்பட்ட பொருட்களினதும் சேவைகளினதும் சார்பு முக்கியத் துவத்தின்படி அவற்றிற்கு நிறையிடல்.
3. பொருத்தமான அடியாண்டு ஒன்றைத் தெரிவுசெய்தல்.
4. தொடர்ந்து வரும் ஆண்டுகளில் பண்டங்களின் விலையை அடியாண்டின் விலையின் வீதமாகக் குறிப்பிடல்.
5. எல்லாப் பண்டங்களின் விலை வீதத்தையும் அவற்றிற்குரிய நிறையால் பெருக்கி நிறையிடப்பட்ட சார்பு விலையைப் பெறல்.
6. சார்பு விலைப் பெறுமதிகளைக் கூட்டி மொத்த நிறையால் பிரிப்பதன் மூலம் விலைச் சுட்டெண் பெறப்படும்.

சராசரியாக குடியிருப்பொன்றால் பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொண்ட கூடையின் ஒட்டுமொத்த விலை மட்டத்தை நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் அளவிடுகின்றன.

நுகர்வுப் பாங்குகள் காலத்திற்கு ஏற்ப மாறுபடுவதால் நுகர்வோர் விலைச் சுட்டெண்களும் அத்தகைய மாற்றங்களாக அடிப்படை ஆண்டை மீளமைக்கும் செயன்முறை மூலம் இணங்க செய்ய வேண்டியுள்ளது. நுகர்வோரின் நுகர்வு மற்றும் செலவீன பாங்குகளின் மீதான அளவீடுகளின் முடிவுகளின்படி நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் அடிப்படை ஆண்டினை மீளமைத்தல் பன்னாட்டு புள்ளிவிபரவியல் முகவர்களுக்கு மத்தியில் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையாகும்.


**நுகர்வோர் விலைச்சுட்டெண் கூடைகளின் நிறைக் கட்டமைப்பு**




இலங்கையின் நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் வரலாறு 1939ற்கு இட்டுச் செல்வதுடன், அக்காலத்தில் கொழும்பில் உழைக்கும் வர்க்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் வெளியிடப்பட்ட வாழ்க்கை செலவு சுட்டெண்கள் விலைகளின் போக்குகளை ஆய்வு செய்ய பயன்பட்டது. அப்பொது கொழும்பு உழைக்கும் வர்க்கத்தின் வாழ்க்கைச் செலவு சுட்டெண்ணின் அடிப்படைக் காலம் 1938 நவம்பர் - சித்திரை 1939 வரையாகும்.

இதன்பின்னர் 1935 இல் இலங்கையின் அலுவல்கள் நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைத் தொகுக்கும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் முதலாவது கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அலுவல்சார் நுகர்வோர் விலை சுட்டெண்ணாக வெளியிடப்பட்டது.

இக் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் அடிப்படை ஆண்டு 1952 ஆகும். இது 1949 / 50 இல் நடாத்தப்பட்ட கொழும்பு குடும்பப் பாதீட்டு அளவீட்டு முடிவுகளினால் வெளிப்படுத்தப்பட்டவாறு நுகர்வு மற்றும் செலவீன பாங்குகளின் அடிப்படையில் அமைந்த பொருட்கள் மற்றும் பணிகளைக் கொண்ட கூடையினைக் கொண்டிருந்தது.




இதன் பின்னர் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 2002 மற்றும் 2006/07 ஆகிய அடிப்படை ஆண்டுகளுக்கு தொடர்பான காலங்களில் நடாத்தப்பட்ட குடியிருப்பாளர் வருமான மற்றும் செலவின் அளவீட்டு முடிவுகளின்படி மீளமைக்கப்பட்டது.

2012/13 இல்நடாத்தப்பட்ட குடியிருப்பாளர் வருமான செலவீன அளவீட்டு அடிப்படையில் மீண்டும் தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் மீள அமைக்கப்பட்டது. இதன் அடிப்படை ஆண்டு 2006 இல் இருந்து 2013 ஆண்டாக புதுப்பிக்கப்பட்டது. புதிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் தொடர் 2017 தையிலிருந்து வெளியிடப்பட்டது.

ஒவ்வொரு அடிப்படை ஆண்டு மீளமைப்புகள், குறிப்பிடத்தக்க முக்கிய முன்னேற்றங்கள், மாற்றங்கள் அறிமுகப்படுத்தபட்டன. சுட்டெண்களின் காலத்துடனான இம் முக்கிய மாற்றமானது உடை, உணவு மற்றும் உணவல்லா வகை செலவீனத்தில் பங்குகளிலான மாற்றமாகும்.

**சிறப்பம்சங்கள்**

| | பண்புகள் | CCPI-BASE 1952 | CCPI-BASE 2002 | CCPI-BASE 2006 | CCPI-BASE 2013 | NCPI-BASE 2013 |
|---|---|---|---|---|---|---|
| 1 | அடியாண்டு | 1952 | 2002 | 2006 | 2013 | 2013 |
| 2 | புவியியல் பரப்பு | குறுகியது கொழும்பு நகரம் | கொழும்பு மாவட்டம் | கொழும்பு மாவட்டம் (All Urban Areas of Colombo) | கொழும்பு மாவட்டம் | இலங்கையில் அனைத்து மாகாண மாவட்டப் பிரிவுகளும் |
| 3 | வீட்டுத்துறை அலகின் அளவு | 455 வீட்டுத் துறையின் (தொழிலாளர் வர்க்கத்தினர்) | 1300 வீட்டுத்துறை -யினர் | 4.4 | 3.9 | 3.9 |
| 4 | சராசரியாக மாத நுகர்வோர் செலவீனம் | 202.24 | 17996.38 | 27972.11 | 60364.73 | 32142.69 |
| 5 | சுட்டெண் பெறுமதி | 2.02 | 179.96 | 279.72 | 603.64 | 321.42 |
| 6 | பிரதான குழுக்கள்<br>உபகுழுக்கள் | 05<br>38 | 10<br>83 | 10<br>95 | 12<br>105 | 12<br>105 |
| 7 | மொத்த விடயங்கள் எண்ணிக்கை<br>1. உணவு<br>2. உணவு அல்லாதவை | 213 | 334 | 373<br>169<br>204 | 392<br>181<br>211 | 407 |
| 8 | மொத்தநிறை (சதவீதமாக உணவு<br>உணவு அல்லாதவை) | 68.3<br>31.7 | 46.7<br>53.3 | 41.03<br>58.97 | 28.24<br>71.76 | 44.04<br>55.96 |
| 9 | விலை சேகரிப்பு நிலையங்கள் | 7 | 12 | 14 | 14 | ஒவ்வொரு மாவட்டத் திலும் 3 விலை சேமிப்பு நிலையங்கள் |

கொழும்பு நுகர்வோர் விலைச்சுண்டெண்ணின் (2013-100) உணவு வகைகளின் செலவின் பங்கு 28%. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்களின் (2006/2007)=100) 41.3% 1952 ஆண்டை அடிப்படையாகக் கொண்ட கொழும்பு நுகர்வோர் விலைச்

சுட்டெண்ணின் 61.9% ஆகும். எனவே கொழும்பு நகர்ப்புற குடியிருப்புக்கள், ஒப்பீட்டு ரீதியில் அதிகப்படியான செலவீனத்தை உணவல்லா வகைக்கு செலவழிக்க முனைவதையும் இது காலத்துடன் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. தேசிய நுகர்வோன் விலைச் சுட்டெண்ணின் முழு நாட்டையும் பிரதிநிதிப்படுத்தும் சராசரி குடியிருப்பு உணவுக்காக 44% செலவழித்தமையும் இங்கு காட்டப்பட்டுள்ளது.

| | CCPI Base (1952) | CCPI Base 2002) | CCPI Base (2006/07) | CCPI Base (2013) | NCPI Base (2013) |
|---|---|---|---|---|---|
| **கொழும்பு நுகர்வோன் விலைச் சுட்டெண் (எல்லாப் பொருட்கள்)** | | | | | |
| உணவு மற்றும் வெறியமற்ற குடிபானங்கள் | 68.32 | 46.71 | 41.03 | 44.0 | 34.7 |
| உணவற்றவை, வெறியமுள்ள குடிபானங்கள் மற்றும் புகையிலை | -- | 53.29 | 58.97 | 56.0 | 65.3 |
| வெறியமுள்ள குடிபானங்கள் மற்றும் புகையிலை | 7.85 | - | - | 6.4 | 15.0 |
| உடைகள் மற்றும் காலணிகள் | 5.44 | 3.08 | 3.14 | 3.9 | 0.6 |
| குடியிருப்பு, நீர், மின்வலு. வாயு, மற்றும் ஏனைய எரிபொருட்கள் | 9.54 | 18.29 | 23.7 | 1.5 | 3.4 |
| தளபாடம், வீட்டுப் பாவனைப் பொருள் மற்றும் வழமையான வீட்டுப் பராமரிப்பு | --- | 3.22 | 3.6 | 0.2 | 12.4 |
| நலன் | 0.43 | 4.18 | 3.16 | 14.7 | 10.7 |
| போக்குவரத்து | 1.76 | 9.47 | 12.26 | 4.5 | 3.8 |
| தொடர்பூட்டல் | 0.16 | 4.42 | 4.75 | 5.0 | 1.8 |
| உணவுச் சாலைகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் | - | - | - | 3.2 | 1.8 |
| ஏனைய பொருட்கள் மற்றும் பணிகள் | 6.50 | 2.65 | 2.89 | 11.6 | 11.5 |
| பொழுதுபோக்கு மற்றும் கலாசாரம் | - | 2.18 | 1.5 | 0.6 | 1.1 |
| கல்வி | | 5.79 | 3.94 | 7.4 | 1.8 |

## Reference:-


- மத்திய வங்கி ஆண்டறிக்கை - 2016
- Measurement of Inflation – New Colombo Consumer Price Indes (2002)
  By – D.C.A. Gunawardhana (Price and wage division)
  Department of Census and Statistics
- www.statistics.gov.lk
- www.island.lk.

# இலங்கையின் வரிமுறைமை

**செல்வி ஆ.சர்மிகா**
2018 வர்த்தகப்பிரிவு

இலங்கையானது தனது பொருளாதார இலக்குகளை அடைந்து கொள்வதற்காக பல்வேறு கொள்கைகளை வகுத்து அதனைச் செயற்படுத்துகின்றது. அவ்வாறான கொள்கைகளில் மிகப் பிரதானமானது இறைக் கொள்கையும், நாணயக் கொள்கையும் ஆகும். இவற்றில் பொதுமக்களுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டதாக இறைக் கொள்கை காணப்படுகின்றது. அரசானது தனக்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்ளவும், அரசிற்குரிய செலவுகளை முறையாக மேற்கொள்ளவும் இக்கொள்கை அரசிற்கு உதவுகின்றது.

இதன்படி இலங்கை அரசிற்கு பல்வேறு வழிகளினூடாக வருமானம் கிடைக்கப் பெறுகின்றது. அவற்றில் பிரதானமான வருமான மூலமாக வரி வருமானம் காணப்படு கின்றது. அதாவது இலங்கையின் மொத்த வருமானத்தில் 87% ஆனவை வரி வருமானமாகும். வரியல்லாவருமானங்கள்13% ஆகும். இதன்படி இறைக்கொள்கையானது முக்கியமானதொரு இடத்தைப் பெறுகின்றது.

வரி என்பது **"அரச அதிகாரத்தின் கீழ் விதிக்கப்படுகின்ற கட்டாயமான ஒரு கொடுப்பனவு ஆகும்"** இவ்வரிகள் தனிநபர்களாலும், நிறுவனங்களினாலும் நேரடியாகவோ/ மறைமுகமாகவோ அரசுக்கு செலுத்தப்படுகின்றன. இவ்வாறு இலங்கை அரசினால் விதிக்கப்படுகின்ற வரிகளாக பின்வருவனவற்றைக் கூறமுடியும்.

1. வருமான வரி
2. பெறுமதிசேர் வரி
3. உழைக்கும் போதே செலுத்தும் வரி
4. பொருளாதார சேவைக் கட்டணம்
5. தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி
6. சூதாட்ட வரி
7. முத்திரை வரி
8. சமூகப் பொறுப்பு வரி
9. பற்று வரி
10. நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதித் தீர்வை
11. கலால் வரி
12. இறக்குமதி வரி
13. செஸ் தீர்வை

### ☐ வருமான வரி - Income Tax

தனிப்பட்டவர்களும், வியாபார நிறுவனங்களும் உழைக்கும் வருமானத்தின் மீது அறவிடப்படும் வரியே வருமான வரியாகும். இவ்வரி மொத்த வரி வருமானத்தில் 16% ஆக உள்ளது. வரி அறவிடப்படுகின்ற வருமான மூலங்களாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

1. வர்த்தகம், வியாபாரம், உயர்தொழில் / வாழ்க்கைத் தொழில் என்பவற்றில் இருந்து பெறப்படும் இலாபங்கள்

2. ஊழியத்தில் இருந்து பெறப்படும் இலாபங்கள்.
3. தேறிய ஆண்டுப் பெறுமதி
4. பங்கு இலாபங்கள், வட்டி / தள்ளுபடிகள்
5. வாடகைகள், அரசுரிமைப் பணங்கள்
6. லொத்தர், பந்தயம், சூதாட்டம் என்பவற்றிலிருந்தான வெற்றிகள்

இலங்கையில் வதிவினைக் கொண்டிருக்க வேண்டியவரெனக் கருதப்படக்கூடிய ஆளொருவர் இலங்கையிலிருந்தும் மற்றும் இலங்கைக்கு வெளியிலிருந்தும் அவரினால் பெற்றுக்கொள்ளப்படும் வருமானம் தொடர்பின் வருமான வரி செலுத்த வேண்டும். வருமான வரி தொடர்பான அவரின் பொறுப்பானது அவருடைய உலகளாவிய வருமானத்திற்கும் விரிவுபடுத்தப்படுகின்றது. இலங்கையில் வதிவினைக் கொண்டிருக்காதவர் இலங்கையிலிருந்து பெறப்படும் இலாபங்கள் மற்றும் வருமானம் தொடர்பில் மாத்திரம் வருமான வரியினைச் செலுத்த வேண்டும்.

இலங்கையில் ஒரு பிரஜைக்கான வரி விடு தொகை ரூபா 500,000 ஆகும். அதை விட அதிகமாக ஒரு தனி நபரோ, அல்லது ஒரு நிறுவனமோ வருமானங்களை உழைக்கும் போது வரியைச் செலுத்த வேண்டும்.

இலங்கையில் வருமான வரியானது பின்வரும் முறையில் அறவிடப்படுகின்றது.

| வருட வருமானம் | வரி வீதம் |
|---|---|
| முதல் 500,000 | வரி இல்லை 0% |
| அடுத்த 500,000 | 4 % |
| அடுத்த 500,000 | 8 % |
| அடுத்த 500,000 | 12 % |
| அடுத்த 500,000 | 16 % |
| அடுத்த 1,000,000 | 20 % |

### ❑ பெறுமதி சேர்வரி Value Added Tax (VAT)

பொருட்கள், சேவைகளின் கூட்டிய பெறுமதி மீது விதிக்கப்படுகின்ற வரியே பெறுமதிசேர் வரியாகும். இது பொருட்கள் சேவைகளின் உள்நாட்டு நுகர்வின்போது விதிக்கப்படும். அதாவது இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மற்றும் இலங்கையின் சட்டரீதியான எல்லைகளுக்குள் வழங்கப்படுகின்ற பொருட்கள் மீது இவ் வரி விதிக்கப்படும். மொத்தவரி வருமானத்தில் VAT 17 % ஆகும்.

VAT ஆனது ஒரு மறைமுக வரியாகும். இவ்வரியானது 100% ம் நுகர்வோராலேயே செலுத்தப்படுகின்றது. இதனை அரசிற்கு சேகரித்துக் கொடுப்பவர்களாகவே உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் காணப்படுகின்றனர்.

பெறுமதி சேர் வரியானது குறித்த சில இறக்குமதிகள் மற்றும் பொருட்களின் சில்லறை மற்றும் மொத்த வழங்கலின் போது விதிக்கப்படுவதில்லை. இவை பெரும்பாலும் அத்தியாவசியப் பொருட்களாகக் காணப்படும். இலங்கையில் தற்போதைய பெறுமதிசேர் வரி வீதம் 15% ஆகும்.

### ❑ உழைக்கும் போதே செலுத்தும் வரி ( PAYEE )

தொழில் வழங்குநர்கள் ஊழியர்களுக்கான உழைப்பூதிய கொடுப்பனவை மேற்கொள்ளும் போது ஊழியர்களின் ஊழிய வருமானத்தின் மீது விதிக்கப்படுகின்ற வரி இதுவாகும்.

ஒவ்வொரு தொழில் வழங்குநரும் ஊழியர்களிடமிருந்து உழைக்கும் போது தாம் செலுத்தும் வரியினை கழிப்பனவு செய்வதற்கான கடப்பாட்டைக் கொண்டுள்ளார்கள்.

**❒ பொருளாதார சேவைக் கட்டணம்** (Economic Service Change)

பொருளாதார சேவைக் கட்டணமானது எவரேனும் தனிநபர் / நிறுவனம் வரி விலக்களிப்பு அல்லது வரி விதிக்கத்தக்க நட்டங்களைக் கொண்டிருக்கின்ற போது அத் தனி நபர்/ நிறுவனத்தினால் செலுத்தப்படுவதே பொருளாதார சேவைக் கட்டணமாகும்.

கூட்டுறவு, கப்பல் துறை கம்பனிகள், உள்ளூராட்சி சபைகள், அரச திணைக்களங்கள், லொத்தர் சபையின் விநியோகஸ்தர் போன்றோர் பொருளாதார சேவைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியதில்லை.

**❒ தேசத்தை கட்டியெழுப்பும் வரி** Nation Building Tax (NBT)

தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியானது 2009ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப் பட்டது. உள்நாட்டு யுத்தத்தினால் அழிவடைந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப் புவதற்காக இவ்வரி உருவாக்கப்பட்டது.

இவ்வரி பின்வருவனவற்றிற்கு செலுத்தப்பட வேண்டும்.

1. இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்கள்
2. ஏதேனும் பொருள் தயாரிப்பில் ஈடுபடும் நிறுவனங்கள்
3. ஏதேனும் பொருள் ஒன்றின் மொத்த சில்லறை வியாபாரத்தை நடத்தும் வியாபாரங்கள்.
4. வங்கி / நிதி வியாபாரம் உள்ளடங்கலான ஏதேனும் சேவை வழங்கும் நிறுவனங்கள்

HOLY FAMILY CONVENT
DATE

**❒ முத்திரைத் தீர்வை -** Stamp Duty

இலங்கையில் எழுதி நிறைவேற்றப்படும் அல்லது முன்வைக்கப்படுகின்ற ஆவணங்கள் மீதும் இலங்கையிலுள்ள ஆதனத்துடன் தொடர்புடையதும் இலங்கைக்கு வெளியே நிறைவேற்றப்படுகின்ற இலங்கையினால் வழங்கப்படுகின்ற ஆவணங்கள் மீதும் அறவிடப்படுகின்ற தீர்வை இதுவாகும்.

**❒ சூதாட்ட வரி -** Betting and gaming levy (B & GL)

சட்ட ரீதியாகவோ அல்லது சட்ட ரீதியற்ற முறையிலோ இலங்கையிலுள்ள பந்தயப்பணம் கட்டும் வியாபாரம் அல்லது சூதாட்டத்தினைக் கொண்டு நடத்துகின்ற எவரேனும் தனிநபர் உரிய வீதத்தில் வரி விதிப்புக்குள்ளாவார். இவ்வியாபாரம் தனிநபரினால் பல்வேறு இடங்களில் நடத்தப்படுமாயின் ஒவ்வொரு இடத்திற்கும் தனித்தனியாக அவர் வரி செலுத்த வேண்டும்.

Eg:- முகவர்களினூடாக சூதாட்டம் நடைமுறைப்படுத்தப்படுமிடத்து வரி ரூ 4 மில்லியன்.

**❒ கலால் வரி -** Excise tax

சிகரெட், மதுபானம், பெற்றோலியம், மோட்டார்வாகனம் போன்றவற்றிற்கு விதிக்கப்படும் வரியே கலால் வரியாகும். இலங்கையில் அறவிடப்படும் வரிகளில் கூடுதலான பங்கைப்பெறுவது கலால் வரியாகும்.

### ❐ இறக்குமதி தீர்வை

பல்வேறு உலக நாடுகளிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்யும் போது அப் பொருட்களுக்கு விதிக்கப்படுகின்ற வரியே இறக்குமதி வரியாகும். இவ்வரியானது உள்நாட்டு உற்பத்திகளின் கேள்வியைப் பாதுகாப்பதற்காகவும் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்காகவும் விதிக்கப்படுகின்றது.

### ❐ செஸ் தீர்வை

குறிப்பிட்ட விசேட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பெரும்பாலும் ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தின் மீது விதிக்கப்படும் மேலதிக வரி செஸ் வரி ஆகும்.

செஸ் வரி விதிக்கப்படுவதன் நோக்கங்கள்

1. அத்தியாவசியமற்ற பொருள் இறக்குமதியைக் கட்டுப்படுத்துதல்.
2. விலை குறைவான இறக்குமதி உற்பத்திகள் இலங்கைக்குள்ளே அதிகமான அளவில் வருவதால் ஏற்படக்கூடிய தீங்கான போட்டியிலிருந்து உள்நாட்டு கைத்தொழிலையும் உள்நாட்டு உற்பத்தியையும் பாதுகாத்தல்.
3. இவ்வரி மூலம் திரட்டப்படும் வரி வருமானத்தைக் கொண்டு உரிய ஏற்றுமதித்துறையை அபிவிருத்தி செய்தல்.

இவ்வாறாக இலங்கையில் பல்வேறுவிதமான வரிகள் நடைமுறையில் உள்ளன. இவை தொடர்ந்துவரும் காலங்களில் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வருகின்றன. இதன்படி 2013 - 2016 வரையான காலப்பகுதியில் பல்வேறு வரிகளில் ஏற்பட்ட குறிப்பிட்ட சில மாற்றங்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

**வரிவீதங்களில் 2013 - 2016 வரை ஏற்பட்ட மாற்றங்கள் (மொத்த அரசிறையில்)**

| வரிகள் | வரி வீதம் (ஆண்டு) | | | |
|---|---|---|---|---|
| | 2013 | 2014 | 2015 | 2016 |
| கலால் தீர்வை | 22% | 21% | 34% | 27% |
| இறக்குமதி தீர்வை | 7% | 7% | 9% | 18% |
| பெறுமதி சேர்வரி | 22% | 23% | 15% | 17% |
| வருமான வரி | 18% | 17% | 18% | 16% |
| ஏனைய வரி | 19% | 20% | 17% | 9% |

ஒவ்வொரு காலப்பகுதியிலும் இலங்கையில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார மாற்றங்கள் இலங்கையின் வரிமுறைமையில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

1. அதன்படி 2013ஆம் ஆண்டில் வருமான வரிகளிலிருந்தான அரசிறை அதிகரித்து பொருளாதார சேவைக்கட்டணம் தவிர்ந்த அனைத்து வருமானவரி வகைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்கு அதிகரித்த உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளும் அரசபிணையங்களின் வெளியீடுகளிலிருந்து உயர்ந்த அளவில் சேகரிக்கப்பட்ட பிடித்து வைத்தல் வரி என்பனவே முக்கிய காரணங்களாகும்.
2. 2013 இல் பெறுமதிசேர் வரித்தளத்தில் ஏற்பட்ட விரிவாக்கம் பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசவரி அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாகும்.
3. 2013 இல் நாட்டைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள்

மெதுவான வளர்ச்சியைக் காட்டியமைக்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சித்துறைக்கு வழங்கப்பட்ட வரி விலக்களிப்புக்களே காரணமாகும்.

4. *2014ஆம் ஆண்டில் வரி அரசிறையில் உயர்ந்த பங்கினைப் பெறும் பெறுமதிசேர் வரி அதிகரித்தமைக்கு மொத்த விற்பனை, சில்லறை வர்த்தகத்திற்கு பிரயோகிக்கத்தக்க கீழ்மட்டம் காலாண்டொன்றிற்கு ரூ 500M - 250M ஆகக் குறைக்கப்பட்டதன் மூலம் பெறுமதிசேர் வரித்தளம் விரிவடைந்தமையே காரணமாகும்.*

5. *தேசத்தை கட்டியெழுப்பும் வரி 2014இல் 8.9% இனால் ரூபா 44.6 பில்லியனிற்கு அதிகரித்தமைக்கு உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் பணிகள் மீதான தேசத்தினைக் கட்டியெழுப்பும்வரியிலிருந்தான அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும்.*

6. *2015ஆம் ஆண்டில் பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறை சேமிப்பு 2015 ஜனவரியில் நடைமுறைக்கு வரும்வகையில் பெறுமதிசேர்வரி வீதம் 12% - 11% இற்கு குறைக்கப்பட்டமை மற்றும் உந்து ஊர்திகள், சிகரெட் மற்றும் குடிவகை போன்ற தீர்வை விதிக்கப்பட்ட பொருட்கள் மீது பெறுமதி சேர்வரி நீக்கப்பட்டமையால் வீழ்ச்சியடைந்தது.*

7. *2015ம் ஆண்டில் இறக்குமதி தீர்வைகள் மற்றும் சிறப்புப் பண்ட தீர்வையில் இருந்தான அரசிறை சேமிப்பு 2014இல் 1.2% இலிருந்து 2015இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.6% இற்கு அதிகரித்தது.*

8. *2016ம் ஆண்டின்படி கூட்டுத்தாபன, கூட்டுத்தாபனமல்லா வருமான வரி, பிடித்து வைத்தல் வரி என்பவற்றிலிருந்தான குறைந்தளவான வரி வருவாயின் காரணமாக வருமான வரியின் மூலமான வருமானம் வீழ்ச்சியடைந்தது.*

9. *2016இல் கலால் வரிகள் வீழ்ச்சியடைந்தமைக்கு உந்து-ஊர்திகளின் இறக்குமதி களிலிருந்தான கலால்வரி அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும்.*

10. *2016இல் இறக்குமதித் தீர்வைகள் மற்றும் சிறப்புப்பண்ட தீர்வை மூலமான அரசிறை சேமிப்புக்கள் 2015 இன் 1.7% த்துடன் ஒப்பிடுகையில் 1.8 வீதமாக அதிகரித்துள்ளது.*

*இறைத்துறையில் காணப்படும் நீண்ட அமைப்பியல் பலவீனங்களை வினைத்திறனாகக் கட்டுப்படுத்தி பாரிய செயல்விளைவுகளைக் கொண்ட பலமான அரசியல் கடப்பாடுகளுடன் சீர்திருத்தங்களை உத்வேகம் மிக்க முறையில் இலங்கை அரசு மேற்கொள்ளுமாயின் இலங்கையின் வரிமுறைமை சிறப்பாக செயற்படும் என்பதில் ஐயமில்லை.*

**உசாத்துணை நூல்கள்**


- WWW.ird.gov.lk
- பொருளியல் நூல் 5 ஆசிரியர் V. பரமேஸ்வரன்
- பொருளியல் வினாவிடை - 5 ஆசிரியர் V. கருணாகரன்
- இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2013
- இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2014
- இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2015
- இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2016

# மத்திய வங்கியின் செயலாற்றம்

செல்வி எ.மேரியானா
2018 வர்த்தகப்பிரிவு

ஒரு நாட்டின் பணம் மற்றும் வங்கி முறையைக் கட்டுப்படுத்துவதற்கும் நிதியமைப்பு மற்றும் சூழல் என்பவற்றின் மீது தங்கியிருக்கும் ஏனைய தொழிற்பாடுகளையும் மேற் கொள்கின்ற தலையாய நிதி நிறுவனமான மத்திய வங்கியானது நாணயக் கொள்கை நிதியியல் முறைமையினைக் கட்டுப்படுத்தல், நெறிப்படுத்தல், நாணயங்களை அச்சிடல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு 1949ம் ஆண்டு 58ம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் 1950ம் ஆண்டு ஆகஸ்ட் 28ம் திகதி, உருவாக்கப்பட்டது. பணச்சந்தைக்குப் பதிலாக நாணய வடிவங்களுக்குப் பொறுப்பாக மாற்றப்பட்ட மத்திய வங்கியானது ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் உறுப்பினராக உள்ளது.

மத்திய வங்கியின் குறிக்கோள்களை 2002ம் ஆண்டு திருத்தப்பட்ட நாணயச் சட்டத்தின்படி

1. விலை மற்றும் பொருளாதார உறுதி நிலையினைப் பேணல்
   - பொதுவிலைமட்டத்தில் ஏற்படுகின்ற அதிகரிப்பைக் கட்டுப்படுத்தி அதனை நிலையாக வைத்திருத்தல் விலை உறுதி எனப்படும். மெய் வெளியீட்டினை அதிகரித்து தொழில் வாய்ப்பை அதிகரித்தல் பொருளாதார உறுதி எனப்படும்.
2. நிதிமுறைமையின் உறுதி நிலையைப் பேணல்.
   - நிதிசார் இடையீட்டு நடவடிக்கை செயற்பாடுகளில் மெய்ப்பொருளா தாரத்தில் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது இருத்தலை நிதி முறைமையின் உறுதி என்பர். பொருளாதார நிதி, அரசியல் மற்றும் ஏனைய துறைகளில் தோன்றும் அக அல்லது புற அதிர்ச்சிகளுக்கு மத்தியில் தடுமாற்றம் இல்லாமல் இருக்கும் ஆற்றலை நிதிமுறையின் உறுதி என்பர். இதனுள்
     - ➢ வங்கித் துறையின் திரவத்தன்மை முகாமைத்துவம்
     - ➢ நிதி நிறுவனங்களைக் கண்காணித்தலும் நிர்வாக நடைமுறைகளை ஏற்படுத்துதலும்.
     - ➢ வெளிநாட்டு நாணய முகாமைத்துவத்தை செயற்படுத்தல் போன்றவற்றை குறிப்பிடலாம்

இவ் விரண்டு குறிக்கோள்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டதாக உள்ளது. விலை உறுதிப்பாட்டை நிறைவேற்றுவதற்கும் நிதியியல் முறையைப் பாதுகாப்பது மிகவும் முக்கியமாக உள்ளதுடன் மத்திய வங்கி அதன் பிரதான தொழிற்பாடுகளை மிகவும் செயற்றிறன் மிக்கதாகச் செய்வதற்கு உதவுகின்றது. இத்தொழிற்பாடுகள் சில பின்வருமாறு

- நாணயக்கொள்கையை நடைமுறைப்படுத்துதல்.
- நாணயமாற்று விகித கொள்கையை நடைமுறைப்படுத்துதல்.

- இலங்கையிலுள்ள உத்தியோகபூர்வ ஒதுக்குகளை முகாமை செய்தல்.
- புழக்கப் பணத்தை வெளியீடு செய்தல்.
- அரசாங்கத்தின் வங்கியாக ஆலோசகராக நிதி முகவராகவும் தொழிற்படல்.
- வங்கி நிதிக்கம்பனி மற்றும் அரசாங்கத்தின் பிணையங்களுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள முதல் நிலை வணிகர்களுக்கு அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் நிர்வகித்தல் மற்றும் கண்காணித்தல்.
- மத்திய வங்கியில் தீர்ப்பனவுக் கணக்குகளை வைத்துள்ள நிதி நிறுவனங்களுக்கு தீர்ப்பனவு வசதியை வழங்குதல்.

அதேபோன்று இலங்கை மத்திய வங்கியின் பிரதான இலக்காக அமைவதே பணவீக்கத்தை ஒற்றை இலக்கத்தில் (0-9)ல் நடுப்பெறுமானமாக வைத்திருத்தலாகும். இப்பணவீக்க இலக்கிடல் என்பது பொருளாதாரத்தின் உறுதித் தன்மையை கருத்தில் எடுத்து அண்மையில் பணவீக்கத்தை நிலைநிறுத்தும் வகையில் கொள்கை வீதங்களைத் தீர்மானித்தலாகும். 2015ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்படி பணவீக்கமானது அண்ணளவாக 7.1% இலிருந்து 2016ம் ஆண்டு 4%ஆக மாறியுள்ளது. இது பணத்தின் பெறுமதி அதிகரிப்பைக் காட்டுகின்றது. இங்கு செயற்பாட்டு ஆரம்பத்தில் காணப்பட்ட ஒதுக்குப் பணமானது ஒரு நாட்டின் பணநிரம்பலுக்கு அடிப்படையாகவுள்ள நிதிச் சொத்தாக காணப்படுகின்றது.

- பொதுமக்களால் வைத்திருக்கும் நாணயம்
- வர்த்தக வங்கிகளிடமுள்ள நாணயம்
- மத்திய வங்கியிலுள்ள வர்த்தக வங்கிகளின் ஒதுக்குகள்

போன்றன காணப்படும். அண்மைய காலங்களில் ஒதுக்குப் பணம் அதிகரித்துக் கொண்டு செல்கின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறு ஒதுக்குப் பண அதிகரிப்பில் செல்வாக்குச் செலுத்தும் முக்கியமாக அமைவது மத்திய வங்கி அரசுக்கு வழங்கிய தேறிய கடன்கள் ஆகும். இவ்வாறான கடன்களில் முக்கியம் பெறுவது திறைசேரி முறிகளாகும். மேலும் ஒதுக்குப் பணத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக

1. மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள்
   - மத்திய வங்கி அரசுக்கு வழங்கிய தேறிய கடன்கள்
   - மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுக்கு வழங்கிய தேறிய கடன்கள்
2. மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்
3. மத்திய வங்கியின் தேறிய ஏனைய சொத்துக்கள் என்பன அமையும்

தற்போது இலங்கை மத்திய வங்கியானது பணக்கொள்கையை நடைமுறைப்படுத்த செயற்பாட்டு இலக்காகக் காணப்படும் சராசரி நிறைவேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வசதி வீதங்கள் வங்கிகளுக்கிடையிலான அழைப்புக்கடன் வீதங்கள் தொடர்பாக வட்டி வீதம் செல்வழியொன்றாக அமைக்கப்படுவதுடன் இச் செல்வழியின் மேல் எல்லையாக துணைநில் வைப்பு வசதி வீதமும் அமைகின்றது.

இவற்றுக்கிடையிலான வீதம் சராசரி நிறைவேற்றப்பட்ட அழைப்பு பணவீதம் மிகை திரவத்தன்மையைக் கட்டுப்படுத்த எடுக்கும் வழியாக செயற்படும் இடைநிலை மாறியாக செயற்படும் விரிந்த பணநிரம்பலானது குறுகிய பணநிரம்பலுடன் பொதுமக்களின் பெயரில் வர்த்தக வங்கிகளில் உள்ள சேமிப்புத் தவணை வைப்புக்களாகும். இவ் $M_2$ பண நிரம்பலைத் தீர்மானிக்கும் காரணிகளாக,

1. வங்கி முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்து.
2. வங்கி முறையினால் அரசுக்கு வழங்கப்பட்ட கடன்கள்.
3. வணிக வங்கிகளால் தனியார்துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள்.
4. வங்கி முறையின் ஏனைய சொத்துக்கள் என்பவையாகும்.

மேலும் பணக்கொள்கையை நடைமுறைப்படுத்தத் தெரிவு செய்துள்ள இறுதி இலக்க மாறியாகக் காணப்படுவதே பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடாக அமைகின்றது. இது மத்திய வங்கியின் குறிக்கோளாக அமைகின்றது.

இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகளில் மிக முக்கியமான தொழிற்பாடுகளாக பொருளாதார விலை உறுதிப்பாடு மற்றும் நிதிக் கொள்கையின் நிலைபேறு ஆகிய நோக்கங்களை அடைவதற்காக பண நிரம்பல் மற்றும் வட்டி வீதம் போன்றவற்றின் மீது செல்வாக்குச் செலுத்துவதற்காக பணக்கருவிகளைச் செயற்படுத்தும் செயற்பாடாக அமைவதே நாணயக் கொள்கை எனலாம். இந்நாணயக் கொள்கையானது பின்வரும் கருவிகளைப் பயன்படுத்துகின்றது.

**தொகைக் கடன் கட்டுப்பாட்டுக் கருவிகள்**

**பண்பு ரீதியான கடன் கட்டுப்பாட்டுக் கருவிகள்**

தொகைக் கட்டுப்பாட்டுக் கருவிகளாவன:

1. கொள்கை ரீதியான வட்டிவீதங்கள்
   a. வங்கி வீதம்
   b. துணைநில் வைப்பு வசதி வீதம்
   c. துணைநில் கடன் வசதி வீதம்
2. பகிரங்க சந்தை நடவடிக்கை

மத்திய வங்கி வணிக வங்கிகளுடன் மேற்கொள்ளும் சில நடவடிக்கைகளின் போதே இவ் கொள்கை வட்டி வீதம் பயன்படுத்தப்படுகின்றது. இவ் ஒவ்வொரு வங்கி வீதமானதும் மத்திய வங்கியினால் வணிக வங்கிகளுக்கும் மத்திய வங்கி இறுதிக் கடன் ஈவோனாக கடன் வழங்கும் போது அறவிடப்படும் வட்டி வீதத்தை வங்கி வீதம் என்பர். இவ்வங்கி வீதத்தை அடிப்படையாகக் கொண்டுதான் வணிக வங்கிகளும் தாம் வழங்கும் கடன்களுக்கு வட்டி வீதத்தைத் தீர்மானிக்கும்.

வங்கி வீதம் அதிகரித்தால் → வணிக வங்கிகளின் கடன்களுக்குரிய வட்டி வீதம் அதிகரிக்கும் → கடனின் செலவு கூடும் → கடன்களுக்கான கேள்வி குறையும் கடனாக்கம் கட்டுப்படும் → பணநிரம்பலில் ஏற்படும் விரிவு குறையும்.

துணைநில் வைப்பு வசதி வீதம் என்பது பணச்சந்தையில் மிகைத் திரவத்தன்மை உள்ளபோது அதனை தனக்குள் உறிஞ்சும் முகமாக மத்திய வங்கி குறுங்கால பிணைகளை வணிக வங்கிகளுக்கு வழங்கி அங்கிருந்து மேலதிகமான நிதியை தனக்குள் எடுக்கும் போது வழங்குகின்ற வட்டி வீதம் ஆகும்.

வங்கிகளுக்கிடையிலான அழைப்புக்கடன் சந்தையில் வட்டி வீதத்தில் கீழ் எல்லை தீர்மானிக்கப்படும் . 2016ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்படி துணைநில் வசதி வீதம் 7.00% அமைகின்றது.

துணைநில் கடன்வசதி வீதம் என்பது பணச்சந்தையில் திரவப் பற்றாக்குறை உள்ளபோது அதனை நீக்கும் முகமாக மத்தியவங்கி வணிக வங்கிகளுக்கு நிதியைப் பாய்ச்சும் போது அறவிடுகின்ற வட்டிவீதம் துணைநில் கடன்வசதி வீதம் ஆகும். இவ் வீதம் வங்கிகளுக்கிடையிலான அழைப்புக்கடன் வட்டி வீதத்தில் மேல் எல்லையைத் தீர்மானிக்கும்.

2016ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்படி 8.5% ஆகவும் காணப்படுகின்றது. பகிரங்கச் சந்தை நடவடிக்கை பணச்சந்தையின் திரவத்தன்மையிலும் வட்டி வீதத்திலும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக அரச ஆவணங்கள், பிணைகளை மத்திய வங்கி விற்பனை கொள்வனவு செய்யும் நடவடிக்கை ஆகும். இதன் நோக்கங்கள் 2 வகைப்படும்.

1. வட்டி வீதம் பற்றிய உச்ச வரையறையை நிச்சயிப்பதற்காகப் பயன்படுத்தல்.
2. வணிக வங்கிகளின் புழக்கப்பண ஒதுக்குகளை மாற்றி பணநிரம்பலில் தாக்கத்தை ஏற்படுத்துதல்.

சட்ட ஒதுக்குத் தேவையை நோக்குமிடத்து மத்திய வங்கியில் வைத்திருக்க வேண்டுமென தேவைப்படும் தமது ரூபா வைப்பிலான பொறுப்புக்களின் சதவீதமே நியதி ஒதுக்குத் தேவையாகும். ரூபாவில் பேணப்படும் கேள்வி வைப்பு, நிலையான வைப்பு, சேமிப்பு வைப்பு என்பவற்றுக்கு வெவ்வேறு அளவில் அல்லது பொதுவான ஒரு வீதமாக இது தீர்மானிக்கப்படலாம்.

பண்பு ரீதியான கடன்கட்டுப்பாட்டுக் கருவிகளாக:

1. கடன் எல்லையைத் தீர்மானித்தல்.
2. கடன்களுக்கான பிணைகளைத் தீர்மானித்தல்.
3. தெரிவுசெய்யப்பட்ட வட்டி வீதங்களைத் தீர்மானித்தல்.
4. நல்வழிப்படுத்துதல்.
5. மீள் நிதியிடல் வசதிகள் என்பவற்றைக் குறிப்பிட முடியும்.

மேலும் நாணயக் கொள்கையைப் பயன்படுத்துவதற்கு பல்வேறு வரையறைகள் காணப்படுகின்றது. வணிக வங்கிகளிடம் மிகை ஒதுக்குகள் காணப்படுகின்ற போது சட்டப் படியான ஒதுக்கு வீத மாற்றத்தினூடாக பணநிரம்பலைக் கட்டுப்படுத்த முடியாது.

- வங்கி வீதம் → பொருளாதாரத்தில் அதிக வருமானம் உழைக்கக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படும் போது வங்கி வீதம் அதிகரிப்பானது பணநிரம்பலைக் கட்டுப்படுத்தமாட்டாது.
- பகிரங்க சந்தை → வளர்ச்சியடைந்த நிதிச் சந்தை காணப்படாதவிடத்து பகிரங்க சந்தை நடவடிக்கை ஊடாக பணிநிரம்பலைக் கட்டுப்படுத்த முடியாது.

### ❒ நாணயக் கொள்கையின் புதிய போக்குகள்

**2016.01.01** - இல் ஆரம்பிக்கும் ஒதுக்குக் காலத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நியதி ஒதுக்கு வீதமானது 1.50% புள்ளிகளால் 7.50% ஆக அதிகரித்துள்ளது.

**2016.02.19** - துணைநில் வைப்பு வசதி வீதம், துணைநில் கடன் வழங்கல் வீதம் என்பன முறையே 6.50% ஆகவும் 8.00% ஆகவும் அதிகரித்துள்ளது.

**2016** - துணைநில் வைப்பு வசதி வீதம், துணைநில் கடன் வழங்கல் வீதம் என்பன முறையே 7.00% ஆகவும் 8.50% ஆகவும் அதிகரித்துள்ளது.

**2016.04.24** - துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வீதம் என்பன 25 அடிப்படைப் புள்ளிகளால் 7.25% ஆகவும் 8.75% ஆகவும் அதிகரித்துள்ளது.

**உசாத்துணை நூல்கள்**

- WWW.cbsl.sov.lk
- Wikipedia
- பொருளியல் - 4 வே.கருணாகரன்

# நாணயங்களை வெளியீடு செய்தல்

செல்வி சி.மேரி ஜெனிபர்
2018 வர்த்தகப்பிரிவு

இலங்கையில் தாள், குற்றி நாணயங்களை வெளியீடு செய்யும் அரச அமைப்பாக மத்திய வங்கி விளங்குகின்றது. இலங்கையின் நாணய அலகு ரூபாய் என்பதுடன் மத்திய வங்கியின் நிதி அமைச்சின் அங்கீகாரத்துடன் பல்வேறு பெறுமதிகளையும் பல்வேறு வடிவங்களையும் கொண்ட நாணயக் குற்றிகளையும், தாள்களையும் Thomes Dela Rue Company Limited அச்சிடும் அமைப்பாக விளங்குகின்றது. மத்திய வங்கியினால் வெளியிடப்படும் இந்நாணயங்களானது பொருட்கள் சேவைகளின் கொடுக்கல் வாங்கல்களிற்கு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்படுவதுடன் முதன்மையான கொடுப்பனவு ஊடகமாகவும் விளங்கின்றது.

ஒரு நாட்டில் மத்திய வங்கியால் நாணயத் தொகையானது நாணயக் கொள்கையால் தீர்மானிக்கப்படுவதோடு எவ்வளவு தொகை நாணயக் குற்றிகளாகவும், தாள்களாகவும் சுற்றோட்டத்தில் இருக்கும் என்பது பொதுமக்களின் விருப்பத்துடன் கொடுக்கல் வாங்கல் தொழில்நுட்பத்தின் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது. தொழில்நுட்ப கொடுக்கல் வாங்கல் முறைகள் முன்னேற்றமடைவதன் காரணமாக தாள், குற்றி நாணயங்களின் சுற்றோட்டம் ஒப்பீட்டளவில் வீழ்ச்சியடைந்து தாள்களல்லா பணக் கொடுப்பனவு பிரபல்யமடைந்தது.

- **நாட்டிலுள்ள வெளிநாட்டு வளங்களின் / ஒதுக்குகளின் முகாமைத்துவம்**

எந்தவொரு நாட்டிலும் ஒரு மத்திய வங்கியின் முதன்மையான கடமையாக உள்ள வெளிநாட்டு ஒதுக்கைப் பேணுவதனுள் தங்கம், பன்னாட்டு நாணய ஒப்படைப்பு கருவிகள் வெளிநாட்டு மத்திய வங்கிகள் திறைசேரி மற்றும் வங்கியிலுள்ள வைப்புக்கள், வெளிநாட்டு திறைசேரி பிணையங்கள் மற்றும் வெளிநாட்டு நாணயங்கள், வெளிநாட்டு ஒதுக்குகளிற்கு உரியனவாக இவ் ஒதுக்குகள் அலுவல்சார் ஒதுக்குகள் எனக் குறிப்பிடுவதுடன், வெளிநாட்டு ஒதுக்குகள் அதிகளவு வீழ்ச்சியடைகின்ற போது வெளிநாட்டு மத்திய வங்கியிடமிருந்தும் அரசிடமிருந்தும் கடன்களைப் பெறுதல் பல்வேறு நாணய நிதியத்தின் துணைநில் கடன் வசதியின் கீழ் கடன்களைப் பெறுதல் இவ்வாறு வெளிநாட்டு ஒதுக்குகளைப் பேணல் நாட்டினுள் நாணய வெளியீட்டிற்கான ஒரு வழிமுறையாக உள்ளது.

- **அரசாங்கத்தின் வங்கியாளர், நிதிசார் முகவர் மற்றும் மதியுரையாளர் ஏற்றவாறு செயலாற்றல்.**

பல்வேறு நாட்டு நாணய நிதியம் அரசுகள் மற்றும் அரச நிறுவனங்கள் ஆகிய வற்றுடன் நடைபெறுகின்ற கொடுக்கல் வாங்கலின் போது அரசாங்கத்தைப்

பிரதிநிதித்துவப்படுத்தல் மற்றும் பல்வேறு சட்டங்கள் வேலைத்திட்டங்களின் கீழ் முகவர் கடமைகளை நிறைவேற்றுதல் ஆகியவற்றை மேற்கொள்ளுதல் அரச முகவராக செயலாற்றுதலே மத்திய வங்கியின் செயலாற்றலாகும். ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் கீழ் நிதிய முகாமைத்துவத்தையும் செலாவணி சட்டத்தின் கீழ் செலாவணி சட்ட ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தலும் நிதிக்கம்பனிச் சட்டத்தின் கீழ் நிதிக்கம்பனிகளின் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறையாக்கல்களையும் கொடுப்பனவுகள், தீர்ப்பனவுகள் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தலை உதாரணங்களாகக் காட்டலாம். இத்தகைய முகவர் கடமைகளின் மூலமும் மத்திய வங்கி தனது குறிக்கோள்களை நிறைவேற்றுகின்றது.

- **வங்கிகள் நிதி நிறுவனங்கள் மற்றும் கொடுப்பனவு முறைகளின் பொருட்டு மேற்கொள்ளப்படுகின்ற பணிகள்.**

மத்திய வங்கி எந்தவொரு நாட்டிலும் நிதியியல் முறைமையை உறுதியாகப் பேணிவருவதை அடிப்படைப் பொறுப்பாகக் கொண்டுள்ளது. இதற்கு உதாரணமாக அமைபவை வங்கிகளையும் நிதி நிறுவனங்களையும் மேற்பார்வை செய்தல். இதனுள் வர்த்தக வங்கிகள், சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், நிதிக்கம்பனிகள், தவணைக் குத்தகை கம்பனிகள் மற்றும் அரச பிணையங்கள் தொடர்பான முதற்தரச் சந்தை கம்பனிகளைப் பதிவு செய்தல் முன்மதிப்புடைய தேவைகளை விதித்தல் நிறுவனங்களின் இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பில் பரீட்சிப்புக்களை நடத்துதல் மற்றும் அறிவுரை வழங்குதல், தீர்ப்பதற்கு முடியாத பலவீனமான நிறுவனங்களில் பதிவை ரத்து செய்தல், ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் ஆகிய விடயங்களை இவற்றிற்கான சட்ட ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு வங்கி அல்லது நிதி நிறுவனம் தொடர்பிலும் பிணைகளை விற்பதற்கோ அல்லது வாடிக்கையாளர்களின் வைப்பு மற்றும் கடன் தொடர்பிலான வைப்பை ஏற்பதற்கோ மத்திய வங்கிச் சட்டத்தின் பிரகாரம் முடியா திருப்பினும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு பற்றிய பொறுப்பு மத்திய வங்கிக்கு உண்டு. வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் திரவத்தன்மைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக உடனடியாக கடன் வழங்குதல், வைப்புக்கள் மற்றும் கடன் தொடர்பில் மத்திய வங்கி பிணைக் காப்பீடுகளை வழங்குதல், பலவீனமான நிறுவனங்களை சிறந்த நிறுவனங்களுடன் இணைத்தல், நிதி நிறுவனங்களுக்கு புதிய பணிப்பாளர் சபைகளையும் முகாமைத்துவத்தையும் நியமித்தல் ஆகியவை நிதி நெருக்கடிகளின் போது நிதியியல் முறைகளைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற சாதாரண வழிமுறையாகும்.

- **வர்த்தக வங்கிகளின் வங்கிகளாகச் செயற்படுதல்**

வங்கிகளின் கணக்குகளைப் பேணி வருதல், வங்கிகளுக்கு இடையிலான கொடுப்பனவு தீர்ப்பனவு செய்தல், குறுங்காலக் கடன் வசதிகளை வழங்கல் ஆகியவை இவற்றுள் உள்ளடக்கப்படுகின்றது. அரச பிணையங்கள் பற்றிய துணைநில் கடன் வசதி உடன்படிக்கையின் ஊடாகவே கடன் வழங்கப்படுவதுடன் கணக்குகளைப் பேணிவருதல் மற்றும் துணைநில் கடன்வசதி பணியானது வர்த்தக வங்கிகளுக்கு மேலதிகமாக அரச பிணையங்களுடன் தொடர்புட்ட முதல்நிலை வணிகர்களுக்கும் வழங்கப்படும்.

- **கொடுப்பனவு தீர்ப்பனவு முறைமையைப் பேணிவருதல்**

மத்திய வங்கியானது வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களுக்கு மத்தியில் கொடுப்பனவு தீர்ப்பனவுகளை மேற்கொள்ளும் பொருட்டு கணினியைப் பயன்படுத்தி


மத்திய வங்கியால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த காசோலை கொடுப்பனவு தீர்ப்பனவு முறை இன்று மத்திய வங்கிக்கும், வணிக வங்கிக்கும் கூட்டு உரிமையான Lanka Clear Company ( pvt )Ltd இடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதேநேரம் மொத்த கொடுப்பனவு தீர்ப்பனவு முறை மற்றும் ஆவணப்படுத்தப்படாத பிணைப்பத்திர தீர்ப்பனவு முறை என்பன மத்திய வங்கியால் பேணி வரப்படுகின்ற கொடுப்பனவு தீர்ப்பனவு முறைகளாகும்.

ஆவணப்படுத்தப்படாத பிணைப்பத்திர தீர்ப்பனவு முறையின் மூலம் அரச பிணைப்பத்திரங்களான திறைசேரி உண்டியல்கள், திறைசேரி பிணையங்கள் போன்றவற்றை ஆவணம் இல்லாமல் கணினி ஊடாக கொடுக்கல் வாங்கல் செய்யவென மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்டது இதுவாகும். அச்சிடப்படாத ஆவணங்கள் களவு போதல், தொலைதல் போன்ற சம்பவங்கள் இடம்பெறுகின்ற போது இம் SSSS முறையின் மூலம் முதலீட்டாளரின் அச்ச நிலையைத் தடுப்பதுடன் காலதாமதம் இல்லாமல் முதலீட்டாளர்களுக்கு அன்றைய தினமே ஆவணங்களின் உரிமையை கிடைக்கச் செய்வதாகவும் இம்முறை அமைகின்றது. இம் SSSS முறையை Lanka Secure எனவும் அழைப்பர்.

நிதி நிறுவனங்களிடையே நிகழும் பெரிய பெறுமதி கொண்ட அக்கொடுக்கல் வாங்கலை இலகுவாகவும் விரைவாகவும், நம்பகமாகவும் மேற்கொள்வதற்கு மத்திய வங்கியில் அறிமுகப்படுத்தப்பட்ட இலத்திரனியல் முறையிலான கொடுப்பனவு தீர்ப்பனவு முறையாக அமைவது அதேநேரம் மொத்த கொடுப்பனவு தீர்ப்பனவு முறையாகும். இவ் RTGS முறையினுள் மத்திய வங்கி, உரிமம் பெற்ற வணிக வங்கிகள் முதல்நிலை வணிகர்கள், ஊழியர் சேமலாப நிதியம் போன்ற அமைப்புக்கள் அங்கம் வகிப்பதுடன் காலதாமதமின்றியும் குறைந்த செலவுடனும் நட்ட அச்சம் பற்றிய பயம் இன்றியும் தீர்ப்பனவு பதிவுகளை மிக விரைவாகவும் திருத்தமாகவும் இம்முறை மூலம் மேற்கொள்ளலாம்.

**உசாத்துணை நூல்கள்**


- WWW.cbsl.sov.lk
- மத்திய வங்கியின் கையேடு
- ஆசிரியர் வழிகாட்டி

# தேசிய வருமானக் கணக்கீட்டில் உற்பத்தி அணுகுமுறை

**செல்வி ட.சறோமி**
2018 வர்த்தகப்பிரிவு

ஒரு நாட்டினுடைய உற்பத்தி, வருமானம் மற்றும் செலவுப் பாய்ச்சல்களின் பெறுமதியைக் கணிப்பிடுதலே தேசிய கணக்கீடு ஆகும். தேசிய வருமானக் கணக்கீட்டினை உற்பத்தி அணுகுமுறை, செலவு அணுகுமுறை, வருமான அணுகுமுறைகளினூடாக மேற்கொள்ள முடியும். இம்மூன்று அணுகுமுறைகளில் எவ் அணுகு முறைகளைப் பயன்படுத்தி தேசிய வருமானக் கணக்கீட்டினை மேற்கொண்டாலும் பெறப்படும் பெறுமானம் ஒன்றுக்கொன்று சமனாகவே காணப்படும். தேசிய கணக்கீட்டில் பொருளாதாரத்தில் பொருளாதாரப் பரப்பு, வதிவிடத்தன்மை, நிறுவன அலகுகள் உள்ளடக்கப்படுகின்றன.

அந்தவகையில் பொருளாதாரப் பரப்பு என்பது தேசிய கணக்கீட்டின் பரந்த கருத்துடையது. இப் பொருளாதாரப் பரப்பாக

1. நாட்டின் நிலப்பரப்பு
2. நாட்டின் வான் பரப்பு
3. நாட்டின் சர்வதேச கடற்பரப்பு
4. ஏனைய நாடுகளில் அமைந்துள்ள குறித்த நாட்டுக்கு சொந்தமான பிரதேசங்கள்.

வதிவிடத் தன்மை என்பது ஒரு வருடத்திற்குக் குறைந்த காலப்பகுதியில் வெளிநாட்டில் வாழும் சேவையாற்றும் அதிகாரிகள், வர்த்தகர்கள், சுற்றுலாப் பயணிகள், கலைமானிகள், கப்பல்கள் ஏனைய வாகனங்களில் வேலை செய்பவர்கள், வெளிநாட்டில் கல்வி பயிலும் மாணவர்கள், வெளிநாட்டு தூதரகங்களில் பணியாற்றும் சுதேசிகள் கருதப்படுவர். நிறுவன அலகு என்பது சொத்துக்களை உரிமை கோருவது, பொறுப்புக்களை ஏற்றல், பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடல் மற்றும் ஏனைய நிறுவன அலகுகளுடன் தொடர்புகளைப் பேணும் பொருளாதார அலகு நிறுவன அலகு என அழைக்கப்படும். இப் பொருளாதார பரப்பில் செயற்படும் நிறுவனங்களாக 5 வகை நிறுவனங்களைக் குறிப்பிட முடியும். அவையாவன,

1. நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள்
2. நிதிக் கூட்டுத்தாபனங்கள்
3. பொது அரசாங்கத்துறை
4. வீட்டுத்துறைக்கு சேவை வழங்கும் இலாப நோக்கமற்ற நிறுவனங்கள்
5. வீட்டுத்துறை அலகுகள்

என்பவையாகும், புதிய தேசிய கணக்கீட்டு அணுகுமுறையின் கீழ் இப் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுகின்ற நிறுவன ரீதியான துறைகளை இலங்கை மத்திய வங்கியானது

1. நிதிசாரா கூட்டுத்தாபனம்

2. நிதிசார் கூட்டுத்தாபனம்

3. பொது அரசாங்கம்

4. வீட்டுத்துறை மற்றும் நிறுவனத் துறைக்கு பணிபுரியும் இலாபம் ஈட்டாத நிறுவனங்கள் என வகைப்படுத்தியுள்ளது.

தேசிய கணக்கீட்டின் வரம்புகளாக உற்பத்தி வரம்பு, நுகர்வு வரம்பு, சொத்து வரம்பு என்பன காணப்படுகின்றன. சந்தையை நோக்காகக் கொண்ட உற்பத்தியாளர்கள், சந்தையை நோக்காகக் கொள்ளாத உற்பத்தியாளர்கள், சுயதேவையின் பொருட்டு உற்பத்தியில் ஈடுபடுவோர் ஆகிய உற்பத்தியாளர்கள் உற்பத்தி வரம்பினுள் இயங்குகின்றனர்.

இந்தவகையில்தேசிய வருமானக்கணக்கீட்டில்உற்பத்திவழியிலானஅணுகுமுறையை நோக்குமிடத்து குறிப்பிட்ட ஒரு வருட காலப்பகுதியில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவுப் பொருட்கள், சேவைகளினுடைய பணரீதியான பெறுமதியினைக் கணிப்பிடுவதன் ஊடாக தேசிய வருமானத்தைக் கணிப்பிடுதல் உற்பத்தி அணுகுமுறை தேசிய கணக்கீடு எனப்படும். உற்பத்தி அணுகுமுறையில் மொத்தக் கூட்டப்பட்ட பெறுமதியானது மிக முக்கிய இடம் வகிக்கின்றது. உற்பத்தி செயன்முறையில் புதிதாக உருவாக்கப்பட்ட பெறுமதி மொத்த கூட்டப்பட்ட பெறுமதி என அழைக்கப்படும். அதாவது மொத்த வெளியீட்டில் இருந்து இடைநிலை நுகர்வுகளை நீக்கிய பின் உள்ள பகுதி இதுவாகும்.

| மொத்த கூட்டப்பட்ட பெறுமதி | = | மொத்த வெளியீட்டுப் பெறுமதி | - | இடைநிலை நுகர்வுகள் |
|---|---|---|---|---|
| GVA | = | GVO | - | IC |

எனவே மொத்த வெளியீட்டுப் பெறுமதி, இடைநிலை நுகர்வுகள் என்பன மொத்த கூட்டிய பெறுமதியைத் தீர்மானிக்கும் காரணி என்றால் மறுக்கமுடியாது. குறிப்பிட்ட ஒருநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவுப் பொருட்கள் சேவைகளின் பெறுமதியே மொத்த வெளியீட்டுப் பெறுமதி எனவும், குறித்த ஒரு உற்பத்தி நடவடிக்கையின் போது ஏனைய நிறுவனங்களிடம் இருந்து பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்படும் செலவின் மொத்தப் பெறுமதி இடைநிலை நுகர்வு எனவும் அழைக்கப்படும்.

அந்தவகையில் நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர் மீது விதிக்கப்படும் வரிகள் மற்றும் மானியங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு

1. அடிப்படை விலை

2. உற்பத்தியாளர் விலை

3. கொள்வனவாளர் விலை

என மூன்று வகையான விலைகள் விவாதிக்கப்படுகின்றது. அடிப்படை விலை யான்து உற்பத்தி செய்யப்பட்ட ஒரு அலகு பொருள் மற்றும் சேவைக்காக கொள்வன வாளரிடமிருந்து உற்பத்தியாளர்களால் பெறப்படக்கூடிய விலையினையே அடிப்படை விலை என்பர். இவ்விலையில் பொருட்கள் மீதான வரி நீக்கப்பட்டு பொருட்கள் மீதான மானியம் உள்ளடக்கப்படுகின்றது. உற்பத்தியாளர் விலையானது உற்பத்தி செய்யப்படும் இடத்திலிருந்து விற்பனையாளரை நோக்கி பொருட்கள் செல்லும் போது உற்பத்தியாளரினால் அறவிடப்படும் விலையாகும். உற்பத்தியாளர் விலையை அளவிடும் காரணிகளாக அடிப்படை விலை, உற்பத்தி மீதான மானியங்கள், உற்பத்தி மீதான வரிகள் என்பனவாகும்.

| உற்பத்தியாளர் விலை | = | அடிப்படை விலை | + | உற்பத்தி மீதான வரி | + | உற்பத்தி மீதான மானியம் |
|---|---|---|---|---|---|---|

கொள்வனவாளர் விலை என்பது குறித்த ஒரு பொருள் அல்லது சேவைக்காக நுகர்வோர் உண்மையில் செலுத்தும் விலை ஆகும். இவ்விலையைத் தீர்மானிக்கும் காரணிகளாக உற்பத்தியாளர் விலை, போக்குவரத்துச் செலவு, வணிக விளிம்பு, நுகர்வோர் வரி என்பனவாகும்.

| கொள்வனவாளர் விலை | = | உற்பத்தியாளர் விலை | + | போக்குவரத்து செலவு | + | வணிக விளம்பு | + | நுகர்வோர் வரி |
|---|---|---|---|---|---|---|---|---|

இந்த அடிப்படையில் அடிப்படை விலையைத் தீர்மானிக்கும் காரணிகளான பொருட்கள் மீதான வரிகள், பொருட்கள் மீதான மானியங்கள் என்னவென்று நோக்குவோமானால் ஒரு அலகு வெளியீட்டின் மீது விதிக்கப்படும் வரி பொருட்கள் மீதான வரி எனவும் ஒரு அலகு வெளியீட்டின் மீது பெறப்படும் மானியங்கள் பொருட்கள் மீதான மானியம் எனவும் இவற்றிற்கு

உதாரணமாக :- விற்பனை வரி, சேவை வரி, கலால் வரி, உணவு மானியம், வட்டி வீத மானியம், பெற்றோலியம் மீதான மானியம் என்பவை கருதப் படுகின்றன.

அவ்வாறே உற்பத்தியாளர் விலையைத் தீர்மானிக்கும் காரணிகளாக உற்பத்தி மீதான வரி, உற்பத்தி மீதான மானியம், என்னவென்று நோக்குவோமானால் இலாபம் மற்றும் விற்பனை அளவினைக் கருத்தில் கொள்ளாது உற்பத்தியைச் செய்வதற்காக தொழில் வழங்குநரால் அல்லது நிறுவனத்தால் செலுத்தப்படக்கூடிய வரிகளே உற்பத்தி மீதான வரிகள் ஆகும். இதற்கு உதாரணமாக அனுமதிப் பத்திர வரி, நிலவரி, தொழில் மீதான வரி என்பவையாகும். உற்பத்தியுடன் சம்பந்தப்பட்டதாகப் பெறப்படுகின்ற அல்லது வழங்கப்படுகின்ற மானியம் உற்பத்தி மீதான மானியம் ஆகும், உற்பத்தி மானியமான உண்மை உற்பத்தியளவுடன் சுதந்திரமானதாகும். உதாரணமாக :- விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற மானியம், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மானியம், றெயில்வே மானியம் என்பனவாகும்.

இலங்கை மத்திய வங்கியானது உற்பத்தி வழிமுறையின் கீழ் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் மொத்த தேசிய வருமானத்தை கணிப்பீடு செய்யும் முறையைக் காட்டியுள்ளது.

| | பொருளாதார நடவடிக்கை | தொகை |
|---|---|---|
| 01 | வேளாண்மை காடாக்கல் மற்றும் மீன்பிடித்தல் | XXXX |
| 02 | கைத்தொழில் | XXXX |
| 03 | பணிகள் | XXXX |
| 04 | (1+2+3) அடிப்படை விலையில் மொத்த கூட்டிய பெறுமதி | XXXX |
| 05 | பொருட்கள் மீதான மானியங்கள் நீங்கலான வரிகள் | XXXX |
| 06 | (4+5) சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | XXXX |
| 07 | வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் | XXXX |
| 08 | (6+7) சந்தை விலையில் மொத்த தேசிய வருமானம் | XXXX |

இந்த அடிப்படையில் வேளாண்மை காடாக்கல் மற்றும் மீன்பிடித்தலில் உள்ளடக் கப்படும் விடயங்களாக சிலவற்றைக் கூறலாம். தானியங்களின் வளர்ச்சி, அரிசியின் வளர்ச்சி, காய்கறிகளின் வளர்ச்சி, தேயிலையின் வளர்ச்சி பச்சையிலைகள், ஏனைய குடிபானங்களின் வளர்ச்சி, இறப்பரின் வளர்ச்சி, ஏனைய நீண்டகாலப் பயிர்களின் வளர்ச்சி, விலங்கு உற்பத்தி, தாவர இனவிருத்தி, காடாக்கலும் குத்திகளும், மீன்பிடித்தல் என்பவையாகும். அவ்வாறே கைத்தொழில் துறையிலும், பணிகள் துறையிலும் விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன.

சுரங்கம் அகழ்தலும் கல்லுடைத்தலும், தயாரிப்பு, மின்சாரம், வாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல், நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல், கழிவுநீர் கழிவுப் பொருள் சுத்திகரிப்பு, நிர்மாணம் ஆகியவை கைத்தொழில் துறைக்குள்ளும் மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல், தகவல் மற்றும் தொடர்பூட்டல், நிதியியல் காப்புறுதி மற்றும் வதிவிடச் சொத்துரிமை உள்ளடங்கலாக உண்மைச் சொத்து நடவடிக்கைகள், தொழில்சார் பணிகள், பொது நிர்வாகம் பாதுகாப்பு மனிதநலம், சமூகசேவைகள் என்பன பணிகள் துறையினுள்ளும் உள்ளடக்கப் படுகின்றது.

இந்த அடிப்படையில் அடிப்படை விலை மொத்தக் கூட்டிய பெறுமதியானது இம் மூன்று துறைகளைக் கூட்டுவதன் மூலம் பெறப்படுகின்றது. அவ்வாறே சந்தை விலை யில் மொத்த உள்நாட்டு உற்பத்தியைத் தீர்மானிக்கும் காரணிகள் அடிப்படை விலை மொத்தக் கூட்டப்பட்ட பெறுமதி, பொருட்கள் மீதான மானியம் கழித்த வரி என்பன.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சந்தை விலை | | விவசாய | | கைத்தொழில் | | சேவைகள் | | பொருட்கள் |
| மொத்த உள்நாட்டு | = | கூட்டப்பட்ட | + | கூட்டப்பட்ட | + | கூட்டப்பட்ட | + | மீதான |
| உற்பத்தி | | பெறுமதி | | பெறுமதி | | பெறுமதி | | மானியம் |

இவ்வாறு சந்தைவிலை மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணிப்பிட முடியும்.

**உசாத்துணை நூல்கள்**

- கலாநிதி சின்னத்துரை விஜயகுமார் (தேசிய வருமானத்தில் புதிய மாற்றம்)
- புதிய தேசிய வருமான கணக்கீடு V. கருணாகரன்



# வங்கி முறைமையின் பணவாக்கத் தொழிற்பாடு

செல்வி நி.சுயானா
2018 வர்த்தகப்பிரிவு

வங்கிகள் பல்வேறான வாடிக்கையாளர்களுடன் மேற்கொள்கின்ற தொழிற்பாடுகளின் ஊடாக பொருளாதாரத்தின் செயலாற்றுகைக்கும், அபிவிருத்திக்கும் அத்தியாவசியமான பல நிதியியல் பணிகளை வழங்குகின்றன. வங்கிகளின் மேற்படி நிதியியல் தொழிற்பாடுகளில் தொடர்புகொள்கின்ற வாடிக்கையாளர்கள் பிரதானமாக மூன்று பிரிவுகளைச் சேர்ந்தவர்களாவர். அவர்கள் வருமாறு,

1) நிதியங்களை வழங்குகின்றவர்கள் அல்லது வங்கிகளில் பணத்தை முதலீடு செய்கின்றவர்கள் - பண வைப்புக்களின் உரிமையாளர்கள், கடன் கொடுத்தோர் மற்றும் பங்கு உடைமையாளர்கள் இதில் உள்ளடங்குகின்றனர்.

2) வங்கிக்கடன் வசதிகளைப் பெறுகின்றவர்கள் - இவர்கள் நீண்டகாலம் வங்கியில் வைப்புக்களைப் பேணிவருவதன் ஊடாக வங்கியின் நம்பிக்கையைப் பெற்று கடன் பெறுவதன் மூலம் தொடர்ந்தும் வங்கியின் நம்பிக்கையைப் பெற்றிருப்பவர்கள்.

3) பணக் கொடுப்பனவுகள் அல்லது பெறுகைகள் - பணக் கொடுக்கல் வாங்கல் மற்றும் பண முதலீட்டுடன் தொடர்புடையதாக வங்கியினால் வழங்கப்படுகின்ற பல்வேறான நிதியியல் பணிகளைப் பெறுகின்ற வாடிக்கையாளர்கள்.

## ❒ வங்கியின் தொழிற்பாடுகள்

ஒரு வங்கியில் காணப்படுகின்ற தொழில்துறை நடவடிக்கைகளை ஐந்தொகையில் உள்ளடங்குகின்ற நடவடிக்கைகள் மற்றும் ஐந்தொகைக்குப் புறம்பான நடவடிக்கைகள் என இரு வகையாகப் பிரிக்கலாம். ஒரு வங்கியின் ஐந்தொகையில் அதனைத் தயாரிக்கின்ற தினத்தன்று வங்கியினால் செலுத்த வேண்டிய பொறுப்புக்களும் வங்கியிலுள்ள சொத்துக்களுமே குறிப்பிடப்பட்டிருக்கும். வங்கியினால் பெறப்பட்டுள்ள நிதியங்களும், மேற்கொள்ள வேண்டிய கொடுப்பனவுகளுமே பொறுப்புக்களாகக் கருதப்படும். வைப்புக்கள், படுகடன்கள் மற்றும் உரிமையாளர்கள் வழங்கியுள்ள மூலதனம் ஆகியன அடிப்படை நிதிய மூலாதாரங்களாகும். இப்பணத்தை தொழிற்பாடுகளில் ஈடுபடுத்துகின்ற போது வங்கிக்கு சொத்துக்கள் உருவாகின்றன. வங்கியின் அன்றாட கொடுக்கல், வாங்கல்களுக்காக உள்ள பணம், பல்வேறான முதலீடுகள், பல்வேறான கடன்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் என்பன சொத்துக்களாகும்.

ஒவ்வொரு வங்கியும் தன்னிடம் வரும் வைப்புக்களில் ஒரு பகுதியை ஒதுக்காக வைத்துக்கொண்டு மீதியைக் கடன் வழங்குவதும் இக்கடன்கள் கேள்வி வைப்புக்களிடையே பரிமாற்றம் செய்யப்படுவதால் வங்கித்துறையினுள் ஆரம்பத்தில் வந்த வைப்பினைவிட பல மடங்கு பெறுமதி கொண்ட கொடுக்கல் வாங்கல்களை மேற்

கொள்ளக்கூடிய ஆற்றலை ஏற்படுத்துவதுமான கூட்டுச் செயன்முறையே பணவாக்க மாகும்.

$$\text{வைப்பாக்க பெருக்கி} = \frac{1}{\text{சட்டப்படியான ஒதுக்கு வீதம்}}$$

வங்கித் தொழில்முறை ஒன்றில் (வங்கி அமைப்பு) A,B,C,D என அதிக வணிக வங்கிகள் உள்ளதாகவும் ஆரம்பத்தில் A என்ற வங்கியில் ரூ 1000 வைப்பாகக் காணப்படுவதாகவும் காசு ஒதுக்குவீதம் 10% ஆகவும் கருதுக.

1. இவ்வங்கித் தொழிற்பாடுகளை அட்டவணைப்படுத்துக.

| வங்கிகள் | ஆரம்ப வைப்பு | தேவையான காசு ஒதுக்கு | மிகை ஒதுக்கு | கடன்கள் |
|---|---|---|---|---|
| A | 1000 | 100 | 900 | 900 |
| B | 900 | 90 | 810 | 810 |
| C | 810 | 81 | 729 | 729 |
| D | 729 | 72.90 | 656.10 | 656.10 |
| ஏனைய வங்கி | 6561 | 656.10 | 5904.90 | 5904.90 |
| எல்லா வங்கிகளும் (வங்கி அமைப்பு) | 10000 | 1000 | 9000 | 9000 |

A,B,C,D ஆகிய வங்கியின் ஐந்தொகை பின்வருமாறு அமையும்

**A வங்கி**

| | | | |
|---|---|---|---|
| வைப்பு | 1000 | ஒதுக்கு | 100 |
| | | கடன் | 900 |
| | 1000 | | 1000 |

**B வங்கி**

| | | | |
|---|---|---|---|
| வைப்பு | 900 | ஒதுக்கு | 90 |
| | | கடன் | 810 |
| | 900 | | 900 |

**C வங்கி**

| | | | |
|---|---|---|---|
| வைப்பு | 810 | ஒதுக்கு | 81 |
| | | கடன் | 729 |
| | 810 | | 810 |

**D வங்கி**

| | | | |
|---|---|---|---|
| வைப்பு | 729 | ஒதுக்கு | 72.90 |
| | | கடன் | 656.10 |
| | 729 | | 729.00 |

தனியுரிமை அல்லது ஒரு வங்கி முறையொன்று காணப்படும்போது ஒரு வங்கி மட்டுமே தொழிற்படுவதால் பணவாக்கம் செய்யமுடியும். ஆனால் பல வணிக வங்கிகள் உள்ள நிலையில் வங்கி அமைப்பில் உள்ள தனி ஒரு வங்கியினால் பணவாக்கம் செய்யமுடியாது. வணிக வங்கியின் கடனாக்கத்தைத் தீர்மானிக்கும் காரணிகளாக பின் வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- சட்டப்படியான ஒதுக்கு வீதம்.
- வணிக வங்கிக்கு கிடைக்கும் ஆரம்ப வைப்பின் அளவு.
- வணிக வங்கியிடம் உள்ள மிகை ஒதுக்கின் அளவு.
- மத்திய வங்கியின் கடன் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்.

❒ **கடனாக்க செய்முறைக்கான எடுகோள்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.**

- வங்கி அமைப்புக்கள் மிகை ஒதுக்குகளைப் பேணுவது இல்லை.
- வங்கி அமைப்புக்களுக்கு வெளியேயான நிதி வெளிப்பாய்ச்சல்கள் இடம்பெறுவது இல்லை.

- பொருளாதாரத்தில் கடன்களுக்கான கேள்வி பூரணமான கேள்வி காணப் படுகின்றமை.
- நடைமுறை வைப்புக்களில் இருந்து சேமிப்பு, தவணை, வைப்பு நோக்கி நிதி நகர்வு ஏற்படுவது இல்லை.

❑ **வணிக வங்கியொன்று பணத்தை உருவாக்குவது**

- தனது பிணயங்களை விற்பனை செய்வதன் மூலமாகும்.
- தனது ஒதுக்குகளை அதிகரிப்பதன் மூலமாகும்.
- தன்னிடமுள்ள மிகை ஒதுக்குகளை கடன் வழங்குவதன் மூலமாகும்.
- அதிகளவில் காசோலைகளை அச்சிடுவதன் மூலமாகும்.
- தன்னிடமுள்ள ஒதுக்குகளை ஆவணங்களாக மாற்றுவதன் மூலமாகும்.

❑ **வணிக வங்கியில் பணவாக்கச் செய்முறையில் பண வெளிப்பாய்ச்சல் நடைபெறும் வழிமுறைகள்**

- மத்திய வங்கி திறந்த சந்தையில் ஆவணங்களையும், பிணைகளையும் விற்பனை செய்தல்.
- வணிக வங்கிகள் மிகை ஒதுக்குகளைப் பேண விரும்புவதன் மூலம் வெளிப்பாய்ச்சல் ஏற்படுகின்றது.
- பொதுமக்கள் புழக்கப்பணத்தை தம் வசம் வைத்திருக்க ஆர்வம் காட்டுதல்.
- வணிக வங்கிகள் வைப்புக்கள், வங்கியல்லாத நிதி நிறுவனங்களை நோக்கி மாற்றமடைதல்.

❑ **வங்கியின் வைப்பாக்க பெருக்கி குறிப்பிடுமளவுக்கு உண்மையான வைப்புக்களின் உச்ச அதிகரிப்பு இடம்பெறாதிருப்பதற்கான காரணங்களாக:**

- வணிக வங்கிகள் மிகை ஒதுக்குகளை வைத்திருக்க விரும்புவதால் வைப்பாக்கம் குறைவடையும்.
- வங்கிக் கடனுக்கான கேள்வி குறைவடைதல்.
- வங்கி முறைமைக்கு வெளியே பண வெளிப்பாய்ச்சல் இடம்பெறுதல்.
- வட்டி வருவாய் உழைக்க கருதி கேள்வி வைப்புக்களில் ஒரு பகுதி சேமிப்பு, நிலையான வைப்புக்களாக மாற்றப்படுதல்.

J/HOLY FAMILY CON. LIBRARY DATE

❑ **கடனாக்கமும் அதன் வரையறையும்**

ஒரு பொருளாதாரத்தில் பல வணிக வங்கிகள் காணப்படும் நிலையில் தனித்து ஒரு வணிக வங்கியால் கடனாக்கம் செய்துகொள்ள முடியாது. ஏனெனில் அவ்வங்கியால் வழங்கப்படும் கடன்கள் மீளவும் அவ்வங்கிகளுக்கு வைப்பாகக் கிடைக்கப்பெறும் எனக் கூறமுடியாது. ஆனால் ஒரு பொருளாதாரத்தில் உள்ள அனைத்து வணிக வங்கிகளும் இணைந்து கடனாக்க செயற்பாட்டை மேற்கொள்ளமுடியும்.

பொருளாதாரத்தில் தனித்து ஒரே ஒரு வணிக வங்கி மட்டும் காணப்படுமாயின் அவ்வங்கி கடனாக்க செயற்பாட்டை மேற்கொள்ள முடியும். ஏனெனில் அவ்வங்கியால் வழங்கப்படும் கடன்கள் மீளவும் அவ்வங்கிக்கு வைப்பாகக் கிடைக்கும் என்பதேயாகும்.

உதாரணம் 1

வங்கித் துறை கட்டமைப்பிலுள்ள வணிக வங்கி ஒன்றின் ஐந்தொகை எளிமைப்படுத்தப் பட்டுள்ள வடிவம் பின்வருமாறு காட்டப்படுகின்றது.

| பொறுப்புக்கள் | | சொத்துக்கள் | |
|---|---|---|---|
| வைப்பு | 100000 | ஒதுக்கு | 22000 |
| | | பிணைகள் | 38000 |
| | | கடன்கள் | 40000 |
| | 100000 | | 100000 |

a) ஒதுக்கு வீதமானது 20% ஆயின், இவ்வங்கி வழங்கக்கூடிய புதிய கடன்களின் உச்ச அளவு யாது?

மிகை ஒதுக்கு = R – RR
= 22000 – 20000
= 2000 மில்லியன் ரூபா

தற்போதைய ஒதுக்கு
= 100000 x $\frac{20}{100}$
= 20000 மில்லியன் ரூபா

b) இம் மேலதிக அளவினை கடன் வழங்கிய பின்னர் வங்கியின் புதிய ஐந்தொகை எவ்வாறு இருக்கும் எனக் காட்டுக.

மிகை ஒதுக்கின் அளவினால் கடன் விரிவாக்கம் செய்யமுடியும் என்பதால் புதிதாக வழங்கக்கூடிய உச்சக் கடன் தொகை 2000 மில்லியன் ரூபா ஆகும்.

**ஐந்தொகை (மில்லியன் ரூபா)**

| பொறுப்புக்கள் | | சொத்துக்கள் | |
|---|---|---|---|
| வைப்பு | 102000 | ஒதுக்கு | 22000 |
| | | பிணைகள் | 38000 |
| | | கடன்கள் | 42000 |
| | 102000 | | 102000 |

c) இவ்வங்கி புதிய கடன்கள் பொருட்டு வழங்கிய காசோலைகள் யாவும் வங்கிக்கு எதிராக தீர்ப்பனவு செய்யப்பட்டதன் பின்னர் அதன் ஐந்தொகை எவ்வாறு அமையும்.

**ஐந்தொகை (மில்லியன் ரூபா)**

| பொறுப்புக்கள் | | சொத்துக்கள் | |
|---|---|---|---|
| வைப்பு | 100000 | ஒதுக்கு | 20000 |
| | | பிணைகள் | 38000 |
| | | கடன்கள் | 42000 |
| | 100000 | | 100000 |

**உதாரணம் 2**

சட்டப்படியான ஒதுக்கு வீதம் 15% எனவும் வங்கியானது ரூபா 30 மில்லியன் காசு ஒதுக்குகளையும் ரூபா 170 மில்லியன் கடன்கள், முதலீடுகள் என்பவற்றையும் ரூபா 200 மில்லியன் கேள்வி வைப்புக்களையும் கொண்டிருக்கின்றது எனவும் கருதுக.

- இவ்வங்கி, வங்கி முறைமை ஒன்றினுள் தொழிற்படுகின்றது எனக் கருதுக. இவ்வங்கி தனது கடன்களை விரிவுபடுத்த முடியுமா? காரணம் தருக.

  இல்லை, மிகை ஒதுக்குகள் இல்லாமையால் கடன் விரிவாக்கம் செய்யமுடியாது.

ER = R – RR
= 30 – (200 X 15/100)
= 30 - 30
= 0

d) ஒதுக்கு வீதமானது 10% ஆகக் குறைக்கப்படுமாயின் வங்கிக் கடன்களின் அளவில் ஏற்படும் அதிகரிப்பு அல்லது தேய்வு யாதாக இருக்கும்?

ER = R – RR
= 30 – 20
= 10m /=

தற்போதயை ஒதுக்கு
= 200 X 10/100
= 20

10மில்லியன் ரூபா அதிகரிக்கும்

உதாரணம் 03

வணிக வங்கி முறையொன்றின் கருதுகோள் ரீதியான ஐந்தொகை வருமாறு

| பொறுப்பு | | சொத்து | |
|---|---|---|---|
| கேள்வி வைப்பு | 1000 | ஒதுக்கு | 200 |
| | | கடன்கள் | 800 |
| | 1000 | | 1000 |

மேலும் இப் பொருளாதாரத்தில் பொதுமக்கள் வசமுள்ள நாணயத்தின் அளவு ரூ 1200 மில்லியன் ஆகவும், வங்கி முறைமை ஒன்றின் மிகை ஒதுக்குகள் ரூ 100 மில்லியன் ஆகவும் உள்ளன.

e) அ) கடனாக்கச் செயன்முறை பூர்த்தியடையும்போது இப்பொருளாதாரத்தில் நிலவக் கூடிய சாத்தியமான அதியுச்ச பண நிரம்பலின் அளவைக் கணிப்பிடுக.

| $M_1$ = வங்கி அமைப்பிலுள்ள கேள்வி வைப்பு | + | பொது மக்களிடம் உள்ள நாணயத்தின் அளவு |
|---|---|---|

$M_1$ = 2000 + 1200

= 3200 மில்லியன் ரூபா

காசு ஒதுக்கு வீதம் = $\frac{100}{1000} \times 100$

= 10%

கேள்வி வைப்பின் அளவு = ஒதுக்கு பணம் X $\frac{1}{\text{ஒதுக்கு வீதம்}}$

= $200 \times \frac{1}{10}$

= 2000 மில்லியன் ரூபா

ஆ. பொதுமக்கள் வசமுள்ள நாணயத்தினளவு மாறா நிலையில் நியதி ஒதுக்குத் தேவை வீதம் 25% ஆக உயர்த்தப்படின் பூரண கடனாக்கத்தின் பின்னர் நிலவக்கூடிய மொத்தப்பண நிரம்பலின் சாத்தியமான அதிஉச்ச அளவினைக் கணிப்பிடுக.

| மொத்தப்பண நிரம்பலின் அளவு | = | வங்கி அமைப்பினால் உருவாக்கக்கூடிய உச்சகட்ட கேள்வி வைப்புக்களின் அளவு | + | பொதுமக்களிடம் உள்ள நாணயத்தின் அளவு |
|---|---|---|---|---|

= $200 \times \frac{1}{1/4} + 1200$

= 800 + 1200

= 2000மில்லியன் ரூபா

**உசாத்துணை நூல்கள்**

- பணக்கொடுக்கல் வாங்கல்கள், வங்கிகள் மற்றும் பொருளாதாரம் (பி.சமரசிறி)
- வணிக வங்கிகள் V. கருணாகரன் ஆசிரியர் வழிகாட்டி

# வரி மானியம், கட்டுப்பாட்டு விலைகள்

சந்தை சமனிலையில் ஏற்படுத்தும் தாக்கம்

செல்வி கு.றனுஷா
2018 வர்த்தகப்பிரிவு

**உற்பத்தி மீதான வரி சந்தையின் தொழிற்பாட்டைப் பாதிக்கும் விதம்**

அரசாங்கம் உற்பத்தியாளருக்கு உற்பத்தி நடவடிக்கை மீது விதிக்கின்ற வரி விதிப்பு முறையே மறைமுக வரி (நேரில் வரி) ஆகும். இம்மறைமுக வரி விதிப்பில் அலகு வரியே எமது பாடப்பரப்பில் முக்கியமான பங்களிப்பை எடுத்துக் கொள்கின்றது.

❑ **அலகு வரி**

அரசாங்கம் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் ஒவ்வொரு அலகுக்கும் ஒரு குறிப்பிட்டளவு வரியினை அறவிடுவதே அலகு வரியாகும். இவ் வரி விதிப்பின் போது நிரம்பலில் பின்வரும் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

- நிரம்பல் அட்டவணை மாற்றமடைதல்
- நிரம்பல் கோடு மாற்றமடைதல்
- நிரம்பல் சமன்பாடு மாற்றமடைதல்

Eg:- ரூபா 10 அலகு வரியாக விதிக்கப்படும்போது நிரம்பல் அட்டவணை மாற்ற மடையும் விதத்தை பின்வருமாறு காட்டலாம்.


| வரிக்கு முன் விலை | நிரம்பல் தொகை | கேள்வித் தொகை |
|---|---|---|
| 20 | 200 | 600 |
| 40 | 600 | 200 |

**அலகு வரி விதிக்கப்பட்டதன் பின்**

| வரிக்கு முன் விலை | அலகு வரி | வரிக்கு பின் விலை | நிரம்பல் தொகை | கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 20 | 10 | 30 | 200 | 600 |
| 40 | 10 | 50 | 600 | 200 |

குறிப்பு:- இவ் அலகு வரியானது நிரம்பலில் மட்டுமே தாக்கத்தை ஏற்படுத்தும் கேள்வியில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தமாட்டாது.

***பண்டம் ஒன்றின் மீது ரூபா 10 அலகு வரி ஒன்று விதிக்கப்படும்போது சந்தைச் சமநிலையில் ஏற்படும் மாற்றத்தை பின்வரும் வரைபடம் மூலம் காட்டலாம்.***




***அலகுவரி விதிப்பு காரணமாக பின்வரும் விளைவுகள் ஏற்படும்***

- நுகர்வோன் செலுத்தும் விலை ரூபா 30 இலிருந்து 35 ஆக உயரும்.
- உற்பத்தியாளனுக்குக் கிடைக்கும் விலை ரூபா 30 இருந்து ரூபா 25 ஆகக் குறையும்.
- சமநிலை தொகை 300 அலகுகளிலிருந்து 250 அலகுகளாகக் குறைகின்றது.
- நுகர்வோன் செலவு 30x300 இருந்து 35x250 ஆக மாற்றமடைகின்றது.
- நிறுவனத்தின் மொத்த வருமானம் 30x300 இருந்து 35x250 ஆக மாற்றமடைகின்றது.
- நுகர்வோன் மிகை A+B+C+D இலிருந்து A ஆகக் குறைவடைகின்றது.
- உற்பத்தியாளர் மிகை H+G+F+I+J இலிருந்து I+J வரை குறைவடைகின்றது.
- நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர் மிகை B+C+D+F+G+H அளவால் குறைவடைகின்றது.
- அரசாங்கத்திற்கு B+C+G+H அளவு வரி வருமானம் கிடைத்தல்.
- D+F அளவால் சமூகநலன் குறைதல்
- B+C அளவால் நுகர்வோர் வரியைச் சுமக்க வேண்டி ஏற்படல்
- G+H அளவால் உற்பத்தியாளன் வரியைச் சுமக்க வேண்டி ஏற்படல்.

***அலகு வரியால் நிரம்பல் சமன்பாடு மாற்றமடைதல்***

வரிக்கு முன்

$QS = a+bP$

வரிக்குப்பின்

$QS = a+b(p-t)$

***உற்பத்தி மானியம் சந்தை தொழிற்பாட்டில் தாக்கம் செலுத்தும் விதம்***

அரசாங்கம் உற்பத்தியாளர்களது சில உற்பத்தி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு வழங்கிக் கொள்ளும் சில உதவிக் கொடுப்பனவே அரசாங்க மானியமாகும்.

அரசாங்கம் உற்பத்தியாளருக்கு வழங்கும் மானியத்தில் அலகு மானியமே எமது பாடப்பரப்பில் முக்கியமான பங்களிப்பை எடுக்கின்றது.

- ***அலகு மானியம்***

உற்பத்தி செய்யப்படும் அலகொன்றின் மீது குறிப்பிட்ட தொகையொன்றை வழங்குவது அலகு மானியமாகும். இவ் அலகு மானியத்தின் போது பின்வரும் மாற்றங்கள் ஏற்படுகின்றது.

- நிரம்பல் அட்டவணை மாற்றமடைதல்
- நிரம்பல் கோடு மாற்றமடைதல்
- நிரம்பல் சமன்பாடு மாற்றமடைதல்

ரூபா 10ஐ அலகு மானியமாக வழங்கப்படும்போது நிரம்பல் அட்டவணை மாற்ற மடையும் விதத்தினை பின்வருமாறு காட்டலாம்.


| மானியத்திற்கு முன் விலை | நிரம்பல் தொகை | கேள்வித் தொகை |
|---|---|---|
| 20 | 200 | 600 |
| 40 | 600 | 200 |

**அலகு மானியம் வழங்கப்பட்டதன் பின்**

| மானியத்திற்கு முன் விலை | அலகு மானியம் | மானியத்திற்கு பின் விலை | நிரம்பல் தொகை | கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 20 | 10 | 10 | 200 | 600 |
| 40 | 10 | 30 | 600 | 200 |

குறிப்பு: இவ் அலகு மானியமானது நிரம்பலில் மட்டுமே தாக்கத்தை ஏற்படுத்தும் கேள்வியில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தாது.

**வரைபடத்தின் மூலமும் காட்டலாம்**




**உற்பத்தியாளனுக்கு மானியம் வழங்குவதனால் பின்வரும் விளைவுகள் ஏற்படும்**

- நுகர்வோன் செலுத்த வேண்டிய விலை ரூபா 30 இருந்து 25 வரையாக குறைகின்றது.
- உற்பத்தியாளனுக்குக் கிடைகின்ற விலை ரூபா 30 இலிருந்து 35 வரை அதிகரிக்கின்றது.
- சமநிலைத் தொகை 300 அலகுகளில் இருந்து 350 அலகு வரை அதிகரிக்கின்றது.
- வியாபார மொத்த வருமானம் 30x300 இருந்து 25X 350 ஆக மாற்றமடைகின்றது.
- நுகர்வோன் மிகை A+B இலிருந்து A+B+I+H+G ஆக அதிகரிக்கின்றது.
- உற்பத்தியாளன் மிகை I+J இருந்து I+J+B+C வரை அதிகரிக்கின்றது.
- நுகர்வோன் மற்றும் உற்பத்தியாளன் மிகை B+C+I+H+G அளவால் அதிகரிக்கின்றது.
- அரசாங்கத்திற்கு B+C+F+G+H+I அளவு மானியத்துக்கான செலவொன்று ஏற்படுகின்றது.
- F அளவு சமூகநலன் குறைக்கின்றது
- மானியத்தால் நுகர்வோர் பெறும் நன்மை I+H+G
- மானியத்தால் உற்பத்தியாளன் பெறும் நன்மை B+C

***அலகு மானியத்தால் நிரம்பல் சமன்பாடு மாற்றமடைதல்***

*மானியத்திற்கு முந்திய நிரம்பல் சமன்பாடு*

$QS = a+bP$

*மானியத்திற்கு பின்னரான நிரம்பல் சமன்பாடு*

$QS = a+b\,(p+s)$

## விலைக்கட்டுப்பாடு சந்தையின் செயற்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கம்

### ☐ விலை கட்டுப்பாட்டுக் கொள்கை

*கேள்வி நிரம்பல் சக்திகள் மூலம் தீர்மானிக்கப்படும் சந்தைச் சமநிலை சமூகத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என நினைக்கின்றபோது அரசாங்கத்தால் கட்டுப்பாட்டு விலைகளை அறிமுகப்படுத்தும் கொள்கை விலை கட்டுப்பாட்டுக் கொள்கை எனப்படும்.*

*இங்கு கட்டுப்பாட்டு விலைகள் இரண்டு வகைப்படும் அவையாவன:*

1. *உயர்ந்தபட்ச கட்டுப்பாட்டு விலை*
2. *குறைந்தபட்ச கட்டுப்பாட்டு விலை*


### ☐ உயர்ந்தபட்ச கட்டுப்பாட்டு விலை

*குறிப்பிட்ட ஒரு பண்டத்தை விற்பனை செய்யக்கூடிய உச்ச விலையை சட்டரீதியாக விதிப்பது உச்சவிலை கட்டுப்பாடு விதித்தல் எனப்படும்.*

*நுகர்வோரின் நலன்பேணும் நோக்குடன் அரசினால் அமுல்படுத்தப்படும் விலைத் திட்டமே உயர்ந்தபட்ச கட்டுப்பாட்டு விலையாகும்.*

*இவ்விலை அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டுமாயின் அது சமநிலை விலையைவிட குறைவான விலையாக இருக்க வேண்டும்.*


***உச்சவிலை எல்லையை நிர்ணயித்தலை பின்வரும் வரைபின் மூலம் காட்ட முடியும்.***




***உச்ச விலை கட்டுப்பாடு காரணமாக சந்தையில் பின்வரும் விளைவுகள் ஏற்படக்கூடும்.***

- *மிகைக் கேள்வி தோற்றம் பெறல்* $(Q_3 - Q_2)$
- *முறைசார், முறைசாரா பங்கீட்டு முறைகள் உருவாதல்*
- *கறுப்புச் சந்தை உருவாகுதல் -* $OP_2$
- *பொருளாதார செயற்திறனின்மை உருவாகுதல்.*

**உயர்ந்தபட்ச கட்டுப்பாட்டு விலை காரணமாக ஏற்படும் பொருளாதார செயற்றிறன்மையை பின்வரும் வரைபில் காட்டலாம்.**




| கட்டுப்பாட்டு விலைக்கு முன் | | கட்டுப்பாட்டு விலைக்கு பின் | |
|---|---|---|---|
| நுகர்வோன் மிகை | A+B+C | நுகர்வோர் மிகை | A |
| உற்பத்தியாளன் மிகை | D+E+F | உற்பத்தியாளன் மிகை | B+D+F |
| பொருளாதார மிகை | A+B+C+D+E+F | பொருளாதார மிகை | C+E |

**உயர்ந்தபட்ச கட்டுப்பாட்டு விலையை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்வதற்கு எடுக்கக் கூடிய நடவடிக்கை**

- அரசு கட்டுப்பாட்டு விலைகளில் மிகைக்கேள்வி அளவினை இறக்குமதி செய்து வழங்கல்.
- அரசதுறை உற்பத்தியாளனுக்கு மானியம் வழங்கல்.
- பொருள் பங்கீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- வரிசை முறை பின்பற்றப்பட்டு பொருள் வழங்குதல்.
- அரசமிகைக் கேள்வி அளவினை ஈடுசெய்யும் வகையில் உற்பத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

❒ **குறைந்தபட்ச கட்டுப்பாட்டு விலை அல்லது தளவிலை**


உற்பத்தியாளருக்கும் காரணி உரிமையாளருக்கும் உயர்விலை ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்காக சமநிலை விலைக்கு மேலான விலை ஒன்றை நிர்ணயித்தல் ஆகக்குறைந்த விலைக்கட்டுப்பாடு ஆகும்.




**குறைந்தபட்சவிலைக் கொள்கை காரணமாக சந்தையில பின்வரும் விளைவுள் ஏற்படும்.**

- மிகை நிரம்பல் ஏற்படும் $(Q_2 - Q_1)$
- ஊழியச் சந்தையில் குறைந்தபட்ச விலை விதிப்பதால் வேலையின்மை உருவாகும்.
- பொருளாதாரத்தில் உற்பத்திப் பொருட்கள் பழுதடைதல்.
- பொருளாதாரத்தில் தன்னியல்பாக விலை குறைவடைய ஆரம்பித்தல்.
- மிகை முதலீட்டு நிலையொன்று உருவாகலாம்.


**கீழே தரப்படும் வரைபடம் அரசின் உத்தரவாத விலைக் கட்டுப்பாடுடன் தொடர்புடையது**




**இங்கு அரசு மிகை நிரம்பலைக் கொள்வனவு செய்யுமாயின்**

| | |
|---|---|
| அரசிற்கு ஏற்பட்ட செலவு | C+F+H+L+M+I+J+R |
| **உத்தரவாத விலைக்கு முன்** | |
| நுகர்வோன் மிகை | A+B+C |
| உற்பத்தியாளர் மிகை | E+F |
| பொருளாதார மிகை | A+B+C+E+F |
| **உத்தரவாத விலைக்குப் பின்** | |
| நுகர்வோன் மிகை | A |
| உற்பத்தியாளன் மிகை | B+C+E+F+R |
| பொருளாதார மிகை | A+B+C+E+F+R |
| அதிகரித்த பொருளாதார மிகை | R |
| இழக்கப்பட்ட மொத்த சமூகநலன் | C+F+H+L+M+I+J |

**அரசு குறை நிரப்பு கொடுப்பனவு விலை உதவிக் கொள்கை ஒன்றைப் பின்பற்றுமாயின்,**




| **உத்தரவாத விலைக்கு முன்னர்** | | **உத்தரவாத விலைக்கு பின்னர்** | |
|---|---|---|---|
| நுகர்வோன் மிகை | = A+B | நுகர்வோன் மிகை | = A+B+C+F+G |
| உற்பத்தியாளர் மிகை | = C+D | உற்பத்தியாளர் மிகை | = C+D+B+J |

குறைநிரப்பு கொடுப்பனவிற்கான அரச செலவு = B+J+C+F+G+K

சமூகநலன் பாதிப்பு = K

**உசாத்துணை நூல்கள்**

- ஆசிரியர் அறிவுரை வழிகாட்டி
- சந்தைச் சமநிலை V. கருணாகரன் ஆசிரியர் வழிகாட்டி

# சந்தைத் தோல்வியில் வெளிவாரி விளைவு

செல்வி A.J.லெவேன்சியா
2018 வர்த்தகப்பிரிவு

சந்தை சக்திகளின் திறமையற்ற செயற்பாடு சந்தைத் தோல்வி எனப்படுகின்றது. சந்தை விலைப் பொறிமுறையானது சமூகத்தின் நன்மை கருதி வளங்களை ஒதுக்கீடு செய்யத் தவறுகின்ற சந்தர்ப்பம் சந்தைத் தோல்வி எனப்படும்.இலாபத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் தெரிவுகள் சமூகத்தின் நன்மைக்கு எல்லா சந்தர்ப்பங்களிலும் பங்களிப்புச் செய்வதில்லை. சந்தை தோல்வியானது 02 வகைப்படும்.

1. வள ஒதுக்கீட்டில் செயற்றிறனின்மை - சில பண்டங்கள் சமூகத்திற்குத் தேவையான அளவைவிட கூடுதலாகவும் வேறு சில தேவையான அளவை விட குறைவாகவும் உற்பத்தி செய்யப்படும்.
2. வள ஒதுக்கீட்டில் நியாயத்துவமின்மை - வருமானம் நியாயமற்ற விதத்தில் பங்கீடு செய்யப்படுவதால் வள ஒதுக்கீடு செயற்றிறனற்றதாதல்.

சந்தை முறைமையானது பல சந்தர்ப்பங்களில் தோல்வியடைகின்றது. இவற்றில் வெளிவாரி விளைவுகளின் தாக்கம் சந்தை தோல்வி ஏற்படுவதற்குக் காரணமாக அமைகின்றது.

வெளிவாரி விளைவு என்பது உற்பத்தி அல்லது நுகர்வு நடத்தையின் விளைவாக அவற்றுடன் தொடர்பற்ற மூன்றாவது பிரிவினருக்கு ஏற்படும் நன்மை அல்லது செலவு வெளிவாரி விளைவு எனப்படும். மேலும் இவ்விளைவுக்கான பொறுப்பை இதனுடன் நேரடித் தொடர்பு கொண்ட பிரிவினர் ஏற்பதில்லை.

**1.** எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள் - வெளிவாரி செலவுகள்

- a. உற்பத்தியில் வெளிவாரி செலவு
  எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள்
- b. நுகர்வில் வெளிவாரி செலவுகள்
  எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள்

**2.** நேர்க்கணிய விளைவுகள் - வெளிவாரி நன்மைகள்


- a. உற்பத்தி வெளிவாரி நன்மைகள்
  நேர்க்கணிய விளைவுகள்
- b. நுகர்வில் வெளிவாரி நன்மைகள்
  நேர்க்கணிய வெளிவாரி விளைவுகள்

உற்பத்தி, நுகர்வு என்பன தொடர்பாக சந்தையில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் சந்தை சக்திகளாக கேள்வி நிரம்பல்களினால் நிர்ணயிக்கப்படும் விலைகளின் அடிப் படையில் எடுக்கப்படுகின்ற நுகர்வு, உற்பத்தி நடவடிக்கைகளின்போது ஏற்படுகின்ற வெளிவாரி செலவுகளையும், நன்மைகளையும் சந்தை விலைகள் உள்ளடக்குவதில்லை. இதனால் சந்தை சக்திகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் உத்தம மானதாக அமைவதில்லை.

பொதுப்பொருட்கள் விலைக்கட்டணங்கள் அறவிடமுடியாதவை விலைப் பொறி முறையின் கீழ் வழங்கப்படுவதில்லையாயினும் நுகர்வுச் செயன்முறையானது பெரும் பாலும் நேர்க்கணிய வெளிவாரிகளை ஏற்படுத்துமாயின் அப்பொருள் சமூக நலப் பொருள் எனப்படும். நேர்க்கணிய வெளிவாரி விளைவுகள் விலைப்பொறி முறையில் போதியளவில் உற்பத்தி செய்வதில்லை. எனவே சந்தை தோல்வியடைகின்றது. எல்லா வெளிவாரி சிக்கனங்களும், சிக்கனமின்மைகளும் வெளிவாரி விளைவுகளூடாக ஏற்படுபவை அல்ல. சந்தை வெளியே உருவாக்கப்பட வேண்டும்.


சந்தை விலைப்பொறிமுறை வளங்களை செயற்றிறனாக நியாயமாக ஒதுக்கீடு செய்யத் தவறுகின்ற சந்தர்ப்பங்கள் வெளிவாரி விளைவுகள் கணக்கில் எடுக்காமை உற்பத்தி அல்லது நுகர்வு தீர்மானங்கள் சமூகரீதியில் உத்தமமான செயற்றிறனாக அமைவதில்லை. உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவினால் வளங்களை செயற்றிறனாக நியாயமாக ஒதுக்கீடு செய்யத் தவறுகின்ற சந்தர்ப்பத்தில் தோல்வி அடைகின்றது சந்தை.

❏ ***உற்பத்தியின் நேர்க்கணிய வெளிவாரி விளைவுகள்***




உற்பத்தி செயற்பாட்டில் நேர்க்கணிய வெளிவாரிகள் உருவாகுமிடத்து தனியார் செலவை விட சமூகச் செலவு குறைவாகக் காணப்படும். இதனால் ஏற்படும் விளைவு யாதெனில் சமூகத்திற்குத் தேவைப்படும் அளவைவிட குறைவாகப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும். அதாவது குறை உற்பத்தி காணப்படும். வளப் பயன்பாட்டின் வினைத்திறனின்மையை (MSC<MSB) சந்தைத் தோல்வியை இது காட்டும். ABC என்ற முக்கோணத்தின் பரப்பளவு சமூக நலன் இழப்பாகும். இப்பரப்பளவு உள்ளார்ந்த சமூக நலன் பெறுகையாகும்.

***உற்பத்தியின் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள்***





உற்பத்தி செயற்பாட்டில் எதிர்க்கணிய வெளிவாரிகள் உருவாகுமிடத்து தனியார் செலவைவிட சமூகச் செலவுகள் அதிகமாகக் காணப்படும். அதனால் ஏற்படும் விளைவு யாதெனில் சமூகத்திற்குத் தேவைப்படும் அளவைவிடக் கூடுதலாகப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும். அதாவது மிகை உற்பத்தி காணப்படும். வளப்பயன்பாட்டின் வினைத்திறனின்மையை (MSC<MSB) சந்தைத் தோல்வியை இது காட்டும். ABC என்ற முக்கோண பரப்பளவு சமூகநலன் இழப்பாகும். இப்பரப்பளவு உள்ளார்ந்த சமூகநலன் பெறுகையாகும்.

**வெளிவாரி விளைவுகளைத் தவிர்ப்பதற்கு நிறுவனங்கள் தாமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்.**


1. பாதிப்புக்களை ஈடுசெய்வதற்கு தமது இலாபத்தில் ஒரு பகுதியை ஒதுக்குதல்
2. ஒலி மாசடைதலைக் கட்டுப்படுத்துவதற்கு நவீன உபகரணங்களை தொழிற்சாலை யில் பொருத்துதல்.

**❑ நுகர்வில் நேர்க்கணிய வெளிவாரி விளைவுகள்**




நுகர்வுச் செயற்பாட்டில் நேர்க்கணிய வெளிவாரிகள் உருவாகுமிடத்து தனியார் நன்மையை விட சமூக நன்மை உயர்வாகக் காணப்படும். அதனால் ஏற்படும் விளைவு யாதெனில் சமூகத்திற்குத் தேவைப்படும் அளவைவிடக் குறைவாகப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும். எனவே குறை நுகர்வு காணப்படும். வளப்பயன்பாட்டின் வினைத்திறனின்மையை (MSC<MSB) சந்தைத் தோல்வியை இது காட்டும். ABC என்ற முக்கோணத்தின் பரப்பளவு சமூகநல இழப்பாகும். இப்பரப்பளவு உள்ளார்ந்த சமூக நலன் பெறுகையாகும்.

**நுகர்வில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவு செலவு / நன்மை**




நுகர்வுச் செயற்பாட்டில் எதிர்க்கணிய வெளிவாரிகள் உருவாகுமிடத்து தனியார் நன்மையை விட சமூக நன்மை குறைவாகக் காணப்படும். அதனால் ஏற்படும் விளைவு யாதெனில் சமூகத்திற்குத் தேவைப்படும் அளவைவிடக் கூடுதலாகப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும். எனவே உயர்நுகர்வு காணப்படும். வளப்பயன்பாட்டில் வினைத்திறனின்மையை (MSC>MSB) அல்லது சந்தைத் தோல்வியை இது காட்டும்.

ABC என்ற முக்கோணப் பரப்பளவு சமூகநல இழப்பாகும். இப்பரப்பளவு உள்ளார்ந்த சமூகநலன் பெறுகையாகும்.

**வெளிவாரி விளைவுகளால் ஏற்படும் தோல்வியைத் தடுப்பதற்கு அரசாங்கம் மேற் கொள்ளும் நடவடிக்கைகள்.**

1. எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளைத் தரும் நடவடிக்கைகள்
   - வரிகளை விதித்தல்
   - தண்டம் விதித்தல்
   - உரிமைப் பத்திரக் கட்டணம் அறவிடுதல்
   - நட்டஈடு வழங்குதல்
   - சட்டங்களை விதித்தல்
   - உற்பத்தி மீது அளவுக் கட்டுப்பாடுகளை விதித்தல்
2. நேர்க்கணிய வெளிவாரி விளைவுகளைத் தரும் நடவடிக்கைகள்
   - மானியம் வழங்குதல்
   - குறிப்பிட்ட பொருட்கள் சேவைகளை அரசாங்கம் உற்பத்தி செய்து வழங்குதல்

**நேர்க்கணிய வெளிவாரி விளைவுகளை அரசு எவ்வாறு சீரமைக்கின்றது என்பதை விளக்குக.**

1) மானியம்

நேர்க்கணிய வெளிவாரி விளைவுகள் (நன்மை) உள்ள நிலையில் அரசாங்கம் உற்பத்தியாளர் அல்லது நுகர்வோரிற்கு மானியங்களை வழங்குவதன் மூலம் சந்தைக் கேள்வி நிரம்பல், சமநிலை மட்டத்திலிருந்து சமூகக் கேள்வி நிரம்பல் சமநிலை மட்டத்திற்கு (வலது புறமாக) மாற்றி சமூகத்திறன் வாய்ந்த சமநிலையை அடையச் செய்யலாம். இதன்மூலம் சந்தை தோல்வி சீரமைக்கப்படுகின்றது.

2) சட்டப் பிரமாணங்கள்

கட்டாயக் கல்வியை சட்டங்கள் மூலம் நடைமுறைப்படுத்தல்

தடுப்பூசி ஏற்றுதலை கட்டாயமாக்குதல்

**சூழல் மாசடைதலைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் யாவை?**

- சூழல் பாதுகாப்பு முகவராண்மையை உருவாக்குதல்
- சட்ட ஒழுங்கு விதிகளை அமுல்படுத்தல்
- உடைமை உரிமைகளை உறுதிப்படுத்தல்
- சூழல் பாதுகாப்புப் பற்றி பொது அபிப்பிராயத்தை உருவாக்குதல்
- மாசடைதலைக் குறைக்க மானியம் வழங்குதல்.

**உசாத்துணை நூல்கள்**


- WWW.nie.gov.lk
- வே.கருணாகரன் - சந்தைத் தோல்வியும் வெளிவாரி விளைவும்


# நிலையில்லா விலையாலே.....

செல்வி ய.த.நிஸ்மி
2018 வர்த்தகப் பிரிவு

வருடம் முழுவதும் உழைப்பவனை ஆண்டியாயும்
வசதிபடைத்த முதலாளிவர்க்கத்தைத் தொடர்ந்தும்
செழிப்பானவனாயும் மாற்றிப் போகும்
வஞ்சகர் சூழ் உலகால் உருவான வணிகம்
பலர் வாழ்வை தொலைத்த கதையும் அறிவோம்
சிலர் வாழ்வை மாற்றியமைத்ததையும் அறிவோம்.

ஐந்து வீத வட்டி அவசர வட்டி என கடன் வாங்கி
வாங்கிய கடனில் காசுக்கு பொருள் வாங்கி
வாங்கிய பொருளை லொறி பிடிச்சு
தலைநகருக்கு அனுப்பி
தரகர் ஒருத்தனுக்கு கொமிசன் காசு கொடுத்து
அனுப்பின பொருளை எல்லாம் விற்று முடிச்சு
பட்டியலைப் பார்க்கிறவனுக்கு பகிரென ஆகிறது.

நம் ஊரின் அறுவடை நேரத்திலேதான்
பம்பாயிலிருந்து வெங்காயம் வரும்
பாகிஸ்தானிலிருந்து நெல் வரும்
பால்மாவின் விலையும் அடிக்கடி கூடிப்போகும்
எரிபொருளின் விலையும் கூட ஏறிப்போகும்
நிலையிலா விலையாலே உலகத்தின் உயிர்நாடி
வியாபாரம் கூட சூதாட்டமாய் மாறுது
ஓவர் நைட்டில் அம்பாணி ஆனவனும் உண்டு
கம்பனியே திவாலாகி அம்பேலானவனும் உண்டு.



# கணக்கீடு





# கணக்கீட்டுப் பாட இறுதிப் பரீட்சைக்குத் தயாராவது எப்படி?

திரு. N. B. கஜென்
B.Com (Hons) M.M.Spl, Dip. in. Edu.
ஆசிரியர் - யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்

மாற்றமடைந்து வரும் நவீன உலகில் வணிகத்துறையில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வது அத் துறையின் நடைமுறை உலகுசார் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதும் எதிர்கால உயர்கல்வி நடவடிக்கைகள், தொழில்வாய்ப்புக்கள் மற்றும் வாழ்வியல் இருப்பு என்பவற்றுக்கு சமுதாயத்தை பொருத்தப்பாடுடையதாக மாற்றிக் கொள்வதற்கு வசதியளிப்பதுமாகும். இத்துறையில் தம்மை இணைத்துள்ள மாணவர்கள் தமது திறன்களை விருத்தி செய்யக்கூடியதாக உள்ள அதேவேளை சாதாரண வாழ்க்கை நடைமுறைகளோடு இணைந்த வணிக, நிதிசார் விடயங்கள் பற்றிய அறிவினை விருத்திசெய்ய முடிகிறது. கட்டிலடங்கா விதத்தில் வேகமாக மாற்றமடையும் தொழிநுட்பத்தோடு இணைந்த வங்கி நடைமுறைகள், முகாமைத்துவ நுட்பங்கள், கணக்கு வைப்பு முறைகள், கணக்கீட்டு மென்பொருட்கள் பற்றிய அறிவினை அம்மாணவர்கள் பெறுகின்றனர்.

துறைசார் அறிவுபெறுதலுக்கு மேலாக இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுதல் என்பது மாணவர்களுக்கு ஒரு வித மன அழுத்தத்தை ஏற்படுத்துவதோடு பரீட்சை பற்றிய பய உணர்வினையும் ஏற்படுத்துகிறது. எனவே "பரீட்சைக்குத் தயார்படுத்தல்" என்பது ஒரு குறிப்பிட்ட கால செய்முறையாக உள்ளதுடன்திட்டமிட்டு ஒரு ஒழுங்குமுறைக்கமைவாக அதிக கவனத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டிய படிமுறையுமாகும். பரீட்சையில் இலக்கினை நிர்ணயித்தலும் வெற்றியடைதலும் மாணவர்களின் தனிப்பட்ட திறன்களுக்கேற்ப வேறுபடும் என்பதைக் கருத்தில் கொள்க. எனினும் பாடரீதியாக மாணவர்கள் பரீட்சைக்குத் தயாராகும் விதம் வேறுபடலாம்.

இங்கு க.பொ.த உயர்தரக் கணக்கீட்டுப் பாடவிடயத்திற்காக மாணவர்கள் தங்களை தயார்படுத்தும் விதம் தொடர்பாக அப்பாடத்தின் பாட உள்ளடக்கங்களுக்கேற்பவும் க.பொ.த உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களில் வினவப்படும் வினாக்களுக்கேற்பவும் மாணவர்க ளுக்கான ஒரு வழிப்படுத்தல் தரப்படுகிறது.

1. கணக்கீடு I வினாத்தாள் 2 மணித்தியாலத்திற்குரியதுடன் 50 வினாக்களை உள்ளடக்கியிருப்பதுடன் 1 தொடக்கம் 30 வரையான வினாக்கள் பல்தேர்வு வினாக்களாகவும் 31 தொடக்கம் 50 வரையான வினாக்கள் சுருக்கமான விடையளிக்கப்பட வேண்டிய வினாக்களாகவும் உள்ளன.
2. மேலும், கணக்கீடு I வினாத்தாள் கணக்கீட்டுடன்தொடர்புபட்ட குறிப்புக்களுடனும் (Notes) கணிப்புக்களுடனும் தொடர்புபடுகிறது. கணக்கீடு தொடர்பான குறிப்புக்கள் கணக்கீடு II வினாத்தாளில் வினவப்படுவதில்லை என்பதை மாணவர்கள் கவனத்தில் கொள்க.

3. எனவே கணக்கீடு தொடர்பான குறிப்புக்களுக்கு மாணவர்கள் ஆசிரியர் வழிகாட்டியில் வழங்கப்பட்டுள்ள குறிப்புக்களை கவனமாக அறிந்திருப்பதுடன் அவை தொடர்பாக கடந்த கால பரீட்சை வினாத்தாள்களில் வினவப்பட்டுள்ள வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் அறிந்திருத்தல் போதுமானது

4. கணக்கீடு I வினாத்தாளை மாணவர்கள் குறிப்பிட்ட கால எல்லைக்குள் (2 மணித்தியாலங்களுக்குள்) விடையளிக்கப் பயிற்சி பெற்றிருத்தல் நன்று

5. கணக்கீடு I வினாத்தாளில் வினாக்கள் வினவப்பட்டுள்ள முறைகளை அறிவதற்காக குறைந்தது ஐந்து ஆண்டு கடந்த கால வினாத்தாள்களை மாணவர்கள் அறிந்திருத்தல் வேண்டும். மேலும், பாட அலகுகளுக்கு ஏற்ப வினவப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையினையும் மாணவர்கள் அறிந்து கொள்வதோடு ஒவ்வொரு ஆண்டு வினாத்தாளுடன் ஒப்பீட்டு பரிசீலிப்பது சிறந்ததாகும். அவ்வாறு ஒப்பிடும் போது ஒவ்வொரு அலகிலிருந்தும் வினவப்பட்டுள்ள வினாக்களின் தன்மையினையும் அவற்றிற்கிடையேயான ஒத்த தன்மை, தொடர்புகள் என்பவற்றை மாணவர்கள் விளங்கிக் கொள்ள முடியும்.

6. கணக்கீடு II வினாத்தாள் இரண்டு மணித்தியாலங்களுக்குரியதாகும். இவ் வினாத்தாள் 7 வினாக்களைக் கொண்டிருப்பதோடு மாணவர்கள் 6 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

7. கணக்கீடு II வினாத்தாள் தொடர்பாகவும் மாணவர்கள் ஆகக் குறைந்தது ஐந்து ஆண்டு கடந்த கால விளாத்தாள்கள் பற்றிய அறிவினைக் கொண்டிருத்தல் நன்று.

8. கடந்த கால வினாத்தாள்களை மாணவர்கள் பயிற்சிகளுக்காகப் பயன்படுத்தும் போது அலகு ரீதியாக வினாக்களைச் செய்து பார்த்தல் வேண்டும். எனவே தான், முன்னர் குறிப்பிட்டது போல, அலகுகளுக்கான வினாக்களில் உள்ள தொடர்பின் தன்மைகளை அறிய முடியும்.

9. ஏதேனுமொரு கணக்கீடு II வினாத்தாள்களில் பொதுவாக பின்வருமாறு வினாக்கள் அமைக்கப்படுவதை அவதானிக்கலாம்.

| | |
|---|---|
| கம்பனிக் கணக்கு | - 20 புள்ளிகள் |
| பங்குடமைக் கணக்கு | - 10 புள்ளிகள் |
| மேந்தலைப் பகிர்வுக் கூற்று | - 10 புள்ளிகள் |
| கணக்கீட்டுச் சமன்பாடு | - 10 புள்ளிகள் |
| கட்டுப்பாட்டுக் கணக்கு | - 10 புள்ளிகள் |
| காசுப் பாய்ச்சல் கூற்று | - 10 புள்ளிகள் |
| கணக்கீட்டு விகிதங்கள் | - 05 புள்ளிகள் |
| இலாப நோக்கமற்ற நிறுவன கணக்குகள் | - 10 புள்ளிகள் |
| சம்பளப் பட்டியல் | - 05 புள்ளிகள் |
| முதலீட்டுத் தீர்மானம் | - 05 புள்ளிகள் |


எனவே மேற்படி விடயங்கள் தொடர்பாக மாணவர்கள் அதிகளவு பயிற்சி பெறுவதன் மூலம் கூடியளவு புள்ளிகளைப் பெற முடியும்.

10. கணக்கீடு II வினாத்தளிலுள்ள வினாக்களுக்கு வழங்கப்படும் விடைகளுக்கு எவ்வாறு புள்ளிகள் பகிர்ந்து வழங்கப்படும் என்பதை மாணவர்கள் பரீட்சைத் திணைக்களத்தின் புள்ளியிடல் திட்டத்தின் மூலம் அறிந்திருந்தல் வேண்டும்.

***பரீட்சைகள் தொடர்பாக மேலும் நீங்கள் பின்பற்ற வேண்டியவை :***

1. வினாத்தாளிலுள்ள அறிவுறுத்தல்களைத் தெளிவாக வாசித்து விடையளியுங்கள். அறிவுறுத்தல்களை பரீட்சார்த்தி மீறியதாகக் கருதப்படுமிடத்து புள்ளிகள் இழக்கப்படலாம்.
2. வினாத்தாளில் குறிப்பிடப்பட்ட நேர விடயங்களில் அவதானம் செலுத்துங்கள். தரப்பட்ட நேரத்திற்குள் விடையளிக்கப்பட வேண்டிய வினாக்களுக்கேற்ப நேரத்தை ஒதுக்கி அதற்கேற்ப விடையளியுங்கள். உங்கள் பாட ஆசிரியருடன் மாதிரி வினாத்தாள் ஒன்றிற்கேற்ப ஒவ்வொரு வினாவுக்கும் நீங்கள் ஒதுக்க வேண்டிய நேரம் குறித்து முன்கூட்டியே தீர்மானித்தல் நன்று.
3. குறிப்பிட்ட வினாவுக்கு விடையளிப்பதற்காக நீங்கள் ஒதுக்கிய நேரத்தைத் தாண்டி விடையளிப்பதைத் தவிருங்கள். ஏனெனில், சிலவேளைகளில் ஏனைய இலகுவான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு போதியளவு நேரம் உங்களுக்கு கிடைக்காமல் போகலாம்.
4. விடைகளையும் வினா இலக்கங்களையும் தெளிவாக எழுதுங்கள். எழுத்துகளுக்கிடையிலும் சொற்களுக்கிடையிலும் தேவையானளவு இடைவெளி விட்டு எழுதுங்கள். வினா இலக்கங்களை எழுதும் போது பரீட்சை வினாத்தாளில் தரப்பட்டுள்ள இலக்க முறையையே பின்பற்றுங்கள். வினாத்தாளில் இல்லாத இலக்க முறையை நீங்கள் பின்பற்றினால் அது பரீட்சகருக்கு விடையை இனங்காண்பதில் தேவையற்ற அசௌகரியத்தை ஏற்படுத்தும்.
   உ-ம் : 01,02,03/ (1), (2), (3) / (i), (ii), (iii) / (அ), (ஆ), (இ)

மேற்படி விடயங்களை மாணவர்கள் பின்பற்றுவதன் மூலம் கணக்கீட்டுப் பாடத்தில் உயர்ந்த பெறுபேற்றினைப் பெற வழியேற்படும்.



# இலங்கை கணக்கீட்டு நியமம் – 37

## ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்பு மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்

செல்வி ய.த.நிஸ்மி
2018 வர்த்தகப் பிரிவு

### ☐ ஏற்பாடு

நிச்சயிக்கப்படாத காலம் அல்லது தொகையுடன் கூடிய பொறுப்பு ஆகும். ஒன்றில் பொறுப்பின் தொகை நிச்சயிக்கப்படாது இருக்கலாம் அல்லது பொறுப்பின் தீர்ப்பனவுக் காலம் நிச்சயிக்கப்படாது இருக்கலாம். இது தன்மையில் பொறுப்பான போதும் எல்லாப் பொறுப்புக்களும் ஏற்பாடுகளாகக் கருதப்பட முடியாது.

உதாரணம் : - பெறுமானத் தேய்வு ஏற்பாடு

**# ஏற்பாட்டிற்கான உதாரணம் 1**

⇨ வினா

பொருட்களை வழங்கும்போது கம்பனியினால் ஏற்பட்ட பிழை காரணமாக ரூபா 1,000,000 இழப்பீடு செலுத்த வேண்டுமென கம்பனியானது தனது வழக்கறிஞர் கொடுத்த ஆலோசனைப்படி 2016.03.31இல் நிதிக்கூற்றில் ஏற்பாடு செய்தது. 1 வருடத்தின் பின்னர் 2017.03.31இல் செலுத்தவேண்டிய இழப்பீடு 1,500,000 என உறுதியாகியது. 2016/2017, 2017/2018 ஆகிய காலப்பகுதியில் நிதிக்கூற்றில் இது தொடர்பான செம்மையாக்கல்களைத் தருக.

⇨ விடை

<u>2016/2017</u>

இலாப நட்டக் கணக்கு வரவு ரூபா 1,000,000

செலுத்த வேண்டிய இழப்புக்கான ஏற்பாட்டுக் கணக்கு செலவு ரூபா 1,000,000

நிதி நிலைமைக் கூற்றில் இவ் ஏற்பாடானது நடைமுறை அல்லாப் பொறுப்பாகக் காட்டப்படுகின்றது. ஏனெனில் இங்கு ஏற்பாடு செலுத்தப்பட வேண்டிய காலம் நிச்சயிக்கப்படாமை ஆகும்.

<u>2017/2018</u>

இலாப நட்டக் கணக்கு வரவு ரூபா 500,000

செலுத்த வேண்டிய இழப்புக்கான ஏற்பாட்டுக் கணக்கு செலவு ரூபா 500,000

**# ஏற்பாட்டிற்கான உதாரணம் 2**

⇨ வினா

ஒரு கம்பனி தனது பொருட்களை விற்பனை செய்யும்போது கொள்வனவாளர்களுக்கு வியாபார உத்தரவாதம் வழங்குகின்றது. கடந்த 5 வருடத்திற்குள் இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பில் வாடிக்கையாளர் விண்ணப்பித்த திருத்தப்

பெறுமதி ஏறத்தாழ வருட விற்பனை வருமானத்தில் 2% இற்கு சமனாகும். இந்தக் கம்பனியின் 2016/2017 வருட விற்பனை வருமானம் 120,000,000 ஆகும்.

1. 2017-3-31ல் உத்தரவாத ஏற்பாட்டுக் கணக்கு மீதி என்ன?

   2017-3-31ல் ரூபா 2,400,000

2. 2016-4-01ல் விற்பனை உத்தரவாதக் கணக்கு மீதி ரூபா 1,100,000 ஆக இருந்தால் 31-3-2017ல் முடிவடைந்த ஆண்டிற்கான சீராக்கல் பதிவு யாது?

   இலாப நட்டக் கணக்கு வரவு ரூபா 1,300,000

   உத்தரவாத ஏற்பாட்டுக் கணக்கு செலவு 1,300,000

## ❑ பொறுப்பு

பொறுப்பு என்பது கடந்தகால நிகழ்வுகள் அல்லது கொடுக்கல் வாங்கல்களிலிருந்து உருவாகியிருந்து தற்காலத்தில் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய கடப்பாடு ஒன்றாவதோடு, அதன் தீர்ப்பனவுகளினால் நிறுவனத்தின் பொருளாதார நன்மைகளில் வெளிப்பாய்ச்சலை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுவதாகும்.

உதாரணம் :- கடன்கொடுத்தோர், வங்கி மேலதிகப்பற்று, ஈட்டுக்கடன்

## ❑ நிகழத்தக்க பொறுப்புக்கள்

கடந்தகால நிகழ்வுகளிலிருந்து எழுகின்றதும், நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகளின் பலாபலன்களினால் மட்டுமே அதன் நிலை உறுதிப்படுத்தப்படுவதுமான ஒரு சாத்தியமான கடப்பாடாகும்.

உதாரணம் :- ஐயக்கடன் ஏற்பாடு

## ❑ நிகழத்தக்க சொத்து

கடந்தகால நிகழ்வுகளிலிருந்து எழுகின்றதும் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகளின் பலாபலன்களினால் மட்டுமே அதன் நிலை உறுதிப்படுத்தப்படுவதுமான ஒரு சாத்தியமான சொத்து ஆகும்.

# நிகழத்தக்க சொத்துக்கான உதாரணம்

வணிகத்தில் நிலத்தின் ஒரு பகுதி பாதை விரிவாக்கப்படல் காரணமாக வீதி அபிவிருத்தி அதிகார சபையால் சுவீகரிக்கப்பட்டதால் அதற்கு குறிப்பிட்ட இழப்பீடு வணிகத்தால் கோரப்படுவது சாதாரண நிகழ்வாகும். இந்த நிலப் பகுதியை சுவீகரித்தல் கடந்தகால நிகழ்வாகும். செலுத்தப்படும் இழப்பீட்டுத் தீர்மானமானது எதிர்காலத்தில் வணிகத்திற்குப் புறம்பான தரப்பினரால் எடுக்கப்படும் தீர்மானத்தின் அடிப்படையாகும்.

தேறாத வருமானம் நிதிக் கூற்றுக்களில் காட்டப்படக்கூடாது என்ற அடிப்படையிலேயே நிகழத்தக்க சொத்து சொத்தாக இனங்காணப்படுவதில்லை. எனினும் நிகழத்தக்க சொத்தின் பொருளாதார நலன் கிடைத்தல் தொடர்பாக உண்மைநிலை இருக்குமானால் அவற்றை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தமுடியும்.

## ❑ ஏற்பாடும், ஏனைய பொறுப்புக்களும்

காலம் / பொறுப்பை விடுக்கும் போது செலுத்த வேண்டி ஏற்படும் பணம் தொடர்பாகக் காணப்படுகின்ற ஐயம் காரணமாக ஏற்பாட்டை ஏனைய பொறுப்புக்களில் இருந்து தெளிவாக வேறுபடுத்த முடியும்.

## ❑ ஏற்பாட்டிற்கும், நிகழத்தக்க பொறுப்பிற்கும் இடையிலான வேறுபாடு

ஏற்பாடு என்பது ஒரு காலம் அல்லது தொகையும் நிச்சயிக்கப்படாதவையாக அமையும். ஆனால் கடப்பாட்டிற்கான நிகழ்ச்சி சாத்தியமுடையதாகும். ஆனால் நிகழத்தக்க பொறுப்பினை எடுத்துக்கொண்டால், கடப்பாட்டினை ஏற்படுத்தக்கூடியதாக நிகழ்ச்சி சாத்தியமுடையதாக நிகழும் என உறுதிபடக் கூறுவதற்கு முடியாது. அதாவது கடப்பாட்டினைத் தீர்ப்பனவு செய்ய வேண்டிய காலமும் தீர்ப்பனவு செய்ய வேண்டிய தொகையும் நிச்சயமாக / உறுதிபடக் கூறுவதற்கு முடியாத நிலை காணப்படும். சாத்தியமான கடப்பாடு இருக்குமே தவிர தற்காலக் கடப்பாடு இருக்க மாட்டாது.

சில சமயங்களில் தற்காலக் கடப்பாடு இருந்தாலும் கூட சாத்தியமான பொருளாதார நலன்களின் வெளிப்பாய்ச்சலினை நம்பகரமான முறையில் அளவீடு செய்து கொள்வதற்கு முடியாது இருந்தாலும் கூட அது நிகழத்தக்க பொறுப்பாகவே கருதப்படும்.

| ஏற்பாடுகள் | நிகழத்தக்க பொறுப்புக்கள் |
|---|---|
| 1. நிதிநிலைமைக் கூற்றில் தனியாக / வேறாக பொறுப்பாக அடையாளம் காணப்படும் | 1. நிதி நிலைமைக் கூற்றின் குறிப்பில் வெளிப்படுத்தப்படும் |
| 2. நிகழ்ச்சி நிச்சயம் | 2. நிகழ்ச்சி நிச்சயமாக நடைபெறும் என உறுதிபடக் கூறுவதற்கு முடியாது |
| 3. கடப்பாடு ஒன்று இருக்கும் | 3. கடப்பாடு இருப்பது உறுதி அல்ல |

## ❑ ஏற்பாட்டிற்கும், ஏனைய பொறுப்புக்களுக்கும் இடையிலான வேறுபாடு

ஏற்பாடு என்பது ஒரு பொறுப்பாகும். எனினும் அது ஏனைய பொறுப்புக்களிலிருந்து அதாவது கடன்கொடுத்தோர் மற்றும் அட்டுறுக்களிலிருந்தும் வேறுபடுகின்றது. ஏனெனில், ஏற்பாடு ஒன்றின் தீர்ப்பனவு செய்யப்படும் காலம் அல்லது தீர்ப்பனவு செய்யப்படும் தொகை நிச்சயமற்றதாக இருக்கும்.

**உதாரணம் :-** 1. திரு. இராம் என்பவருக்கு ரூபா 100,000 கொடுப்பனவு செய்யப்பட வேண்டியுள்ளது. அது எவ்வாறு செலுத்தப்படும் என்பது நிச்சயமாக அறியவரின் அது ஒரு பொறுப்பாகும். ஆனால் அத்தொகையினை ஒரு வருட காலத்திலா அல்லது இரண்டு வருட காலத்திலா? செலுத்தப்பட வேண்டும் என்பதில் ஒரு நிச்சயமற்ற தன்மை காணப்படுமாயின் அது ஏற்பாடாகக் கருதப்படும்.

இவ்வாறே திரு. இராம் என்பவருக்கு ஒரு வருட காலத்தினுள் குறித்த தொகையினைக் கொடுப்பனவு செய்தல் வேண்டும். ஆனால் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தொகை ரூபா 100,000மாகவா அல்லது ரூபா 200,000மாகவா இருக்கும் என்ற நிச்சயமற்ற நிலைமை காணப்படுமாயின் அதுவும் ஏற்பாடாகவே கருதப்படும்.

**உதாரணம் :-** 2 நிறுவனம் ஒன்று சந்தோஷ் நிறுவனத்திடம் இருந்து இருப்புக்களை கடனுக்குக் கொள்வனவு செய்துள்ளதாகக் கருதுக. இங்கு சந்தோஷ் நிறுவனத்திற்குக் கொடுக்குமதியான தொகையும், கொடுக்குமதியான காலமும் கொள்வனவு உடன்படிக்கையின்பொழுது தீர்மானிக்கப்பட்டு இருக்கும். இங்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தொகையிலோ அல்லது காலத்திலோ ஒரு நிச்சயமற்ற நிலை இல்லை என்பதை அவதானித்தல் வேண்டும்.

அறிக்கையிடும்போது ஏற்பாடானது நிதிநிலைமைக் கூற்றில் ஒரு தனியான அங்கமாகக் காட்டப்படும் அதேவேளை ஏனைய பொறுப்புக்களானது நடைமுறை

அல்லாத பொறுப்பு, நடைமுறைப் பொறுப்பு என்ற வகைப்படுத்தலின் கீழ் நிரற்படுத்திக் காட்டப்படும்.

| பொறுப்புக்கள் | ஏற்பாடுகள் |
|---|---|
| 1. கடப்பாட்டின் தீர்ப்பனவினால் எவ்வளவு பொருளாதார நன்மைகள், எப்பொழுது வெளிப் பாச்சப்படும் என்பது உறுதியாகும்.<br>2. ஐந்தொகையில் பொறுப்பாக அடையாளம் காணப்படும். | 1. கடப்பாட்டின் தீர்ப்பனவு எப்பொழுது நிகழும் அல்லது எவ்வளவு பொருளாதார நன்மைகள் வெளிப்பாய்ச்சப்படும்<br>2. ஐந்தொகையில் தனியான / வேறான பொறுப்பாக அடையாளம் காணப் படும். |

☐ **பின்வரும் காரணங்களின் அடிப்படையில் நிகழத்தக்க பொறுப்பு ஒரு பொறுப்பாக இனங் காணப்படுவதில்லை**

❋ பொருளாதார நலனுடன் இணைந்த **வள வெளிப்பாய்ச்சலுக்கு** நிகழ்காலப் பொறுப்பு உள்ளதா என்பது இன்னமும் தீர்மானிக்கப்படாதிருத்தல்

❋ நியமத்தின் படி நிகழ்காலக் கடப்பாடு உள்ளதா என்பதை இனங்காண்பதற்குத் தேவையான **நியதிகள்** பூர்த்தியடையாமை.

☐ **பொறுப்பு, ஏற்பாடு, நிகழத்தக்க பொறுப்புக்களிற்கு இடையிலான வேறுபாடு**

| பொறுப்பு | ஏற்பாடு | நிகழத்தக்க பொறுப்பு |
|---|---|---|
| கடந்தகால நிகழ்வின் விளைவால் நிகழ்காலத்தில் ஏற்பட்ட கடப்பாடு. இக்கடப்பாட்டைத் தீர்க்க பொருளாதார நலனுடன் இணைந்த வளத்தைக் கொடுக்க நேரிடும்.<br>Eg:-வியாபாரக் கடன் கொடுத்தோர், அட்டுறு செலவுகள் | காலம், பெறுமதி என்பன நிச்சயமற்ற தன்மையுள்ள பொறுப்பு<br>Eg:-வியாபார உத்தரவாதம் | வணிகத்தின் கடப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிகழ்வு/ பல நிகழ்வு ஏற்படுவதால்/ ஏற்படாது விடுவதால் ஏற்படக் கூடிய விளைவு இதுவாகும். இனங்காணலுக்கான நிபந்தனை பூர்த்தியாகாத பொறுப்பு இதில் அடங்கும்.<br>Eg:-ஊழியர் இழப்பீட்டுக் கோரிக்கை |

### வெளிப்படுத்தல்

ஒவ்வொரு வகை ஏற்பாடு தொடர்பாகவும் பின்வருவன வெளிப்படுத்தப்பட வேண்டும் என நியமத்தில் குறிப்பிடப்பட்டது.

1. ஏற்பாடுகளில் ஆரம்ப இறுதி மீதி
2. தற்போதுள்ள ஏற்பாட்டின் உயர்வை உள்ளடக்கியதாக குறித்த காலப் பகுதிக்குள் செய்யப்பட்ட மேலதிக ஏற்பாடுகள்.
3. குறித்த காலப்பகுதிக்குள்ளே பயன்படுத்திய பெறுமதி
4. குறித்த காலப்பகுதிக்குள்ளே பயன்படுத்தாமல் புதுப்பிக்கப்பட்ட பெறுமதி.

**உசாத்துணை நூல்கள்**


- குமாரசாமி கலைச்செல்வன், நவீன கணக்கீட்டுக் கோட்பாடுகள்
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி கணக்கீடு

# இலாப நோக்கற்ற நிறுவனங்கள்

செல்வி எ. டிலானி
2018 வர்த்தகப் பிரிவு

இலாபத்தினை உழைக்கும் நோக்கமின்றி செயற்பட்டு அங்கத்தவர்களினதும் சமூகத்தினதும் பொதுவான தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் முகமாக அங்கத்தவர்களினால் உருவாக்கப்பட்டு அவர்களின் பிரதிநிதிகளினால் இயக்கி வைக்கப்படும் அமைப்புக்களே இலாபநோக்கற்ற நிறுவனங்கள் எனலாம். இந்த அமைப்புக்களானவை சமய விவகாரம், விளையாட்டு, பொழுதுபோக்கு, உதவி புரிதல், கலைகள், அறிவியல் போன்ற பொதுவான நோக்கங்களின் அடிப்படையில் உருவாக்கிக் கொள்ளப்படுகின்றன.

விளையாட்டுக் கழகங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள், சனசமூக நிலையங்கள் போன்றவற்றை இலாபநோக்கற்ற நிறுவனங்களுக்கு உதாரணங்களாகக் கூறமுடியும். இவை தாம் செய்கின்ற செலவீனங்களுக்கான வருமானத்தினைப் பின்வரும் வழிமுறைகளூடாகப் பெற்றுக்கொள்கின்றன.

1. சந்தா கட்டணம்
2. அனுமதி கட்டணம்
3. நன்கொடைகள்
4. அதிஷ்ட இலாப சீட்டு விற்பனை
5. களியாட்ட விழா நுழைவுக் கட்டணம்
6. பிற தொழிற்பாட்டு நடவடிக்கைகள்
   உ+ம்:- சிற்றுண்டிச்சாலை வருமானம்

இந்நிறுவனங்கள் இலாபநோக்கமின்றி செயற்பட்டாலும் தமது நிதியறிக்கைகளை நிறுவனத்துடன் தொடர்புடைய கட்சியினருக்கு வழங்கவேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது. பொதுவாக இலாபநோக்கமற்ற நிறுவனங்கள் பின்வரும் நிதியறிக்கைகளைத் தயாரித்து நிறுவனத்தில் அக்கறை கொண்டுள்ள தரப்பினருக்கு வழங்குகின்றன.

1. கொள்ளல் கொடுத்தல் கணக்கு
2. வருமான செலவுக் கணக்கு
3. நிதிநிலைமைக் கூற்று
4. பிற இலாப செயற்பாடுகளுக்கான வருமானக்கூற்று

## ❑ கொள்ளல் கொடுத்தல் கணக்கு

இலாப நோக்கற்ற நிறுவனங்களின் காசு பெறுவனவுகள் மற்றும் காசு கொடுப்பனவுகள் பற்றிய தரவுகளை வழங்குவதற்கு இக்கணக்கு தயாரிக்கப்படும். இக்கணக்கு காசேட்டிலிருந்து பெற்றுக்கொள்ளும் தரவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது. இது இலாபநோக்கமுள்ள நிறுவனங்களின் காசேட்டை ஒத்தது.

## ❑ வருமான செலவுக் கணக்கு

இலாபநோக்கற்ற நிறுவனங்களின் செயற்திறனை மதிப்பீடு செய்ய செலவுகளையும் வருமானங்களையும் ஒப்பீடு செய்து தயாரிக்கும் கணக்கு வருமான செலவுக் கணக்கு ஆகும். இதில் கண்டுகொள்ளப்படுவது செலவிலும் கூடிய வருமானம் அல்லது வருமானத்திலும் கூடிய செலவாகும். இது இலாப நோக்கமுள்ள நிறுவனங்களின் இலாப நட்ட கணக்கை ஒத்தது.

பின்வரும் மீதிகள் Edward இளைஞர் கழகத்தின் புத்தகங்களிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டதாகும்.

| விபரம் | 2017 Jan 01 | 2017 Dec3 1 |
|---|---|---|
| விளையாட்டு உபகரணம் | *80000* | *90000* |
| 15% நிலையான வைப்புக்கள் | *120000* | *60000* |
| சிற்றுண்டிச்சாலை இருப்பு | *70000* | *50000* |
| சிற்றுண்டிச்சாலைக்கு செலுத்திய முற்பண வாடகை | *12000* | *6000* |
| சந்தா நிலுவை | *16000* | *10000* |
| காசும் வங்கியும் | *40000* | *24000* |
| சிற்றுண்டிச்சாலை கடன்கொடுத்தோர் | *40000* | *56000* |
| சென்மதி சிற்றுண்டிச்சாலை செலவுகள் | *10000* | *14000* |
| முற்பணமாகப் பெறப்பட்ட சந்தா | *8000* | *6000* |
| சிற்றுண்டிச்சாலை உபகரணம் | *30000* | *60000* |

### 2017ம் ஆண்டிற்கான சுருக்கப்பட்ட கொள்ளல் கொடுத்தல் கணக்கு வருமாறு

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| மீ/வ | *40000* | சிற்றுண்டிச்சாலை வாடகை | *78000* |
| அங்கத்தவர் சந்தா | *84000* | விளையாட்டு உபகரணம் | *30000* |
| சிற்றுண்டிச்சாலை விற்பனை | *250000* | சிற்றுண்டிச்சாலை செலவு | *32000* |
| விளையாட்டு | | புதினப்பத்திரிகை செலவுகள் | *4000* |
| போட்டிக்கான நன்கொடை | *34000* | மைதான பராமரிப்பு | *24000* |
| முதலீட்டு வருமானம் | | விளையாட்டுப் போட்டி செலவு | *40000* |
| | *12000* | சிற்றுண்டிச்சாலை காசு கொள்வனவு | *34000* |
| | | சிற்றுண்டிச்சாலை கடன் | *84000* |
| | | கொடுத்தோர் | *70000* |
| | | சிற்றுண்டிச்சாலை உபகரணம் | *24000* |
| | | மீ/ செ | |
| | *420000* | | *420000* |

### மேலதிக தகவல்கள்

*2017*ம் ஆண்டு காலத்தினுள் ரூ *4000* ரூ கிரயமான சிற்றுண்டிச்சாலை இருப்புக்கள் பழுதடைந்திருந்தன.

### வேண்டப்படுவது

2017 Dec 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் கணக்குகள்

1. சிற்றுண்டிச்சாலை வியாபார இலாபநட்டக் கூற்று
2. அங்கத்தவர் சந்தா கணக்கு
3. வருமான செலவு கணக்கு

**Edward இளைஞர் கழகத்தின் 2017 Dec 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான**

**சிற்றுண்டிச்சாலை வியாபார இலாபநட்டக் கூற்று**

| | | |
|---|---|---|
| விற்பனை | | 250000 |
| விற்ற சரக்கின் கிரயம் | | |
| ஆரம்ப இருப்பு | 70000 | |
| கொள்வனவு | 134000 | |
| | 204000 | |
| பழுதடைந்த இருப்பு | (4000) | |
| | 200000 | |
| இறுதியிருப்பு | (50000) | (150000) |
| | | 100000 |
| செலவுகள் | | |
| வாடகை | 84000 | |
| சிற்றுண்டிச்சாலை செலவு | 36000 | |
| உபகரண பெறுமானத் தேய்வு | 10000 | |
| பழுதடைந்த இருப்பு நட்டம் | 4000 | 134000 |
| **தேறிய இலாபம்** | | (34000) |

**Edward இளைஞர் கழகத்தின் 2017 Dec 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான**

**வருமான செலவு கணக்கு**

| | | |
|---|---|---|
| வருமானங்கள் | | |
| சந்தா | 80000 | |
| நிலையான வைப்பு வட்டி | 18000 | |
| விளையாட்டுப் போட்டி நன்கொடை | 34000 | 132000 |
| செலவுகள் | | |
| சிற்றுண்டிசாலை நட்டம் | 34000 | |
| விளையாட்டு உபகரண தேய்வு | 20000 | |
| புதினப்பத்திரிகை | 4000 | |
| மைதான பராமரிப்பு | 24000 | |
| விளையாட்டுப்போட்டி செலவு | 40000 | (122000) |
| **செலவிலும் கூடிய வருமானம்** | | 10000 |

**சந்தா கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| மீதி | 16000 | மீதி | 8000 |
| இ/ந/கூ | 80000 | கொள்ளல் கொ/ ல் | 84000 |
| மீ/செ | 6000 | மீ/செ | 10000 |
| | 102000 | | 102000 |
| மீ/வ | 10000 | மீ/வ | 6000 |

**கடன்கொடுத்தோர் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| கொள்ளல் கொ/ல் | 84000 | மீதி | 40000 |
| மீ/செ | 56000 | கொ/வு | 100000 |
| | 140000 | | 140000 |
| | | மீ/வ | 56000 |

**உசாத்துணை நூல்கள்**


- கு. கலைச்செல்வன், 'உயர் கணக்கீடு'
- D.Sam, 'Modern Theory of Financial Accounting

# சம்பளப் பட்டியல்

செல்வி ம. கௌசல்யா
2018 வர்த்தகப்பிரிவு

குறித்த கால வரையறையினுள் வேலையில் ஈடுபட்ட ஒவ்வொரு ஊழியத்துக்கும் தனித்தனியாகக் கொடுக்கப்பட வேண்டிய ஊதியக் கணிப்பீட்டையும் தேறிய ஊதியத்தினையும் உள்ளடக்கிய அனைத்து ஊழியர்களின் சம்பளம் உள்ளடங்கிய பட்டியல் சம்பளப் பட்டியல் ஆகும்.

## சம்பளப் பட்டியலின் முக்கியத்துவம்

- சம்பளம் தொடர்பான விபரங்களை தேவையானபோது பெறல்
- சம்பளம் தொடர்பான விபரங்களை நேரப்பதிவு, வேலைப்பதிவுக்கேற்ப கணிப்பிடல்
- பாதிடப்பட்ட கூலிக் கிரயத்துடன் உண்மைக் கூலிக்கிரயம் ஒப்பிடலாம்
- சம்பளம் சார் கொடுக்கல் வாங்கல்களில் ஊடகமாகப் பயன்படுத்தலாம்.

## சம்பளம் வழங்குவதில் கணக்கீட்டுத் துறையின் பணிகள்

- ஒவ்வொரு வேலையாட்களிற்கும் ஊதியப் பதிவு பராமரித்தல்
- ஒவ்வொரு வேலையாட்களிற்கும் மொத்த சம்பளம் தேறிய சம்பளம் கணிப்பிடல்
- ஒவ்வொரு வேலையாட்களிற்கும் உரிய நேரத்தில் சம்பளம் வழங்கல்
- மொத்த சம்பளத்தில் கழிக்கப்பட்ட கழிவை உரிய நிறுவனத்திற்கு அனுப்புதல்

## சம்பளப் பட்டியலின் மூல ஆவணங்கள்

- நியமனக் கடிதம்
- சுற்றுநிருபம்
- வரவுப் பதிவேடு
- நேர அட்டவணை

## சம்பளப் பட்டியலில் உள்ளடங்கும் பேரேட்டுக் கணக்குகள்

- சம்பளக் கணக்கு
- சம்பளக்கூலி கட்டுப்பாட்டு கணக்கு
- ஊழியர் கடன் கணக்கு
- ஊழியர் சேமலாப நிதிக் கணக்கு
- கடன் வட்டிக் கணக்கு

## சம்பளப் பட்டியலில் உள்ளடங்கும் விடயங்கள்

1. ஊழியர் பெயர், ஊழியர் இலக்கம் , தொடர் இலக்கம்

2. ஊழியர் கொடுப்பனவு :-

அடிப்படை சம்பளம்

மிகை ஊதியக் கொடுப்பனவு

படிகள்

3. ஊழியர் அறவீடுகள் :-

ஊழியர் சேமலாப நிதி

கடன்கள்

வட்டி

4. தொழில் வழங்குநர் பங்களிப்பு :-

ஊழிய நம்பிக்கை நிதியம் (ETF)

ஊழிய சேமலாப நிதியம் (EPF)

## ❐ சம்பளப் பட்டியலின் நாட்குறிப்பு பதிவுகள்

- மொத்தச் சம்பளம்

  சம்பளக் கணக்கு வரவு

  சம்பளக் கட்டுப்பாட்டு கணக்கு செலவு

- சம்பளம் மீதான கழிப்பனவு

  சம்பளக் கட்டுப்பாட்டு கணக்கு வரவு

  உரிய கழிப்பனவு கணக்கு செலவு

- தேறிய சம்பளம் பணமாகப் பெறும் போது

  சம்பளக் கணக்கு வரவு

  காசுக் கணக்கு செலவு

- தொழில் வழங்குநர் சேமலாப நிதியப் பங்களிப்பு

  ஊழியர் சேமலாப நிதி செலவு கணக்கு வரவு

  சென்மதி ஊழியர் சேமலாப நிதி கணக்கு செலவு

⇨ வினா 01

**சங்கவி நிறுவன 2017 டிசம்பர் மாத தகவல் வருமாறு**

| பெயர் | அடிப்படைச் சம்பளம் | வாழ்க்கைப் படி | சந்தா | கடன் அறவீடு |
|---|---|---|---|---|
| மலர் | 20000 | 5000 | 100 | 1000 |
| மாலி | 30000 | 5000 | 100 | - |
| லீலா | 20000 | 4000 | 100 | 2000 |
| சுதா | 25000 | 4000 | 100 | 1000 |

**மேலதிக தகவல்**

- தேறிய சம்பளம் பணமாக செலுத்தப்பட்டது.
- நிறுவனம் EPF இற்கு அடிப்படை சம்பளம் படிகள் சேர்த்த பெறுமதியில் 12% உம் ஊழியர் 8% உம் பங்களிப்பு செய்கின்றன.
- நிறுவனம் ETF இற்கு 3% பங்களிப்பு செய்கின்றது.

| தொடர் இல. | ஊழியர் பெயர் | அடிப்படைச் சம்பளம் | படிகள் | மொத்தம் | சந்தா | கடன் அறவீடு | EPF அறவீடு | மொத்தம் | தேறிய சம்பளம் | EPF | ETF |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மலர் | 20,000 | 5000 | 25,000 | 100 | 1000 | 2000 | 3100 | 21,000 | 3000 | 750 |
| 2 | மாலி | 30,000 | 5000 | 35,000 | 100 | - | 2800 | 2900 | 32,000 | 4200 | 1050 |
| 3 | லீலா | 20,000 | 4000 | 24,000 | 100 | 2000 | 1920 | 4020 | 19,980 | 2830 | 720 |
| 4 | சுதா | 25,000 | 4000 | 29,000 | 100 | 1000 | 2320 | 3420 | 25,580 | 3480 | 870 |
| | மொத்தம் | 95,000 | 18,000 | 113,000 | 400 | 4000 | 9040 | 13,440 | 99,560 | 13,560 | 3390 |

**சம்பள கட்டுப்பாட்டு கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| சந்தா | 400 | சம்பளம் | 113,000 |
| கடன் | 4000 | | |
| EPF | 9,040 | | |
| காசு | 99,560 | | |
| | 113,000 | | 113,000 |

**ஊழியர் சேமலாப நிதி கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| | | சம்.கட்டு | 9040 |
| | | EPF | 13,560 |
| மீ/செ | 22600 | | |
| | 22600 | | 22600 |

**ஊழியர் நம்பிக்கை நிதியக் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| மீ/செ | 3390 | இ/ந | 3390 |
| | 3390 | | 3390 |

**சம்பளக் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| சம்பளம் | 113,000 | இ/ந | 113,000 |
| | 113,000 | | 113,000 |

**ஊழியர் சேமலாப நிதி செலவுக் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| EPF | 13560 | இ/ந | 13560 |
| | 13560 | | 13560 |

**உசாத்துணை நூல்கள்**


- S. சகாயராயன், 'கிரயக் கணக்கீடு'

# பெறுமதி சேர் வரியுடனான கொடுக்கல் வாங்கல்களும் அவற்றுக்கான பதிவுகளும்

செல்வி மி.சஜீவனா
2018 வர்த்தகப் பிரிவு

பொருட்கள் சேவைகளின் உற்பத்தி, விற்பனை, விநியோகச் செயற்பாட்டின் ஒவ்வொரு நிலையிலும் அல்லது இடத்திலும் அவற்றின் சேர்க்கப்பட்ட பெறுமதி மீது விதிக்கப்படும் வரி பெறுமதி சேர் வரி எனப்படும்.

- **செலுத்த வேண்டிய பெறுமதி கூட்டப்பட்ட வரிக்கான சமன்பாடு**

செலுத்த வேண்டிய VAT = வெளியீட்டு VAT – உள்ளீட்டு VAT

அல்லது

செலுத்த வேண்டிய VAT = விற்பனைக்கான VAT – கொள்வனவுக்கான VAT

- **பெறுமதி கூட்டப்பட்ட வரியின் அனுகூலங்கள்**

1. ஒரு பொருள் மீண்டும் மீண்டும் வரிக்கு உட்படுவது தவிர்க்கப்படுவதுடன் இரட்டிப்புவரியும் நீக்கப்படுகின்றது.
2. கூட்டப்பட்ட பெறுமதிக்கு வரி விதிக்கப்படுவதால் மொத்த விற்பனை வரியில் உள்ள வரி குவிப்புத்தன்மை நீக்கப்படுகின்றது.
3. இவ் வரி நுகர்வோரையே சென்றடைவதால் உற்பத்தியாளர், விற்பனையாளர் ஊக்குவிக்கப்படுகின்றனர்.


- **பெறுமதி கூட்டப்பட்ட வரியின் பிரதிகூலங்கள்**

1. இவ் வரி சில பொருட்கள் சேவைகளிற்கு அறவிடப்படுவதில்லை. அத்துடன் சில பொருட்கள் சேவைகளிற்கு வேறுபட்ட வீதத்தில் அறவிடப்படுகின்றது. இவ்வாறான நிலைமைகள் நிறுவனத்திற்கு சிக்கலானதாக அமையும்.
2. சிறிய வணிக நிறுவனங்களிற்கு தேவையற்ற செலவு ஏற்படும்.
   Eg: - கணக்காளரிடம் செல்லும் செலவு
3. விநியோக செயற்பாட்டின் முழுவரியும் நுகர்வோரே செலுத்த வேண்டி ஏற்படும்.

பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கான பதிவு செய்யப்பட்டவை எனக் கொள்க. தளபாடம் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர் ஒருவர் தான் விற்பனை செய்யும் தளபாடம் ஒன்றுக்கு 100000 ரூபா VAT நீக்கிய விலையை விற்பனையாளருக்குக் குறிக்கின்றார். மேற்படி விற்பனையாளர் தளபாடத்தினை 150000 ரூபா VAT நீக்கிய விற்பனை விலையில் நுகர்வோரிற்கு விலை குறிக்கின்றார்.

VAT *15%*

*மேற்படி சம்பவத்தினைக் கொண்டு பெறுமதி கூட்டப்பட்ட வரி செலுத்தப்படும் முறையை ஓர் வரிப்படம் மூலம் பின்வருமாறு காட்டலாம்.*




### ❒ VAT உள்ளடக்கிய இரட்டைப் பதிவுகள்

1. பொருட்கள் சேவைகளின் காசுக் கொள்வனவிற்கு,

| | | |
|---|---|---|
| கொள்வனவு கணக்கு (வரவு) | XXX | |
| VAT கணக்கு (வரவு) | XXX | |
| காசுக் கணக்கு (செலவு) | | XXX |

2. பொருட்கள் சேவைகள் கடன் கொள்வனவிற்கு,

| | | |
|---|---|---|
| கொள்வனவு கணக்கு (வரவு) | XXX | |
| VAT கணக்கு (வரவு) | XXX | |
| வியாபார சென்மதி கணக்கு (செலவு) | | XXX |

3. பொருட்கள் சேவைகளின் காசு விற்பனைக்கு,

| | | |
|---|---|---|
| காசு கணக்கு (வரவு) | XXX | |
| விற்பனை கணக்கு (செலவு) | XXX | |
| VAT கணக்கு (செலவு) | | XXX |

4. பொருட்கள் சேவைகளின் கடன் விற்பனைக்கு,

| | | |
|---|---|---|
| வியாபார வருமதி (வரவு) | XXX | |
| விற்பனை கணக்கு (செலவு) | | XXX |
| VAT கணக்கு (செலவு) | | XXX |

5. VAT உள்ளடங்கிய வெளித் திரும்பலிற்கு

| | | |
|---|---|---|
| வியாபார சென்மதி கணக்கு (வரவு) | XXX | |
| வெளித்திரும்பல் கணக்கு (செலவு) | | XXX |
| VAT கணக்கு (செலவு) | | XXX |

6. VAT உள்ளடங்கிய உட்திரும்பலிற்கு

உட்திரும்பல் கணக்கு (வரவு) XXX

VAT கணக்கு (வரவு) XXX

வியாபார வருமதி கணக்கு (செலவு) XXX

7. VAT உள்ளடக்கிய நடைமுறை அல்லா சொத்து காசு கொள்வனவுக்கு,

நடைமுறை அல்லா சொத்து கணக்கு (வரவு) XXX

VAT கணக்கு (வரவு) XXX

காசு கணக்கு (செலவு) XXX

8. VAT உள்ளடக்கிய நடைமுறை அல்லா சொத்து கடன் கொள்வனவுக்கு,

நடைமுறை அல்லா சொத்து கணக்கு (வரவு) XXX

VAT கணக்கு (வரவு) XXX

நடைமுறை அல்லா சொத்து கடன்கொடுத்தோர் கணக்கு (செலவு) XXX

9. VAT உள்ளடக்கிய விளம்பரச் செலவிற்கு,

விளம்பர கணக்கு (வரவு) XXX

VAT கணக்கு (வரவு) XXX

காசுக் கணக்கு அல்லது அட்டுறு செலவுக் கணக்கு (செலவு) XXX

Eg:- கடன் கொள்வனவிற்கான விலைப்பட்டியல் ஒன்றின் பெறுமதி ரூ **230000.** இது **15%** பெறுமதி சேர்வரியினை உள்ளடக்கியுள்ளது. இந்தக் கொடுக்கல் வாங்கலைப் பதிவதற்கான இரட்டைப் பதிவினைக் குறிப்பிடுக.

VAT நீக்கியது + VAT = VAT உள்ளடக்கியது

100% + 15% = 115%

$$= \frac{230000}{115} \times 15 = 30\,000$$

$$= \frac{230000}{115} \times 10 = 20\,000$$

கொள்வனவு கணக்கு (வரவு) **200000**

VAT கணக்கு (வரவு) **30000**

கடன்கொடுத்தோர் கணக்கு (செலவு) **230000**

## ❐ VAT கட்டுப்பாட்டு கணக்கு

VAT தொடர்பான மொத்தங்களைப் பதிவு செய்து உள்நாட்டு இறைவரி திணைக் களத்திற்குச் செலுத்த வேண்டிய VAT இனை கணிப்பீடு செய்து கொள்வதற்கு தயாரிக் கப்படும் மொத்தக் கணக்கு VAT கட்டுப்பாட்டுக் கணக்காகும்.

**VAT கட்டுப்பாட்டு கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| காசுக் கொள்வனவு | XXX | ஆரம்ப மீ/வ (சென்மதி) | XXX |
| வியாபார சென்மதி (கொள்வனவு) | XXX | காசு விற்பனை | XXX |
| வியாபார வருமதி (உட்திரும்பல்) | XXX | வியாபார வருமதி (விற்பனை) | XXX |
| காசு அல்லது வங்கி | XXX | வியாபார சென்மதி (வெளித்திரும்பல்) | XXX |
| மீ/செ | XXX | | |
| | XXX | | XXX |
| | | மீ/வ (உள்நாட்டு இறைவரி திணைக் களத்திற்கு செலுத்த வேண்டிய VAT) | XXX |

Eg:- வரையறுக்கப்பட்ட Ocean. பொது கம்பனியின் 31/03/2018ல் முடிவடையும் ஆண்டுடன் தொடர்புடையவை. (VAT 15% எனக் கொள்க)

| | ரூ (000) |
|---|---|
| 01/04/2017ல் செலவு மீதி | 3000 |
| ஆண்டுக்கான காசு கொள்வனவு ( VAT உட்பட) | 460 |
| ஆண்டுக்கான கடன் கொள்வனவு ( VAT நீங்கலாக) | 700 |
| ஆண்டுக்கான காசு விற்பனை ( VAT உட்பட) | 920 |
| ஆண்டுக்கான கடன் விற்பனை ( VAT நீங்கலாக) | 900 |
| மோட்டார் வாகனம் கொள்வனவு ( VAT நீங்கலாக) | 500 |
| காசாக செலுத்திய VAT | 300 |

VAT கட்டுப்பாட்டு கணக்கினைத் தயாரிக்க.

VAT கட்டுப்பாட்டு கணக்கு

| | | | |
|---|---|---|---|
| காசு கட்டுப்பாடு (கொள்வனவு) | 60 | மீ/வ | 3000 |
| கடன் கொடுத்தோர் (கொள்வனவு) | 105 | காசு (விற்பனை) | 120 |
| காசு கட்டுப்பாடு (மோ.வாகனம்) | 75 | கடன்பட்டோர் (கட்டுப்பாடு) | 135 |
| காசு கட்டுப்பாடு (கொடுத்தகாசு) | 300 | | |
| மீ/செ | 2715 | | |
| | 3255 | | 3255 |
| | | மீ/வ (VAT சென்மதியாக நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்பின் கீழ் காட்டப்படும். | 2715 |

செய்கை : -

1) $\frac{460}{115} \times 15 = 60$

2) $\frac{700}{100} \times 15 = 105$

3) $\frac{900}{100} \times 15 = 135$

4) $\frac{500}{100} \times 15 = 75$

5) $\frac{920}{115} \times 15 = 120$

Eg:- சர்மிளா வணிக நிறுவனம் VATற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஆகும். (VAT 15% எனக் கொள்க)

1/4/2017ல் 800000/- பட்டியல் விலை கொண்ட இயந்திரம் ஒன்றை கடனிற்கு கொள்வனவு செய்தது. வியாபாரக் கழிவு பட்டியல் விலையில் 10% ஆகும். 30 நாட்களினுள் பணம் செலுத்தப்படுமாயின் 20% காசு கழிவு பெற்றுக் கொள்ளப்படும்.

வேண்டப்படுவது

1. இயந்திரத்தின் கிரயம்
2. இயந்திர கொள்வனவுக்கான பதிவு
3. பெற்ற கழிவுக்கான நாட்குறிப்பேட்டுப் பதிவு

1. இயந்திரத்தின் கிரயம் $= 800\,000 \times \frac{10}{100} = 80\,000$

$800\,000 - 80\,000 = 720\,000$

2. $720\,000 \times \frac{15}{100} = 108\,000$

| | | |
|---|---|---|
| இயந்திர கொள்வனவு கணக்கு (வரவு) | 720 000 | |
| VAT கட்டுப்பாட்டு கணக்கு (வரவு) | 108 000 | |
| இயந்திர கடன்கொடுத்தோர் கணக்கு (செலவு) | | 820 000 |

3. $828\,000 \times \frac{20}{100} = 165\,600$

| | | |
|---|---|---|
| இயந்திர கடன்கொடுத்தோர் கணக்கு (வரவு) | 165600 | |
| பெற்ற கழிவு கணக்கு (செலவு) | | 165600 |

**உசாத்துணை நூல்கள்**


- தேசிய கல்வி நிறுவகம், 'ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் - 12' - 2017
- குமாரசாமி கலைச்செல்வம், "உயர்கணக்கீடு - பாகம் I", 2015, பிறில்லியன் பப்லிகேஷன்


---

## பக்கம் 32 இன் குறிக்கெழுத்துப் புதிரிற்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ம் | ற | ற | மா | ட | 2 இ | | 3 நி | ல | ம் |
| ள | 7 ந | மை | ரு | 4 அ | க | நி | தி | ச | 5 வ |
| ப | ம் | 6 ப | ணி | செ | ய | ல் | 22 மு | றை | மை |
| ம் | பி | 8 கே | டி | ட் | 10 வ | 11 க | ல | தை | றை |
| 23 ச | க் | ள் | | ம் | ள | ட | த | ந் | 9 இ |
| | கை | 17 வி | லை | ள | ம் | ன் | ன | 20 ச | |
| 1 மு | த | லா | ளி | த் | து | வ | ம் | ல | 21 கா |
| | த் | | | வு | 15 தி | ட் | ட | ம் | |
| 19 தொ | கு | 18 தி | | ல | | டி | வு | றி | 14 அ |
| 12 அ | க | 13 உ | த் | 16 த | ம | இ | ரு | ப் | பு |

# ஆதனம் பொறி மற்றும் உபகரண அசைவுக் கூற்று

செல்வி ஜெ.ஜெனிபர்
2018 வர்த்தகப்பிரிவு

கம்பனி ஒன்றின் குறித்த ஆண்டுச் செயற்பாட்டின் விளைவாக நடைமுறையல்லாத சொத்துக்களில் ஏற்படுகின்ற மாற்றங்களினைக் காட்டுகின்ற கூற்று சொத்து அசைவுக் கூற்று எனப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) *16*ற்கமைய ஆதனம், பொறி, உபகரணம், என்பவற்றின் கிரயத்திலும் திரண்ட பெறுமானத் தேய்விலும் ஏற்படுகின்ற மாற்றத்தை உள்ளடக்கி தயாரிக்கப்படும் கூற்று ஆகும்.

## ❑ ஆதனம் பொறி மற்றும் உபகரணத்தின் மீள்மதிப்பீடு – Revaluation

ஆதனம் பொறி மற்றும் உபகரணத்தின் முன் கொண்டு செல்லும் பெறுமதியில் ஏற்படும் மாற்றத்தினை தகுதி வாய்ந்த மதிப்பீட்டாளர்களினால் மதிப்பீடு செய்தல் மீள் மதிப்பீடு எனப்படும்.

இம்மதிப்பீடானது ஆதனம் பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதி, பாவனைக் காலம் என்பவற்றில் மேற்கொள்ளப்படும். நிதிக் கூற்றுக்களில் ஆதனம் பொறி மற்றும் உபகரணத்தின் சந்தைப் பெறுமதி அல்லது மீள்மதிப்பீட்டுப் பெறுமதியினை வெளிப்படுத்துவதற்கு **பொருத்தமான தன்மை** என்ற குணவியல்பு வழிசெய்கின்றது.

சந்தைப் பெறுமதியை அல்லது மீள்மதிப்பீட்டுப் பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் காட்டும் போதும் வரலாற்றுக்கிரய எண்ணக்கரு மீறப்படுகின்றது. அத்துடன் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு கைவிடப்படுகின்றது.

## ❑ கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களில் மீள்மதிப்பீடு தொடர்பான வெளிப்படுத்தல்கள்

1. சொத்துக்களை முதல் தடவையாக மீள்மதிப்பீடு செய்யும் போது மிகை ஏற்படுமாயின் இலாபம் / நட்டம் மற்றும் முற்றும் அடங்கிய வருமான கூற்றில் ஏனைய முற்றும் அடங்கிய வருமானத்தின் கீழ் காட்டப்படுதல் வேண்டும்.
2. சொத்துக்கள் முதல் தடவையாக மீள்மதிப்பீடு செய்யும் போது நட்டம் ஏற்படுமாயின் இலாபம் / நட்டம் மற்றும் முற்றும் அடங்கிய வருமானக் கூற்றில் ஏனைய செயற்பாட்டு கிரயத்தின் கீழ் காட்டப்படுதல் வேண்டும்.

Eg:- ***2014.03.31***ல் உள்ளவாறான நிறுவனமொன்றின் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் முன் கொண்டு செல்லும் தொகை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

HOLY FAMILY CONVENT LIBRARY

(000)

| உருப்படி | நிலம் | கட்டடம் | இயந்திரம் | மோட்டார் வாகனம் |
|---|---|---|---|---|
| 2013.04.01ல் உள்ளவாறான மீதி (கிரயத்தில்) | 1000 | 5000 | 6200 | 9000 |
| சேர்ப்புக்கள் (மேலதிக தகவல் I) | - | 2250 | 1600 | 1250 |
| 2013.04.01 இலுள்ளவாறான திரண்ட பெறுமானத் தேய்வு | - | (1250) | (3000) | (2000) |
| விற்பனை (மேலதிக தகவல் II) | - | - | (50) | (350) |
| 2014.03.31ல் முன் கொண்டு செல்லும் தொகை | 1000 | 6000 | 4750 | 7900 |

**மேலதிக தகவல்**

I. சேர்ப்பனவுகளின் விபரங்கள்

- கட்டடங்களின் சேர்ப்புக்களானது மேற்கொள்ளப்பட்ட புதுப்பித்தல் செலவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இதனால் இக் கட்டடத்தின் பயன்தரு பாவனைக் காலம் 10 வருடங்களால் அதிகரித்துள்ளது. இக்கட்டடமானது 2003.04.01ல் ரூ 5,000,000/- க்கு வாங்கப்பட்டது.
- இயந்திரங்கள் 2014.03.31ல் வாங்கப்பட்டன.
- 2013.10.01ல் ரூ 1,200,000றக்கு மோட்டார் வாகனம் வாங்கப்பட்டது. மோட்டார் பதிலீடு செய்யப்பட்ட ரூ50000 கிரயம் கொண்ட மோட்டார் உதிரிப் பாகங்களும் சேர்ப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

II. ரூ 200,000 கிரயம் கொண்டதும் 2013.04.01ல் முழுமையான பெறுமான தேய்விடப்பட்டதுமான இயந்திரம் ஒன்று 2014.01.01ல் ரூ 50,000 றக்கு விற்கப் பட்டது. ரூ 500,000 கிரயம் கொண்டதும் 2013.04.01ல் ரூ 300,000 திரண்ட பெறுமானத் தேய்வைக் கொண்டதுமான மோட்டார் வாகனம் ஒன்று 2013.09.31ல் விற்கப்பட்டது. இவ்விற்பனைகளினால் பெறப்பட்ட காசு மேற் தரப்பட்ட அட்டவணையில் விற்பனைகள் எனக் காட்டப்பட்டுள்ளது.

III. 2014.03.31ல் காணியும் கட்டடமும் முறையே ரூ4000000, ரூ 10000000 ஆக மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. எனினும் மேற்தரப்பட்ட அட்டவணையில் இப்பெறுமதியில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

IV. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்கான எஞ்சிய பெறுமதியை புறக் கணிக்குக.

V. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் நேர்கோட்டு முறையில் கீழ்த்தரப்பட்டுள்ள பாவனைக்கால அடிப்படையில் பெறுமானத் தேய்விடப்படுகின்றது.

கட்டடங்கள் 40 வருடங்கள் (பயன்தரு பாவனைக்கால அதிகரிப்பை கருத்தில் எடுப்பதற்கு முன்னரானது)

இயந்திரங்கள் 4 வருடங்கள்

மோட்டார் வாகனம் 5 வருடங்கள்

**வேண்டப்படுவது**

1. *2014.03.31ல் உள்ளவாறான ஆதனம் பொறி மற்றும் உபகரண அசைவுக் கூற்று*
2. *2014.03.31ல் இலுள்ளவாறான மேற்தரப்பட்ட கொடுக்கல் வாங்கல் நிகழ்வு களினால் உரிமையாண்மையில் ஏற்பட்ட தேறிய தாக்கம் (அதிகரிப்பு / குறைவு தொகைகளுடன்)*

*விடை - 01*

**ஆதனம் பொறி மற்றும் உபகரண அசைவுக் கூற்று**

| கிரய உருப்படி | நிலம் | கட்டடம் | இயந்திரம் | மோட்டார் வாகனம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 01/04/2013இல் மீதி | 1000 | 5000 | 6200 | 9000 | 21200 |
| சேர்த்தல் | - | 2250 | 1600 | 1200 | 5050 |
| மீள் மதிப்பீட்டு மிகை | 3000 | 4150 | - | - | 7150 |
| அகற்றல் | - | (1400) | (200) | (500) | (2100) |
| **31/03/2014 மீதி** | 4000 | 10000 | 7600 | 9700 | 31300 |
| பெறுமானத் தேய்வு ஏற்பாடு | | | | | |
| 01/04/2013 மீதி | - | 1250 | 3000 | 2000 | 6250 |
| நடப்பாண்டு தேய்வு | - | 150 | 1500 | 1870 | 3520 |
| அகற்றல் | - | (1400) | (200) | (350) | (1950) |
| **31/03/2014 மீதி** | - | 0 | 4300 | 3520 | 7820 |
| 31/03/2014 கொண்டு செல் மீதி | | | | | 23480 |

- *நிலம் கணக்கு வரவு* 3000
  *நிலம் மீள்மதிப்பீட்டு ஒதுக்க கணக்கு செலவு* 3000
  *(நிலம் மீள்மதிப்பீட்டு மிகை பதிவின் போது)*
- *கட்டட பெறுமானத் தேய்வு ஏற்பாடு கணக்கு வரவு* 1400
  *கட்டட கணக்கு வரவு* 2700
  *கட்டட மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கு செலவு* 4150
  *(கட்டட மீள் மதிப்பீட்டு மிகை பதிவின் போது)*

*விடை - 02*

***31/03/2014ல் தேறிய சொத்தில் ஏற்பட்ட தாக்கம்.***

| | |
|---|---|
| *நிலம் மீள்மதிப்பீட்டு மிகை* | 3000 |
| *கட்டட மீள்மதிப்பீட்டு மிகை* | 4150 |
| *இயந்திர விற்பனை இலாபம்* | 50 |
| *மோட்டார் விற்பனை இலாபம்* | 200 |
| *பெறுமானத் தேய்வு* | (3520) |
| *மோட்டார் பதிலீட்டு கிரயம்* | (50) |
| *உரிமையாண்மை அதிகரிப்பு* | 3830 |

**உசாத்துணை நூல்**

- கலைச்செல்வன் 'நவீன கணக்கீட்டுக் கோட்பாடுகள்
- உயர் கணக்கீடு K. பாலகஜன்

# காசுப் பாய்ச்சற் கூற்று (LKAS – 07)

செல்வி க.ஜாக்சினி
2018 வர்த்தகப்பிரிவு

## ❑ காசுப் பாய்ச்சற் கூற்று

நிறுவனம் ஒன்றின் குறிப்பிட்ட காலப்பகுதி ஒன்றிற்கான காசு பெறுவனவுகளையும் காசு கொடுப்பனவுகளையும் காட்டுகின்ற கூற்றே காசுப் பாய்ச்சற் கூற்று எனப்படும்.

## ❑ காசுப் பாய்ச்சற் கூற்று தயாரிக்கப்படும் முறை

1. நேர்முறை  2. நேரில் முறை

**மதுரா தனி வியாபார நிறுவனத்தின் 2016.03.31இலும், 2017.03.31 இலும் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் வருமாறு**

| விபரம் | 2016 | 2017 |
|---|---|---|
| இயந்திரம் | 50000 | 70000 |
| தளபாடம் | 40000 | 60000 |
| முதலீடுகள் | 25000 | 30000 |
| கையிருப்பு | 15000 | 10000 |
| கடன்பட்டோர் | 20000 | 18000 |
| காசு, வங்கி | 40000 | 52000 |
| | 190000 | 240000 |
| ஆரம்ப மூலதனம் | 100000 | 125000 |
| அறிமுகப்படுத்திய மூலதனம் | 10000 | 5000 |
| நிறுத்தி வைத்த வருமானம் | 20000 | 30000 |
| பற்றுக்கள் | (5000) | (20000) |
| | 125000 | 140000 |
| வங்கிக்கடன் | 45000 | 70000 |
| கடன் கொடுத்தோர் | 20000 | 30000 |
| | 190000 | 240000 |

**2017.03.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம் ரூபா 30000 பின்வருமாறு சீராக்கிய பின் பெறப்பட்டது.**

| | |
|---|---|
| பெறுமானத்தேய்வு:- | |
| இயந்திரம் | 5000 |
| தளபாடம் | 4000 |
| இயந்திர விற்பனை இலாபம் | 3000 |
| தளபாட விற்பனை நட்டம் | 1000 |
| விற்பனை திகதியில் சொத்தின் முன்கொண்டு செல்லும் பெறுமதி | |
| இயந்திரம் | 20000 |
| தளபாடம் | 15000 |

வேண்டப்படுவது: -

*31.03.2017இல் முடிவடைந்த ஆண்டுக்கான நேரில் முறையிலான காசுப்பாய்ச்சல் கூற்று.*

**மதுரா தனி வியாபார நிறுவனத்தின் 31.03.2017இல் முடிவடைந்த ஆண்டிற்கான நேரில் முறையிலான காசுப் பாய்ச்சற் கூற்று**

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கையில் இருந்தான காசுப்பாய்ச்சல் | | |
| தேறிய இலாபம் | 30000 | |
| சீராக்கல்: | | |
| இயந்திரத் தேய்வு | 5000 | |
| தளபாடத் தேய்வு | 4000 | |
| இயந்திர விற்பனை இலாபம் | (3000) | |
| இயந்திர விற்பனை நட்டம் | 10000 | |
| **தொழிற்படு மூலதன மாற்றத்திற்கு முன்னரான காசுப்பாய்ச்சல்** | 37000 | |
| தொழிற்படு மூலதன மாற்றம் | | |
| இருப்பு குறைவு | 5000 | |
| கடன்பட்டோர் குறைவு | 2000 | |
| கடன்கொடுத்தோர் அதிகரிப்பு | 10000 | |
| **செயற்பாட்டு நடவடிக்கையில் இருந்தான தேறிய காசு** | | 54000 |
| முதலீட்டு நடவடிக்கையில் இருந்தான காசுப்பாய்ச்சல் | | |
| முதலீடுகள் | (5000) | |
| தளபாட விற்பனை | 14000 | |
| தளபாட கொள்வனவு | (39000) | |
| இயந்திர விற்பனை | 23000 | |
| இயந்திர கொள்வனவு | (45000) | |
| **முதலீட்டு நடவடிக்கையில் பயன்படுத்திய தேறிய காசு** | | (52000) |
| நிதியிடல் நடவடிக்கையில் இருந்தான காசுப்பாய்ச்சல் | | |
| அறிமுகப்படுத்திய மூலதனம் | 5000 | |
| பற்று | (20000) | |
| வங்கி கடன் பெற்றது | 25000 | |
| **நிதியிடல் நடவடிக்கையில் இருந்தான தேறிய காசு** | | 10000 |
| **காசு, காசுக்கு சமனானவற்றின் தேறிய அதிகரிப்பு** | | 12000 |
| **ஆரம்ப காசும், காசுக்கு சமனானவையும்** | | 40000 |
| **இறுதி காசும் காசுக்கு சமனானவையும்** | | 52000 |

இயந்திரக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 50000 | தேய்வு | 5000 |
| கொள்வனவு | 45000 | விற்பனை | 20000 |
| | | மீ/செ | 70000 |
| | 95000 | | 95000 |
| மீ/வ | 70000 | | |

தளபாடக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 40000 | தேய்வு | 4000 |
| கொள்வனவு | 39000 | விற்பனை | 15000 |
| | | மீ/செ | 60000 |
| | 79000 | | 79000 |
| மீ/வ | 60000 | | |

**உசாத்துணை நூல்கள்**

- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, கணக்கீடு
- உயர் கணக்கீடு K.பாலகஜன்



# இருப்புக் கட்டுப்பாடு

செல்வி யூ.ஜோதிகா
2018 வர்த்தகப்பிரிவு

வியாபார நிறுவனங்கள் உத்தம மட்டத்தில் இருப்பினைப் பேணுதல் இருப்புக் கட்டுப்பாடு ஆகும். அதாவது இருப்புத் தொடர்பில் மிகை நிலையோ பற்றாக்குறை நிலையோ இன்றி இருப்பின் அளவினைப் பேணுதல் இருப்புக் கட்டுப்பாடு ஆகும்.

**❑ இருப்புக்களானவை பின்வரும் மட்டங்களில் வகைப்படுத்தப்படுகின்றன:**

1. மூலப்பொருள் இருப்பு - குறிப்பிட்ட உற்பத்திக்கு அவசியமான மூலப்பொருட் களுக்கான வளங்களைக் குறித்து நிற்பது மூலப்பொருள் இருப்பு ஆகும்.

2. குறைவேலை இருப்பு - குறிப்பிட்ட உற்பத்திச் செயற்பாட்டில் உற்பத்தி செய்து முடிந்தும் முடியாததுமான தன்மை கொண்ட வளங் களைக் குறித்து நிற்பது குறைவேலை இருப்பு ஆகும்.


3. முடிவுப்பொருள் இருப்பு - குறிப்பிட்ட உற்பத்திச்செயற்பாட்டில் உற்பத்தி செய்து முடிவடைந்த பண்டங்களின் இருப்பினைக் குறித்து நிற்பது முடிவுப் பொருள் இருப்பாகும்.

இவ்வாறான இருப்புக்களுடன் கொள்வனவுக்கிரயம், கட்டளைக்கிரயம், பராமரிப்புக் கிரயம், இருப்பின்மைக் கிரயம் போன்றவை தொடர்புபடுகின்றன.

ஆகக்கூடிய இருப்பு மட்டம். ஆகக் குறைந்த இருப்பு மட்டம், மறுகட்டளையிடும், மட்டம் ஆகியவற்றினை பேணி இருப்பினைக் கட்டுப்படுத்துகின்ற நுட்பம் இருப்பு மட்டங்களைப் பேணல் என அழைக்கப்படும். இங்கு இருப்பு மட்டங்கள் பற்றிய விடயங்களுடன் பின்வருவன தொடர்புபடுகின்றன.

1. மறுகட்டளையிடும் தொகை
2. மறுகட்டளையிடும் மட்டம்
3. ஆகக்கூடிய இருப்பு மட்டம்
4. ஆகக் குறைந்த இருப்பு மட்டம்
5. சராசரி இருப்பு மட்டம்

**இருப்பு மட்டங்கள் இவ்வாறு வரைபடம் மூலம் காட்டப்படும்.**




### ❑ மறுகட்டளை மட்டம்

பொருள் பாவனையானது எம்மட்டத்திற்கு வருகின்ற போது கட்டளையானது இடப்படுகின்றதோ அம்மட்டம்.

மறுகட்டளை மட்டம் = ஆகக்கூடிய பாவனை X ஆகக்கூடிய பாவனைக் காலம்

### ❑ ஆகக்கூடிய இருப்பு மட்டம்

குறிப்பிட்ட நிறுவனத்தில் குறித்த பொருள் இருப்புத் தொடர்பில் எம்மட்டத்தினை விட இருப்பின் அளவானது அதிகரிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படாமல் இருக்கின்றதோ அவ்விருப்பு மட்டம்.

ஆகக்கூடிய இருப்பு மட்டம் = (மறுகட்டளை மட்டம் + மறுகட்டளை தொகை) - (ஆகக்குறைந்த பாவனை + ஆகக்குறைந்த பாவனைக்காலம்)

### ❑ ஆகக்குறைந்த இருப்பு மட்டம்

குறிப்பிட்ட நிறுவனத்தில் குறித்த பொருள் தொடர்பில் அம்மட்டத்தினைவிட இருப்பின் அளவானது குறைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படாமல் இருக்கின்றதோ அது ஆகக்குறைந்த இருப்புமட்டம் ஆகும்.

ஆகக்குறைந்த இருப்பு மட்டம் = மறுகட்டளை மட்டம் - ( சராசரி பாவனை X சராசரி பாவனைக் காலம் )

சராசரி இருப்பு மட்டம் = (ஆகக்கூடிய இருப்பு மட்டம் + ஆகக் குறைந்த இருப்பு மட்டம்) / 2

### ❑ மறுகட்டளையிடும் தொகை


இருப்புச் செலவும் கட்டளையிடும் செலவும் சமனிலை அடையுமிடத்து அல்லது மொத்தக்கிரயம் இழிநிலை அடையுமிடத்து தீர்மானிக்கப்படும் கட்டளையிடும் அலகுகளின் எண்ணிக்கை மறுகட்டளை தொகையாகும்.

$$EOQ = \sqrt{2DCO/_{Ch}}$$

D = வருடாந்த கேள்வி
Co = ஒரு அலகுக்கான கட்டளை செலவு
Ch = ஒரு அலகுக்கான பராமரிப்பு செலவு

இருப்புக் கட்டுப்படுத்தும் அட்டைகள் கொள்கலன் அட்டை, களஞ்சியப் பேரேடு என இரு வகைப்படுத்தப்படும். களஞ்சியத்தில் களஞ்சியக் காப்பாளரால் பராமரிக்கப்படும் அலகு ரீதியான விடயங்களை வெளிப்படுத்தும் அட்டை கொள்கலன் அட்டை எனவும், கிரயக் கணக்காளரால் களஞ்சியத்திற்கு கிடைத்த, விநியோகத்த மீதிப் பொருட்களின் விபரங்களை அலகு மீதியுடன் பணப்பெறுமதியில் வெளிப்படுத்துவது களஞ்சியப் பேரேடு எனவும் அழைக்கப்படும்.

### ❑ இருப்புக் கட்டுப்பாட்டில் உள்ளடங்கும் பிரிவினரும் பயன்படுத்தப்படும் ஆவணங்களும் உள்ளடங்கிய பாய்ச்சல் வரைபடம்




1. களஞ்சிய வேண்டுதல் பத்திரம் **2.** கொள்வனவு வேண்டுதல் பத்திரம்
3. கொள்வனவுக் கட்டளை **3.** பொருள் பெறுகைப் பத்திரம்
5. பொருள் விநியோகப் பத்திரம்

Eg:- சர்மி உற்பத்தி நிறுவனத்தின் X எனும் பொருள் தொடர்பான தரவுகள் பின்வருமாறு

| | |
|---|---|
| விநியோகிக்கும் காலம் | 05-15 நாட்கள் |
| சராசரி பாவனை | 15 அலகுகள் நாள் ஒன்று |
| ஆகக்கூடிய பாவனை | 20 அலகுகள் நாள் ஒன்று |
| வருடாந்தப் பாவனை | 5000 அலகுகள் |
| கட்டளைச் செலவுகள் கட்டளை ஒன்றுக்கு | ரூ 20 |
| கொள்விலை அலகு ஒன்றுக்கு | ரூ 50 |
| களஞ்சியப் பராமரிப்பு செலவுகள் அலகு பெறுமதியில் | 10% |

**கணிக்கப்பட வேண்டியது**

1. மறுதரம் கட்டளையிடும் தொகை
2. மறுதரம் கட்டளையிடும் மட்டம்
3. உச்ச இருப்பு மட்டம்
4. இழிவு இருப்பு மட்டம்
5. சராசரி இருப்பு மட்டம்

1. மறுகட்டளை தொகை $= \sqrt{^{2DCO}/_{Ch}}$

$= \sqrt{\frac{2x5000x20}{50x^{10}/_{100}}}$

$= \sqrt{\frac{200000}{5}}$

$= \sqrt{40000}$

$= 40000^{½}$

$=$ 200 அலகு

2. மறுகட்டளை மட்டம் = ஆகக்கூடிய பாவனை x ஆகக்கூடிய பாவனைக்காலம்

= 20 x 15

= *300* அலகுகள்

3. உச்ச இருப்பு மட்டம் = மறுகட்டளை மட்டம் + மறுகட்டளை தொகை - (ஆகக்குறைந்த பாவனை X ஆகக்குறைந்த பாவனை மட்டம்)

= 300 + 200 – (10x5)

= 450 அலகுகள்

4. இழிவு இருப்பு மட்டம் = மறுகட்டளை மட்டம் - (சராசரி பாவனை x சராசரி பாவனை காலம்)

= 300 – (15x10)

= 150 அலகுகள்


5. சராசரி இருப்பு மட்டம் = (உச்ச இருப்பு மட்டம் - ஆகக் குறைந்த இருப்பு மட்டம்) / *2*

$$= \frac{450 - 150}{2}$$

= 150 அலகுகள்

**உசாத்துணை நூல்கள்**

- ஆசிரியர் வழிகாட்டி, கணக்கீடு
- உயர் கணக்கீடு K.பாலகஜன்



# மேந்தலை உறிஞ்சல் / மேந்தலை உள்ளடக்கம்

செல்வி வா.எப்சியா
2018 வர்த்தகப்பிரிவு

## ❑ மேந்தலை கிரயம் (Overhead Cost)

ஒரு தனி அலகுக்கென குறிப்பாக இனங்காண முடியாத கிரயங்கள் மேந்தலைக் கிரயம் எனப்படும். தற்போதைய சூழ்நிலைகளில் மேந்தலைகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன. ஒரே பொருளை வெவ்வேறு உற்பத்தி நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொழுது அவ் உற்பத்தி பொருட்களுக்கான கிரயங்களும் வேறுபடுகின்றன. அவ் வேறுபாட்டிற்கு பிரதானமான காரணமாக ஒவ்வொரு நிறுவனத்தினதும் மேந்தலைகள் அமைகின்றன. மேந்தலைகளுக்கு உதாரணங்களாக தொழிற்சாலை வாடகை, இயந்திர திருத்தச்செலவு, இயந்திர பெறுமானத் தேய்வு, தொழிற்சாலை மின்சாரம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மேந்தலை கிரயம் | = | நேரில் மூலப்பொருள் கிரயம் | + | நேரில் கூலி கிரயம் | + | ஏனைய நேரில் செலவுகள் |

நிறுவனங்களின் தொழிற்பாடுகளின் அடிப்படையில் மேந்தலைகளை இருவகையாகப் பிரிக்க முடியும்.

1. உற்பத்தி மேந்தலை கிரயம்
2. உற்பத்தி அல்லாத மேந்தலை கிரயம்

சுருக்கமாகக்கூறின் உற்பத்தி நடவடிக்கைகளின் போது ஏற்பட்ட மேந்தலை கிரயங்கள் உற்பத்தி மேந்தலை கிரயமாகும். உதாரணமாக இயந்திர பெறுமானத் தேய்வு, தொழிற்சாலை வாடகை, தொழிற்சாலை மின்சாரம் என்பவற்றைக் கருதலாம். அடுத்து உற்பத்தி செயற்பாடுகளுடன் எந்தவகையிலும் தொடர்புபடாத அனைத்து நேரில் செலவீனங்களும் உற்பத்தி அல்லா மேந்தலை கிரயமாகும். இது 2 வகைப்படும்.

1. நிர்வாக மேந்தலைகள்
   Eg:- நிர்வாகி சம்பளம், கணக்காளர் சம்பளம்
2. விற்பனை மேம்படுத்தல் மேந்தலைகள்
   Eg:- விற்பனை முகாமையாளர் சம்பளம், மேம்படுத்தல் செலவு

## ❑ மேந்தலைக் கிரயங்களைப் பகிர்தல்

குறிப்பிட்ட ஒரு கிரய நிலையத்துக்கென தெளிவாக இனங்காண முடியாத மேந்தலைக் கிரயங்களை ஏதேனுமோர் அடிப்படையில் மேந்தலை கிரயங்களைப்

பகிர்ந்து வழங்குதல் மேந்தலைப் பகிர்வு எனப்படும். இது 2 வகைப்படும்.

1. முதலாம் கட்டப்பகிர்வு / ஆரம்பப் பகிர்வு
2. இரண்டாம் கட்டப்பகிர்வு

நேரடியாக குறிப்பிட்ட துறைகளுக்குப் பகிரமுடியாத மேந்தலைகளை ஏதேனும் ஒரு அடிப்படையில் அத்துறைகளுக்கிடையே (உற்பத்தித்துறை, சேவைத்துறை) பகிர்தல் முதலாம் கட்டப் பகிர்வு எனப்படும். வெளியீடுகள் எதனையும் தராத உற்பத்திப் பகுதிகளுக்கு சேவைகளை வழங்கும் சேவைத்துறைகளின் மேந்தலைகளை உற்பத்திப் பகுதிகளுக்கிடையே தொடர்புபட்ட ஏதேனுமொரு அடிப்படையில் பகிர்வு செய்தல் இரண்டாம் கட்டப்பகிர்வு எனப்படும்.

### ❑ மேந்தலை உள்ளடக்கல் வீதங்கள்

ஒரு குறிப்பிட்ட கிரய அலகொன்றிற்கான மொத்த மேந்தலை கிரயத்தினை உள்ளடக்கும் வீதமாகும்.

1. பாதீட்டு அடிப்படை
2. உண்மைப் பெறுமதி அடிப்படை

### ❑ பாதீட்டு அடிப்படையில் மேந்தலை உள்ளடக்கம்

1. நேர்மூலப்பொருள் கிரயம் $= \dfrac{\text{பாதிடப்பட்ட மேந்தலை கிரயம்}}{\text{பாதிடப்பட்ட நேர் மூலப்பொருள் கிரயம்}} \times 100$

2. நேர்கூலி கிரயம் $= \dfrac{\text{பாதிடப்பட்ட மேந்தலை கிரயம்}}{\text{பாதிடப்பட்ட நேர்கூலி கிரயம்}} \times 100$

3. முதன்மைக் கிரயம் $= \dfrac{\text{பாதிடப்பட்ட மேந்தலை கிரயம்}}{\text{பாதிடப்பட்ட முதன்மை கிரயம்}} \times 100$

4. வெளியீட்டு அலகு ஒன்றிற்கான வீதம் $= \dfrac{\text{பாதிடப்பட்ட மேந்தலை கிரயம்}}{\text{பாதிடப்பட்ட உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை}} \times 100$

5. நேர்ஊழிய மணித்தியாலம் $= \dfrac{\text{பாதிடப்பட்ட மேந்தலை கிரயம்}}{\text{பாதிடப்பட்ட நேர் ஊழிய மணித்தியாலம்}} \times 100$

6. இயந்திர மணித்தியாலம் $= \dfrac{\text{பாதிடப்பட்ட மேந்தலை கிரயம்}}{\text{பாதிடப்பட்ட இயந்திர மணித்தியாலங்களின் எண்ணிக்கை}} \times 100$

### ❑ உண்மை பெறுமதி அடிப்படையில் மேந்தலையின் உள்ளடக்கல்

1. நேர்மூலப்பொருள் கிரயம் $= \dfrac{\text{உண்மை மேந்தலை கிரயம்}}{\text{உண்மை மூலப்பொருள் கிரயம்}} \times 100$

2. நேரக்கூலி கிரயம் = $\frac{\text{உண்மை மேந்தலை கிரயம்}}{\text{உண்மை நேர்கூலி கிரயம்}} \times 100$

3. முதன்மைக் கிரயம் = $\frac{\text{உண்மை மேந்தலை கிரயம்}}{\text{உண்மை மூலக் கிரயம்}} \times 100$

4. வெளியீட்டு அலகு ஒன்றிற்கான வீதம் = $\frac{\text{உண்மை மேந்தலை கிரயம்}}{\text{உண்மை உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை}} \times 100$

5. நேர்ஊழிய மணித்தியாலம் = $\frac{\text{உண்மை மேந்தலை கிரயம்}}{\text{உண்மை நேர் ஊழிய மணித்தியாலம்}} \times 100$

6. இயந்திர மணித்தியாலம் = $\frac{\text{உண்மை மேந்தலை கிரயம்}}{\text{உண்மை இயந்திர மணித்தியாலங்களின் எண்ணிக்கை}} \times 100$

இலத்திரனியல் மின்விளக்குகளை உற்பத்தி செய்யும் Bright கம்பனி 2 உற்பத்தி பகுதிகளையும் ஒரு சேவைப் பகுதியையும் கொண்டுள்ளது. 2018 January மாதத்திற்கான மேந்தலை கிரயங்கள் மற்றும் ஏனைய தகவல்கள் வருமாறு.

| மதிப்பிடப்பட்ட மேந்தலை | தொகை |
|---|---|
| வாடகை | 180000 |
| நேரில் கூலிகள் | 2000000 |
| இயந்திரக் காப்புறுதி | 210000 |
| இயந்திரத்திற்கான மின்சார பாவனை | 770000 |
| வெளிச்சத்திற்கான மின்சாரம் | 480000 |
| ஊழியர் நலன்புரி செலவுகள் | 390000 |

ஏனைய தகவல்கள்:

| விபரம் | திணைக்களம் | | |
|---|---|---|---|
| | உற்பத்தித் திணைக்களம் 1 | உற்பத்தித் திணைக்களம் 2 | சேவைத் திணைக்களம் |
| ஊழியர் எண்ணிக்கை | 80 | 100 | 20 |
| இயந்திர பெறுமதி (ரூபா 000) | 18000 | 15000 | 3000 |
| இயந்திர மணித்தியாலம் | 15000 | 20000 | - |
| தரை பரப்பு ($M^2$) | 12000 | 10000 | 2000 |

சேவைத் திணைக்களத்தில் மேந்தலைகளினை உற்பத்தி திணைக்களங்கள் இடையே இயந்திர மணித்தியாலங்களின் அடிப்படையில் பகிர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது**

1. பொருத்தமான அடிப்படைகளைப் பயன்படுத்தி திணைக்களங்களிடையே மேந்தலைகளைப் பகிர்க.
2. சேவை பகுதியின் மேந்தலையினை உற்பத்தி திணைக்களங்களிடையே மீள்பகிர்வு செய்க.
3. ஒரு இலத்திரனியல் காற்றாடியினை உற்பத்தி செய்ய உற்பத்தி திணைக்களம் 1, 4 இயந்திர மணித்தியாலங்களையும் உற்பத்தி திணைக்களம் 2 மூன்று இயந்திர மணித்தியாலங்களையும் பயன்படுத்துகின்றது. இலத்திரனியல் மின்விளக்கு ஒன்றின் கிரயத்தினை கணிப்பீடு செய்வதற்கு ஒவ்வொரு உற்பத்தித் திணைக்களங்களினதும் மேந்தலை கிரயங்கள் உள்ளடக்கப்படும் அளவினைக் கணிப்பிடுக.

**மேந்தலை பகிர்வுக்கூற்று**

| மேந்தலைகள் | அடிப்படைகள் | மேந்தலை கிரயம் | திணைக்களங்கள் உ. தி 1 | உ. தி 2 | சே. தி |
|---|---|---|---|---|---|
| வாடகை | தரைபரப்பு | 180000 | 90000 | 75000 | 15000 |
| நேரில் கூலி | ஊழியர் எண்ணிக்கை | 2000000 | 800000 | 1000000 | 200000 |
| இயந்திர காப்புறுதி | இயந்திர பெறுமானம் | 210000 | 105000 | 87500 | 17500 |
| இயந்திர மின்சார பாவனை | இயந்திர மணித்தியாலம் | 770000 | 330000 | 440000 | - |
| வெளிச்சத்திற்கான மின்சாரம் | தரை பரப்பு | 480000 | 240000 | 200000 | 40000 |
| ஊழியர், நலன்புரி, செலவு | ஊழியர் எண்ணிக்கை | 390000 | 156000 | 195000 | 39000 |
| | | 4030000 | 1721000 | 1197500 | 311500 |
| இண்டாம் சட்டப்பகிர்வு | இயந்திர மணித்தியாலம் | | 133500 | 178000 | (311500 |
| | | | 1854500 | 1375500 | |

அலகொன்றிற்கான உற்பத்தி திணைக்களம் 1ன் கிரயம் $= \frac{1854500}{15000} \times 4$

$= 494.50/=$

அலகொன்றிற்கான உற்பத்தி திணைக்களம் 2ன் கிரயம் $= \frac{1375500}{20000} \times 3$

$= 2061.30/=$

வரையறுத்த யோதிகா கம்பனி 02 உற்பத்தி திணைக்களங்களையும் 01 சேவைத் திணைக்களத்தையும் கொண்டுள்ளது. அடுத்துவரும் மாதத்திற்கான பாதீடு செய்யப் பட்ட கிர்யங்கள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| விபரம் | தொகை |
|---|---|
| கட்டட வாடகை | 600000 |
| இயந்திரங்களுக்கான மின்சாரம் | 300000 |
| இயந்திரப் பெறுமானத் தேய்வு | 450000 |
| மேற்பார்வை செலவுகள் | 900000 |
| ஊழியர் நலச் செலவுகள் | 300000 |
| | 2550000 |

**மேலதிக தகவல்கள்**

| விபரம் | திணைக்களங்கள் | | |
|---|---|---|---|
| | உற்பத்தி 1 | உற்பத்தி 2 | சேவை |
| நேரில் மூலப்பொருள் கிரயம் | 100000 | 150000 | 50000 |
| நேரில் கூலிகள் | 200000 | 150000 | 150000 |
| தரைப்பரப்பு (சதுர மீற்றர்) | 140 | 50 | 10 |
| இயந்திர மணித்தியாலம் | 100 | 100 | - |
| ஊழியர் எண்ணிக்கை | 20 | 16 | 4 |
| எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி அலகுகள் | 20000 | 10000 | - |

**குறிப்பு :** சேவைத் திணைக்களத்திற்கு மேந்தலைகள் 02 உற்பத்தி திணைக்களங் களுக்கிடையே இயந்திர மணித்தியாலங்கள் அடிப்படையில் மீள்பகிர்வு செய்யப்படல் வேண்டும்.

**வேண்டப்படுவது**

1. ஒவ்வொரு திணைக்களங்களுக்குமிடையிலான மேந்தலைகளைப் பகிர்வு செய்க.
2. சேவைத் திணைக்களத்தின் மேந்தலையினை உற்பத்தி திணைக்களங்களிடையே மீள்பகிர்வு செய்க.
3. உற்பத்தி வெளியீட்டிற்கமைய ஒவ்வொரு திணைக்களங்களுக்கான உறிஞ்சல் வீதத்தினைக் கணிப்பிடுக.

**மேந்தலைப் பகிர்வு கூற்று**

| விபரம் | அடிப்படை | மொத்தம் | திணைக்களங்கள் | | |
|---|---|---|---|---|---|
| | | | உற்பத்தி 1 | உற்பத்தி 2 | சேவை |
| நேரில் மூலப்பொருள் | ஒதுக்கீடு | 300000 | 100000 | 150000 | 50000 |
| நேரில் கூலி | ஒதுக்கீடு | 500000 | 200000 | 150000 | 150000 |
| கட்டட வாடகை | தரைப்பரப்பு 15:5:1 | 600000 | 450000 | 150000 | 30000 |
| இயந்திர மின்சாரம் | இய.மணி 11:1 | 300000 | 150000 | 150000 | - |
| இயந்.பெறு.தேய்வு | இய.மணி 1:1 | 450000 | 225000 | 225000 | - |
| மேற்பார்வை செலவு | ஊழி.எண் 5:4:1 | 900000 | 450000 | 360000 | 90000 |
| ஊழியர்நலச் செலவு | ஊழி.எண் 5:4:1 | 300000 | 150000 | 120000 | 30000 |
| | | 3850000 | 1695000 | 1305000 | 350000 |
| | | | 175000 | 175000 | (350000) |
| சேவை திணைக்க மீள்பார்வை | | | 1870000 | 1480000 | 0 |

உற்பத்தி திணைக்களம் 1இற்கான உறிஞ்சல் வீதம் $= \frac{1870000}{20000} = 93.50/-$

உற்பத்தி திணைக்களம் 2இற்கான உறிஞ்சல் வீதம் $= \frac{1480000}{10000} = 148/-$

**உசாத்துணை**

- குமாரசுவாமி கலைச்செல்வன் - கணக்கீடு பகுதி - II

# கல்வியினால் உயர்வோம்!

செல்வி எ.விதுஷா
2018 வர்த்தகப் பிரிவு

சின்னஞ்சிறிய வயதினிலே
சிறகடிக்கும் பறவைகளாய்
வர்த்தகம் என்னும் வரம்பினிலே
வளமான வாழ்வைப் பெற்றிடுவோம்.

வண்ணமயமான உலகினிலே
வாழ்க்கை என்னும் வட்டத்திலே
வரையறையில்லா வணிகக்கல்வியை
வளம் பெறவே கற்றிடுவோம்.


பொன்னான பொருளியலை
பொல்லாப்புக்கள் இல்லாமல்
ஆசையுடனும் ஆர்வத்துடனும்
பக்குவமாய் பயின்றிடுவோம்.

கரை இல்லா கணக்கீட்டை
கவனத்துடனே மேற்கொண்டு
பயிற்சிகள் பல பெற்று
சிறந்த பெறுபேற்றை அடைந்திடுவோம்.

அந்நிய மொழியாம் ஆங்கிலத்தை
ஆழமாய் ஆராய்ந்து கற்று
அறிவுடனும் தெளிவுடனும்
உலகை வலம் வந்திடுவோம்.

புத்தம் புது கண்டுபிடிப்பால்
புதுமை அடைந்த தகவல் தொடர்பாடலை
புதுப் பொலிவுடன் எழச் செய்து
புத்துருவாக்கம் புனைந்திடுவோம்.

எதிர்கால உலகினிலே
பல்கலைக்கழகம் சென்று
பட்டதாரி என்னும் பெயரிலே
பாரினிலே ஓங்கிடுவோம்.



# தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம்



# தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம்



# Role of Software Agents in e-Commerce

**Mr.R.Kumaran**
B.Sc.
**Teacher - J/Holy Family Convent National School.**

## What is e-Commerce?

e-commerce consists of the buying and selling of products or services between organization and individuals over electronic systems such as the Internet and world wide web.

e-business is not only buying and selling goods & services through World Wide Web (WWW), but also servicing customers, marketing, and conducting electronic transactions within an organization.

e-commerce means doing business over interconnected networks. The term commerce is treated as transactions between business clients. So the meaning Electronic Commerce is narrow to some people thus there is a usage of term e-Business. But e-Commerce is not just buying and selling but also providing services to the clients and providing both inter and intra transactions of information in the organization irrespective of the type of company. This extended use of internet for trade and business led to the use of software agents in e-Commerce.

In recent years, the Internet or World Wide Web (WWW) due to its exponential growth enabled substantial progress in new information society functions such as online commerce.

Electronic commerce entails business-to-business (B2B), business-to-consumer (B2C) and consumer-to-consumer (C2C) transactions. It encompasses a wide range of issues including security, trust, privacy, reputation, law, payment mechanisms, advertising, ontologies, electronic product catalogs, intermediaries, multimedia shopping experiences, and back office management. Agent technologies can be applied to any of these areas. The potential of the Internet for truly transforming commerce is largely unrealized to date. Electronic purchases remain mostly non-automated. While information about different products and vendors is easily accessible and orders and payments can be dealt with electronically, a human is still in the loop in all stages of the buying process. Traditional shopping activities require a large effort from a human buyer collecting and interpreting information on merchants, products and services, making an optimal purchase decisions and finally entering appropriate purchase and payment information. Software agents

help automate a variety of activities, mostly time consuming ones, and thus lower the transaction costs. Software agents differ from "traditional" software in that they are personalized, social, continuously running and semi-autonomous. In this way, e-commerce is becoming more user-friendly, semi-intelligent and human-like. These qualities are conductive for optimizing the whole buying experience and revolutionizing commerce.

### What are Software Agents?

Software agent is a computer program which works autonomously towards goals in a dynamic environment on behalf of another entity (user) over extended period of time.

Although the theory of agents stated that agent is given a very famous with the growth of internet. Software agents are a piece of software which works for the user. However, software agent is not just a program. An agent is a system situated within and a part of an environment that senses that environment and acts on it. Over time in pursuit of its own agenda and so as to effect what it senses in the future.

### Characteristics of Software Agents

✓ Autonomous
✓ Goal-oriented
✓ Flexible
✓ Adaptive
✓ Communicative
✓ Self-starting

### The following are the Examples for Software Agents:


- Buyer or shopping agent.
- e-commerce agent.
- User or personal agent.
- Monitoring-and-surveillance agent.
  Eg. Managing company inventory (stock control) levels
- Data-mining agent.

### Some more Properties of Software Agent

1. Autonomy: agents operate without the direct intervention of humans.
2. Pro-activeness: able to exhibit goal-directed behavior by taking the initiative.
3. Reactivity: agents perceive their environment and respond to it in timely fashion to changes that occur in it.
4. Social ability: agents interact with other agents.

**Software agents are like guards and locomotives of most e-Commerce. The following are very few applications:**

- Software agents can do their task without any outsource intervention.
- Social interaction with other software agents and human.
- Software agents are specific in their goals.
- Good software agent is the one which has the attitude to receive and adopt changes. The agent must be programmed in a powerful language so as to express the rules.
- Safety of the information must be promised by the agent.
- Effective usage of the existing resources.
- Software agent must be a good sailor
- Software agents must be very careful in handling unauthorized users. The same information must be accessed by the user to which they have right.




**Common applications of agent software in popular e-commerce portals**

❈ It can help customers to determine what to buy to satisfy a specific need.

❈ It helps consumers decide what product best fits their profile and requirements.


❈ Once the consumer has decided what to buy, it will help in doing comparisons, usually of prices from different vendors.

❈ It can notify the customers and even provide assistance.

❈ It is used to profile customers using shopping agents.

**References:**

- *Understanding the Role of Software Agents in e-Commerce by Zakaria Maamar*
- *Impacts and Limitations of Intelligent Agents in electronic commerce by Dong Su Jin1 and Kyoung Jun Lee*



# வணிகத்தில் தொழிநுட்பத்தினது தாக்கம்

செல்வி அ. மேரிபிரியங்கா
2018 வர்த்தகப்பிரிவு

மாற்றம் ஒன்றே மாறாதது என்பதற்கு இன்றைய நவீன உலகமே மிகச்சிறந்த எடுத்துக்காட்டு. அதிலும் இன்றைய தொழிநுட்ப யுகம் மனித பரம்பரையின் நவீன வாழ்விற்கு ஆணிவேராகக் காணப்படுகின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு இன்றைய உலகம் மனிதனின் கைவிரல் அசைவில் சுருங்கி உள்ளது என்பதை இன்று நாம் அனைவரும் கண்கூடாகக் காணலாம்.

இன்று நுகர்வோரின் வாழ்க்கை பாணி மட்டும் அல்லாமல் அவர்களின் தேவை, விருப்பம் ஏன் அவர்கள் கொள்வனவு முறைகூட மாறிவிட் டது. காரணம் நுகர்வோரின் கல்வி அறிவும் மற்றும் வணிக முறைமையும் இன்று தொழிலநுட்பத்திற்கு ஏற்ப இசைவாக்கம் அடைந்து காணப்படுகின்றது. ஆரம்பகால வணிகங்களுக்கும் தற்கால வணிகங்களுக்கும் பல வேறுபாடுகள் காணப்படுகின்றது.

இன்றைய நவீன வணிகங்களின் பிரதான நோக்கங்களாக இலாபம் உழைத்தல், சந்தை பங்கை அதிகரித்தல் போன்றன பிரதான இடத்தை வகிக்கின்றன. இவ்வாறு இன்றைய வணிகங்கள் தமது நோக்கத்தை அடைந்துகொள்ள தொழிநுட்ப முறைமை முக்கிய பங்காற்றுகின்றது. பொதுவாக இன்றைய நுகர்வோர் சொகுசு வாழ்க்கையையே அதிகளவு விரும்பி அதற்கேற்பவே தமது வாழ்க்கை பாணியைக் கொண்டு நடத்துகின்றனர். அதாவது Online Shopping, e- Banking, Mobile Commerce போன்ற முறைகளில் நுகர்வோர் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்வதை நாம் கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது. இன்றைய நுகர்வோரின் தேவை விருப்பத்தைப் பூர்த்தி செய்ய நிகழ்வுநிலை அங்காடிக் கொள்வனவு (Online Shopping) முக்கியபங்கு வகிக்கின்றது. இது இணையத்தினூடாக உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் உள்ள வர்த்தக நிறுவனங்களின் பொருள்களை அல்லது சேவைகளை வழங்குவதும் நுகர்வோர் பொருள்களை அல்லது சேவைகளைக் வாங்குவதும் ஆகும். இன்றைய தொழிநுட்ப உலகின் பிரபல்யமான மின்வர்த்தக வலைக் கடப்பிடங்களாக alibaba, amazon, ebay, mattel போன்றவற்றை இனங்காணலாம். இவ்வாறான மின்வர்த்தக வலைகடப்பிடங்கள் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைவதற்கு முக்கிய காரணமாக புவியியல் ரீதியாக வரையறைகள் இன்மை, நேரம் மற்றும் பயணச் செலவை இழிவழவாக்க முடிதல், சர்வதேச சந்தைகளுடன் நுகர்வோர் தம்மை இணைத்துக் கொள்ளல், பலதரப்பட்ட பொருட் தேர்வில் நுகர்வோர் தமக்குத் தேவையானதைத் தெரிவுசெய்ய முடிதல் என்பன காணப்படுகின்றது.

வணிகர்கள் சந்தை இடங்களைப் பயன்படுத்தாமல் தொழிநுட்ப ரீதியான சந்தை வெளிகளைப் பாவிப்பதன் மூலம் தமது சந்தை பரப்பை விரிவாக்குவதோடு

மட்டும் அல்லாமல் பலதரப்பட்ட நுகர்வோரையும் கவரக்கூடிய வாய்ப்பொன்று வணிகங்களுக்கு அமைகின்றது. இன்று கணினி அடிப்படையிலான பல தகவல் முறைமைகள் காணப்படுகின்றன. அவற்றுள் தொழிற்பாட்டசைவு முறைவழியாக்க முறைமை(TPS), அலுவலக தன்னியக்க முறைமை (OAS), வாடிக்கையாளர் உதவுநிலை முறைமை (CRM) போன்றன இன்று வணிகங்களுக்கு பெரும் அளவு பங்களிப்பைச் செலுத்துகின்றது.

தொழிற்பாட்டசைவு முறைவழியாக்க முறைமை என்பது நிறுவனம் ஒன்றின் நாளாந்த பணிகளை ஆற்றுவதற்கென வடிவமைக்கப்பட்ட தகவல்முறைமை ஆகும். இது நிறுவன செயற்பாட்டிற்குத் தேவையான தகவல்களைச் சேகரித்தல், களஞ்சியப் படுத்தல், மாற்றங்களுக்கு உட்படுத்தல் தேவைப்படும் போது மீளப்பெறல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. உதாரணமாக Banking System, Sales Order, Purchasing Order என்பவற்றைக் குறிப்பிடலாம்.

அடுத்து வாடிக்கையாளர் உதவுநிலை முறைமையானது வியாபார நிறுவனத்திற்கும் அதன் வாடிக்கையாளருக்கும் மற்றும் வியாபார பங்குதாரருக்கும் இடையே சிறந்த சேவைகளை வழங்கும்முகமாக வடிவமைக்கப்பட்ட தகவல் முறைமையாகும். உதாரணமாக இது விற்பனை, சந்தைப்படுத்தல் என்பவற்றை வாடிக்கையாளருக்கு செயற்திறன் மிக்க முறையில் வழங்குவதற்கு உதவுகின்றது. இவ்வாறு தொழிநுட்பத்தின் பல முறைமைகள் வணிகத்திற்கும், வாடிக்கையாளருக்கும் இலகுவான தொடர்பை ஏற்படுத்த உதவுகின்றது.

மேலும் தொழிநுட்பத்தின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றும் முகவர் தொழில் நுட்பமும் இன்றைய மின்வர்த்தக வலைக்கடப்பிடங்களுக்கு மட்டும் அல்லாமல், தொழிநுட்ப வளர்ச்சிக்கும் பெரிதும் பங்காற்றுகின்றது. மென்பொருள் முகவர் என்பது ஓர் கணினி செய்நிரல் ஆகும். அது நீட்சிக்கப்பட்ட நேரத்தில் இன்னோர் உள்பொருள் சார்பாக ஓர் இயங்குநிலை சூழலில் நோக்க அடிப்படையில் தன்னியக்கமான முறையில் தொழிற்படுகின்றது. மென்பொருள் முகவர்களுக்கு உதாரணமாக Buyer or Shopping Agent, E- Commerce Agent, Moinitoring - And - Surveillance Agents என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறான E- commerce agent வாடிக்கையாளர்களின் தேவையினைத் திருப்தி செய்வதற்கு ஏற்ப என்ன பொருளை வாங்க வேண்டும் என்பதற்கு மின்வர்த்தக முகவர் உதவுகின்றது. அத்தோடு வாடிக்கையாளருக்கு பொருட்கள் தொடர்பில் மின் வர்த்தக முகவர் அறிவிக்கின்றது. வாடிக்கையாளர் பொருள் ஒன்றை வாங்குவதற்கு தீர்மானிக்கும் போது வேறுபட்ட விற்பனையாளர்களிடமிருந்தான விற்பனை ஒப்பீடுகளைத் தருகின்றது. இவ்வாறு வர்த்தக செயற்பாட்டிற்கு மட்டும் அல்லாது கற்றல் செயற்பாட்டிற்கும் கூட இவ் முகவர் தொழிநுட்பம் பெரிதும் உதவுகின்றது.

ஆகவே நுகர்வோரை மையமாகக் கொண்ட வணிகங்கள் இவ்வாறான தொழில் நுட்பமுறைக்கு மாற்றம் அடைவதன் மூலம் நுகர்வோனை தமது சார்பாக கவர்ந்து கொண்டு நுகர்வோரது தேவை, விருப்பங்களைப் பூர்த்தி செய்வதன் ஊடாக வணிகங்கள் தமது இலக்குகளை இலகுவாக அடைந்து கொள்ளமுடியும். எனவே இன்றைய வணிகங்களின் துரித வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் தகவல் தொழிநுட்பம் பெரிதும் பங்காற்றுகின்றது.

**உசாத்துணை**

- W.W.W. nie.gov.lk

# பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் - 2017

| பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை |
|---|---|---|
| தர்சிகா தவராஜா | 3A | 3 |
| மேரி ஜென்சியா அன்ரன் குமார் | 2AC | 9 |
| மேரி டானியா அன்ரன் கொன்சாலஸ் | 3A | 28 |
| லூர்த்திகா அருள்நேசன் | 2AB | 59 |
| அனார்த்தனா சன்ஸ்ரிவின்ஷென் | 3A | 62 |
| மேரி சோனியா அன்ரன் கொன்சாலஸ் | 2AB | 68 |
| பாபரா சுயானா சுப்பிரமணியம் | A2B | 184 |

**கல்வி உலகின் உச்சங்களைத் தொட எல்லையில்லாத**
**அன்புடன் வாழ்த்துகின்றோம்**

## அன்பு கனிந்த நன்றி .....

வகுப்பறைக் கல்விக்கு அப்பால், நூலாக்க அனுபவக் களமாக வணிகத்தளிர் - 16இன் உருவாக்கப்பணி எமதானது. இந்த பகுதிகளை எமதாக்கி இறைவனை முதற்கண் வணங்குகின்றோம்.

- » தளிருக்கு ஆசியையும் ஆக்கத்துக்கான நிதிவளத்தினையும் ஒதுக்கித் தந்த எம் மதிப்பார்ந்த அதிபர் அருட்சகோதரி அன்ரனிற்றா மாற்கு, உப அதிபர் திருமதி பு.திருஞானசம்பந்தன்
- » எங்களைத் தன் அன்பினால் ஒன்றிணைத்து, தளிரின் உருவாக்க கணந்தோறும் உடனிருந்து வழிப்படுத்திய வணிக மாணவர் ஒன்றிய பொறுப்பாசிரியர் திருமதி கௌரி சண்முகலிங்கம் மற்றும் ஏனைய வணிகத்துறை ஆசிரியர்கள்
- » நிறைந்த பணிகளிடையேயும் எமக்காக நேரம் ஒதுக்கி பயனான நேர்காணலை தளிருக்கு தந்த பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் கு. மிகுந்தன்
- » தங்கள் ஆக்கங்களால் தளிருக்கு வளம் சேர்த்த துறைசார் ஆசிரியர்கள் ,மாணவர்கள்
- » முதல், சிறப்புப் பிரதிகளைப் பெற்று எம்மை ஊக்குவித்த நல்லுள்ளங்கள்
- » வணிகத் தளிரின் அழகு காத்து, உரிய பொழுதில் அச்சிட்டு தந்த அன்றா பிறின்டேஸ்
- » இலைமறைகாயாக வணிகத் தளிராக்கத்துக்காக உடலுழைப்பையும், நேரத்தையும் தந்திட்ட எம் வணிகத்துறை மாணவர்கள்

எல்லோருக்கும் எம் அன்பு கனிந்த நன்றியை சொல்லி
மகிழ்கின்றோம்!

**வணிக மாணவர் ஒன்றியம் 2018**

# வணிகத்தளிர்
VANIKATHTHALIR




வணிக மாணவர் ஒன்றியம்
COMMERCE UNION

Andra Printers- 021 221 7279